1697

Regd. No. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

22 SEP 1931

HIFAZATH - UL - ISLAM

உயர்தர செந்தமிழ் மாத சஞ்சிகை

மலர் 2. | ஹிஜ்ரி 1350 ரபீஉல்ஆகிர் மீ 1931 செப்டம்பர் மீ | இதழ் 9

உள்ளடக்கம் பக்கம்

1. ஸூரத்துல் கத்ரு ... 385
2. நர்யக வாக்கியம் ... 388
3. 'அனாசார பித்அத்துகள்' ... 389
4. 'சமத்துவத்தூத'ரும் தாருல் இஸ்லாமும் 390
5. தொழுகையின் மகத்துவம் ... 393
6. இஸ்லாத்தின் சமத்துவம் ... 396
7. நமது சமூக ஒற்றுமை ... 401
8. சுல்தான் இப்னுஸுஊதின் அரசியல் ... 404
9. தானதருமமும் வீண்விரயமும் ... 408
10. கிறிஸ்துவர்களின் எதிர்ப்பும் நமது கடமையும் ... 412
11. உண்மைத்தியாகம் ... 415
12. ஆண்டவனிடம் ஒப்புக்கொள்ளப்பட்ட மதம் இஸ்லாமேயாகும் ... 417
13. குதுபெ ஜீலானியின் அரும்பெரும் போதனைகள் ... 421
14. மாதர் பகுதி ... 426
15. நஞ்சிறார்கட்கு ... 428
16. யவ்முன்னபீ விழாக்கொண்டாட்டங்கள் 430
17. ஆசிரியர் குறிப்பு ... 432

சென்னை, ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரின் வெளியீடு.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு	...	ரூபா	3	0	0
பினங்கு, சிங்கப்பூர், மலாய் முதலிய வெளிநாடுகளுக்கு	...	,,	4	0	0
தனிப் பிரதி	...	,,	0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரேபக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

48, அங்கப்ப நாய்க்கன் தெரு,

G. T. மதராஸ்.

حفاظة الإسلام مدراس

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம் [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌல்வீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவீ)

மலர் 2	ஹிஜ்ரி 1350 ரபீஉல் ஆகிர் மீ 1931 ஹு செப்டம்பர் மீ	இதழ் 9

2 SEP 1931

ஸூரத்துல் கத்ரு.

(நிகரற்ற) அருளாளனும் (அளவற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் (நான் இதனை ஆரம்பிக்கின்றேன்).

(1) நிச்சயமாய் நாம் அதை (குர் ஆனை) மகத்தான இரவில் இறக்கி வைத்தோம்.

(2) அம் மஹத்தான இரவின் சிறப்பு இன்னதென உமக்குத் தெரியுமா?

(3) அம் மஹத்தான இரவானது ஆயிரம் மாதங்களைக்காட்டினும் மேலானதாகும்.

(4) அதில் அமரர்களும் ரூஹூம் ஒவ்வொரு காரியத்தின்பேரிலும் தங்களது நாயனுடைய கட்டளைப்படி இறங்குவார்கள்.

(5) (அது) ஈடேற்றம் (உடைய இரவாகும்) அது வைகறைப் பொழுதுவரை நீடித்திருக்கும்.

[அதாவது:—மானிடர்கள்உய்த்துணர்ந்து ஈடேற்றம் அடையும் பொருட்டுத் திருவேதமாகிய குர் ஆன் ஷரீபை ஒரு மஹத்தான இரவில் நாம் இறக்கி வைத்தோம். அந்த ஓர் இரவானது ஆயிரம் மாதங்களைக் காட்டினும் மேலானதாகும். மலக்குகளும், ரூஹூம் அதாவது ஜிப்ரீல் (அலை) அவர்களும் தங்களது நாயனது கட்டளைப் பிரகாரம் பற்பல காரியங்களுக்காக அவ்விரவில் பூவுலகின்கண் இறங்குவார்கள். அவ்விரவானது நல்லடியாரை ஈடேறச் செய்யவல்லதாகும். அது சூரியாஸ்தமன காலமுதல் வைகறைவரை நீடித்திருக்கும்]

இவ்வத்தியாயத்தில் "லைலத்துல் கத்ர்" மகத்தான ஓர் இரவின் மாக்ஷிமை விளக்கிக் கூறப்பட்டிருப்பதால் இதற்கு "கத்ர்" (மாக்ஷிமை, மஹத்துவம்) என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்த அத்தியாயம் நாயகம் (ஸல்)மக்கா நகரத்தில் வசித்த காலத்தில்தான் இறக்கப்பட்டதென்று பெரும்பாலோர் அபிப்பிராயப்படுகின்றனர். ஆனால் இது இறக்கப்பெற்றதற்குள்ள காரணத்தைப்பற்றிய விபரங்களைக் கவனிக்குங்கால் நாயகம் (ஸல்.) மதீனாவிலிருந்தபோதுதான் இறக்கப்பட் டிருத்தல் வேண்டும் என்றும் ஊகிக்க இடந்தருகிறது. ஆகவேதான் சிலர் இந்த அத்தியாயத்தை "மதனீ" என்றும் கூறியிருக்கின்றனர்.

இந்த அத்தியாயம் இறக்கப்பட்டதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன:—

ஒருநாள் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் தங்களுடைய தோழர்களிடம் பனூ இஸ்ரா

யில் வர்க்கத்தினரைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தக்கால் ஷம்ஊன் என்பவரைப் பற்றியும் கூறினர்கள். ஷம் ஊன் என்பவர் ஆயிரம் மாதங்கள் வணங்கிக் கொண்டிருந்தா ரென்றும், ஆயிரம் நோன்புகள் நோற்று ரென்றும், இஸ்லாமிய விரோதிகளுடன் யுத்தம் புரிந்தா ரென்றும், இரவு முழுதும் தொழுது வந்தார் என்றும், மிக அதிகமாய் தொழுது வருவதில் பிரசித்தி பெற்றவரென்றும் கூறப்பட்டது. நாயகம் அவர்கள் ஷம்ஊனைப் பற்றிக் கூறியபோது தோழர்கள், "நாயகமே! ஷம்ஊன் போன்று நாங்கள் எவ்வாறு சிறப்படைய முடியும்? எங்களின் ஆயுளோ சுமார் 60 அல்லது 70 க்கு மேல் நீடித்திருப்பதில்லை. ஆயுளில் காற்பாகம் தூக்கத்தில் செலவழிந்து போய்விடுகிறது. உயிர் வாழ்வதற்குரிய வசதிகளைத் தேடுவதிலும், வியாதிகளுக்குள்ளாய் விடுவதிலும், சோம்பேறித் தனமுள்ளவர்களா யிருப்பதிலும் ஆயுளில் பெரும்பான்மையான பாகஞ் செலவழிந்துவிடுகிறது. மனித வாழ்வு இவ்வித மிருக்கும்போது ஷம்ஊன் போன்று நாங்கள் வணக்கம் புரிந்து உயர் பதவியடைய எங்களுக்கு அவகாசமேது?" என்று வினவினர்கள். நாயகம் அவர்களும் அன்னருடைய சந்தேகத்தைக் கேட்டு மனம் நொந்தார்கள். ஆண்டவன் நாயகத்தின் மன வருத்தத்தை நீக்குவதற்காகவே, "உங்களுடைய உம்மத்துகளின் வயது குறைவாகவே இருந்தபோதிலும் நாம் உங்களுக்குச் சங்கை பொருந்திய ஓர் இரவை நன்கொடையாக அளித்திருக்கிறோம். அவ்விரவில் வணக்கம் புரிவது ஆயிரம் மாதங்களின் வணக்கங்களைக் காட்டிலும் மேலானதாகும்" என்று அறிவித்து இந்த அத்தியாயத்தை இறக்கிவைத்தான்.

மற்றுமோர் காரணமும் கூறப்படுகிறது.:— மனிதர்கள் சராசரி 60 முதல் எழுபது வயது வரைக்குமே ஜீவித்திருக்கிறார்கள் என்ற விஷயம் நபிகள் நாயகத்துக்கு (ஸல்.) எடுத்துக் கூறப்பட்டபொழுது அவர்கள் மிகவும் துக்கப்பட்டு "இவ்வளவு குறுகியகாலத்தில் என்னுடைய உம்மத்துகள் என்ன செய்ய முடியும்? கியாமத் (இறுதித் தீர்ப்பு) நாளில் முற்காலத்திய உம்மத்தோர்கள் நீண்ட ஆயுளுள்ளவர்களாய் வாழ்ந்து வந்து நற்கருமங்கள் செய்ததற்குள்ள கூலியைப் பெற்றுக்கொள்ளும்போது, என்னுடைய உம்மத்துகள் சிறிது காலமே வணக்கம் புரிந்ததை யறிந்து வெட்க முறும்படியாகுமே" என எண்ணி மன வருத்தமுற்றக்கால் ஆண்டவன் இவ்வத்தியாயத்தை இறக்கி தனது ரஸூலின் மனத்தைத் திருப்தி செய்வித்தான்.

இவ்விரவானது மற்ற இரவுகளைவிடப் பல வகையிலும் மேலானதாகும். முதலாவதாக, ஆண்டவனது அருள் பாக்கியமானது அந்த நல்லிரவின் ஆரம்பமுதல் இறுதிவரை மனிதர் பால் சுரந்துகொண்டிருப்பதால் அவர்களுக்கு ஆண்டவனது சமுகத்தில் ஒரு பதவி ஏற்பட்டுவிடுகின்றது. வானதூதர்களும் (அர்வாஹ்) புண்ணியாத்மாக்களும், நல்லடியார்களையும் தொழுதுகொள்வோரையுஞ் சந்திப்பதற்காகப் பூமியின்மீது இறங்கிவந்து மனிதரை அணுகுவதால் அந்த இரவில் தொழுது கொள்வதனால் ஏற்படும் இன்பமும் நலனும் மற்ற இரவுகளில் ஏற்படுவதைவிட ஆயிரம் மடங்கு மேலானதாகும். மற்றும் இதே இரவில்தான் குர்ஆன் ஷரீபும் (லவ்ஹ மஹ்பூல்) கார்மானமாக்கப்பட்ட பலகையிலிருந்து இறுதியான அடிவானத்தில் இறக்கிவைக்கப்பட்டது. இதே இரவில்தான் வானதூதர்களான மலக்குகளும் சிருஷ்டிக்கப்பட்டனர். இந்த இரவில்தான் சுவர்க்கமும் சிங்காரிக்கப்படுகின்றது. இந்த இரவுப்பொழுதில்தான் ஹஜ்ரத் ஆதம் (அலை.) அவர்கள் படைக்கப்படுவதற்குள்ள ஆயத்தமும் செய்யப்பட்டது.

ஹஜ்ரத் உதுமானிப்னு ஆஸ் (ரலி.) அவர்களிடம் ஓர் அடிமையிருந்தார். அவர் வருடமுழுதும் கப்பலோட்டுந் தொழிலி லீடுபட்டிருந்தார். அவர்தாம் ஒரு சமயம் கடலில் தோன்றிய காட்சியைக் கண்டு மதிமயங்கிப் போய்விட்டதாகக் கூறினர். கடலினுள்ள உப்புநீர் முழுதும் வருடத்தில் ஓர் இரவில் இனிமையாக ஆய்விடுகிறது என்று அவர் கூறியதைக்கேட்ட ஹஜ்ரத் உதுமான்பின் ஆஸ் (ரலி.) அவர்கள் "அந்த இரவு வரும்போது எனக்குத் தெரிவிப்பீராக. அந்த இரவு என்றைய தினஇரவாகும்?" என்று கேட்டார்கள். "அது ரமலான் மாதம் 27-ந் தேதி இரவாகும்" என்று அவர் கூறினர்.

(லைலத்துல் கத்ர்) மகத்தான இரவு என்பதன் சம்பந்தமாக உலமாக்கள் பற்பலவிதமாக அபிப்பிராயப்பட்டுள்ளனர். பெரும்பாலோர் ரமலான் 27-ந் தேதியே அந்த நல்லிரவு வருகிறது என்று கூறியுள்ளனர். இவர்

ரமலான் மாதம் 20-ந் தேதிக்குப் பின்னுள்ள ஒற்றைப்படையான தேதியில் வரும் இரவு என்று பொதுவாகக் கூறியுள்ளனர். பின்னும் சிலர் 20-ந் தேதிக்குப் பிறகு ஒற்றைப் படையான இரவுகளில் மாறிமாறி நிகழ்கின்றதெனக் கூறியிருக்கின்றனர்.

இந்த மகத்தான இரவை முஸ்லிம்கள் ஆவலுடன் தாமாகவே கண்டுபிடித்துத் தெரிந்து கொள்ளவேண்டுமென்றும், அவ்விரவு ஒரு குறிப்பிட்ட நாளில் நிகழ்கின்றதென்று அறிந்து, அந்த தினத்தில் யாரேனும் பாபச்செயல்களைப் புரிவராயின், நற்காரியங்களுக்கு இருமடங்காகப் புண்ணியம் ஏற்படுவது போலத் தீயகாரியங்களின் பாவமும் இருமடங்காகப் பெருகி விடுமென்றே அவ்விரவைக் குறிப்பாகக் கூறப்படாதிருக்கிறது. அந்த இரவு என்றைய தினமிரவென்பதை யறிந்து நற்கருமங்கள்புரிந்து நாம் உயர்பதவியடைய முயற்சித்தல்வேண்டும்.

முதலாவது திருவசனத்தில் நிச்சயமாய் திருக் குர்ஆனை "லைலத்துல்கத்ர்" மகத்தான இரவில் இறக்கிவைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் "லைலத்துன் முபாரக்கா" மாண்புமிக்க இரவில் இறக்கிவைக்கப் பட்டிருப்பதாக மற்றோரிடத்தில் கூறப்பட்டிருக்கிறது. சிலர் லைலத்துன் முபாரக்காவென்பது லைலத்துல்கத்ரு தானென்று கூறுயிருக்கின்றார்கள். மற்றுஞ்சிலர் லைலத்துன் முபாரகாவென்பது ஷஅபான்மாதம் பதினைந்தாம் தேதி இரவு என்று கூறியுள்ளனர். இதன்படி இரண்டு திருவசனங்களும் ஒன்றுக்கொன்று முரண்படுவதேபோல். காணப்படுகிறது ஷஅபான் பதினைந்தாம் தேதி இரவு திருக் குர்ஆனை இறுதி அடிவானத்துக்கு இறக்கி வைக்கும்படி உத்தரவிடப்பட்டதென்றும், லைலத்துல் கத்ர் இரவில் திருக் குர்ஆனை பூமியில் இறக்கிவைக்கப்பட்டதென்றும் சமாதானம் கூறப்பட்டிருக்கிறது.

இவ்விடத்தில் மற்றொரு சந்தேகமும் ஜனிக்கிறது. அதாவது திருக்குர்ஆன் ஷரீபானது சமயத்திற்கேற்றவாறு 23 வருஷங்களில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள்மீது இறக்கிவைக்கப்பட்டதென்பது வெளிப்படை. இத்திரு வசனத்தில் ஒரே இரவில் திருக் குர்ஆனை இறக்கிவைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இதற்கு "லவ்ஹுல் மஹ்பூலிலிருந்து இறுதி வானத்திற்கு ஒரே இரவில் இறக்கிவைக்கப்பட்டுப் பிறகு அங்கிருந்து சமய சந்தர்ப்பத்திற் கேற்றவாறு ஹஜ்ரத் ஜிப்ரயீல் (அலை.) அவர்கள் மூலியமாக உலகின்கண் இறக்கி வைக்கப்பட்டதென சந்தேக நிவாரணஞ் செய்யப்படுகின்றது.

இதன் மூன்றாவது திருவசனத்தில் மாக்ஷிமை தங்கிய அவ்விரவானது ஆயிரம் மாதங்களைக் காட்டினும் மேன்மையானதா யிருக்குமென்று கூறப்பட்டிருக்கின்றது. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் உம்மத்துகளின் வயதானது குறைவாக யிருப்பினும், இம் மாக்ஷிமை பொருந்திய இரவில் வணக்கம் புரிவதன் பயனுய் அவர்கள் பனூ இஸ்ராயீலிலுள்ள ஷம்ஊனுடைய பதவியைக்காட்டினும் மேலான பதவியை அடைந்துவிட முடியு மென்பதை இத்திருவசனம் மூலம் அல்லா ஹுத்தஆலா தெரிவிக்கின்றான்.

இதன் நான்காவது திருவசனத்தில் அமரர்களும், ரூஹூம் அவ்விரவில் இறங்குவார்கள் என்று கூறப்பட்டிருக்கின்றது. முபஸ்விரீன்களில் பெரும்பாலோர் ரூஹின் கருத்து ஜிப்ரயீல் (அலை) எனக் கூறியிருக்கின்றார்கள். சிலர் நல்லடியார்களின் ஆன்மாவென்றும் கூறியிருக்கின்றனர். வானத்திலுள்ள எல்லா மலக்குகளும் இறங்குவார்களென்பதிலும், ஜிப்ரயீல் அலை ஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்களுடன் ஸித்ரத்துல் முன்தஹாவில் தங்கியிருக்கும் மலக்குகள் மட்டும் இறங்குவார்கள் என்பதிலும் அப்பிராயபேதமிருக்கின்றது.

ஜிப்ரயீல் (அலை.) அவர்களின் தலைமையின் கீழ் மலக்குகள் பூஉலகின்கண் அன்றிரவு இறங்கி நல்லடியார்கள் தங்களுடைய ரப்புக்காகச் செய்யும் வணக்கங்களைக் கண்காணித்துச் சந்தோஷமடைகின்றார்கள்; அவர்களுக்காக பிரார்த்தனையும் புரிகின்றார்கள். அவர்களுடன் கைகோர்த்து முஸாபஹாவும் செய்கின்றனர். ஜிப்ரயீல் (அலை.) அவர்களும் அவ்விரவில் வணக்கம் புரிவோருடன் முஸாபஹாச் செய்கின்றனர். அவர்கள் முஸாபஹாச் செய்வதற்கு அடையாளமாவது வணக்கம் புரிந்துகொண் டிருக்குங்கால் மயிர்க்கால் சிலுசிலுத்துவிடும், ஹிருதயத்தில் ஒருவகை உணர்ச்சி ஏற்பட்டுவிடும், கண்ணீர்வடிய ஆரம்பிக்கும், அதனால் ஒருவித மான சந்தோஷமும் ஏற்படும். (தொடரும்

நாயகவாக்கியம்.

ஐக்கியவாழ்வு.

"ஒருமுமினனவன் இன்னொரு மூமினுக்கு —கட்டிடத்தின் சிலபாகம் வேறு சிலபாகத்தை ஸ்திரப்படுத்திவைக்கும்—'அஸ்திபாரம்' போலிருக்கின்றான்."

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுடைய இத்திவ்வியத் திருவாக்கியத்தில், முஸ்லிம்களுக்குள் நன்கு நிலவிநிலைத்திருக்கவேண்டிய ஐக்கியவாழ்வு, சமூகப்பற்று முதலியன அறிவுறுத்தப்பட்டுள்ளது. தம்முள் ஐக்யப்பட்டு, பரஸ்பரம் உபகாரஞ்செய்து கொண்டு சகோதரர்கள் போன்று வாழவேண்டியது கடமையாகும். நன்னம்பிக்கைக்கொண்டுள்ள ஒரு முஸ்லிம் மற்றொருமுஸ்லிமின் கஷ்டநஷ்டம், சுகதுக்கம் யாவற்றிலும் கலந்து கொள்வதே சகோதரத்வம் பொருந்திய நட்பாகும். கட்டிடத்தின் ஒருகல் எவ்வாறு இன்னொருகல்லுடன் ஒட்டிக்கொண்டு பக்கபலமாயிருந்து கட்டிடத்துக்கு ஸ்திரத்தையும் உறுதியையும் அளிக்கிறதோ, அவ்வாறே ஒருமுஸ்லிம் இன்னொருமுஸ்லிமுடன் நேசமும் ஒற்றுமையும் பூண்டு சமூகவாழ்வென்னும் மாளிகையை ஸ்திரப்படுத்தி நிலைநிறுத்திவைத்தல் அத்தியாவசியமாகும்.

பொதுவாக ஒருசமூகம் முன்னேற்றமும் க்ஷேமமுமடைவதற்கு ஒற்றுமையும், ஐக்கியபாவமும் தான் பிரதானமானதாகும். ஆகவேதான், இஸ்லாத்தில் சமூக ஒற்றுமை மிகவும் அவசியமானதென வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒற்றுமையும் பரஸ்பர ஒத்துழைப்புமில்லாத சமூகம் முன்னேற்றமடைந்து இதர சமூகங்களைகாட்டினும் சிறந்துவிளங்குவது முடியாது.

சமரஸத்தைப்பற்றிய இன்னொரு நாயகத் திருமொழியில் "ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமுக்கு 'கண்ணாடி' போலாவான்" என்று கூறப்பட்டுள்ளது. இதன் தாத்பரியம், முஸ்லிம்கள் தமக்குள் பரஸ்பர வாழ்வு பூண்டு, தன் சகோதர முஸ்லிமிடம் ஏதேனும் குற்றங்குறை காணப்படின் நிலக் கண்ணாடியைப் போல் உள்ளவாறுள்ளபடி எடுத்துக்காட்டி, சீர்திருத்த வேண்டுமென்பதாகும். இன்னும் முஸ்லிம்கள் தமக்குள் 'ஸ்படிகம்' போன்று களங்கமற்ற உள்ளத்தினராயிருத்தல் வேண்டுமென்பதுவுமாகும். எனவே அழுக்காறு, குரோதம், விரோதம், நயவஞ்சகம்முதலியன முஸ்லிம்களது உள்ளத்தில் கிடந்துழலல் கூடாது.

இன்னமும், "எதுவரை உங்களில் ஒருவன் தனக்கு விரும்பிக்கொள்வதையே தன் இதர சகோதரனுக்கும் விரும்பமாட்டானோ அதுவரை பூரணமான ஈமான் கொண்டவனாகான்" என்பதும் நாயகத் திருமொழிகளில் ஒன்றாகும். முஸ்லிம்கள் தனக்கொன்று, பிறர்க்கொன்று என்று பாரபக்ஷங் கொள்வது கூடாத காரியமாகும். தான் நற்காரியத்தை விரும்பிப் புண்ணியஞ் செய்வதைப் போல் பிறரையும் அப்புண்ணிய காரியத்தின் பக்கல் அழைத்துச் செல்லல்வேண்டும். தீய காரியத்தினின்று தான் விலகி ஒழுகுவதற்கொப்ப, பிற முஸ்லிம் சோதரர்களையும் அத்தீமையினின்றுந் தடுத்து நேர்வழிக்குக் கொண்டுவரவேண்டும். இவ்வாறே, தான்உண்பதைப்போன்றே பிறரையும் உண்ணச்செய்வதும், தான் உடுப்பதைப் போன்றே தன் சகோதரரையும் உடுத்தச் செய்வதும் உண்மையான மூமினின் அடையாளமாகும். ஒவ்வொரு காரியத்திலும் தம் முஸ்லிம் சோதரருடன் பரஸ்பர வாழ்வு கொள்ளல் அத்தியாவசிய மானதாகும்.

மேலும், 'எவனொருவன் தன் நாவாலும் கரத்தாலும் இதர மூமீனுக்கு நன்மையுண்டாகும்படி செய்கின்றானோ அவனே உண்மை முஸ்லிமாவான்' என்பது நாயக வாக்கியமேயாகும். எனவே ஒரு முஸ்லிமை இன்னொரு முஸ்லிம் வசைமொழி கூறி தூஷிப்பதோ, கரத்தால் தீங்கிழைத்து துன்பப்படுத்துவதோ பாபமான கொடுங்காரியங்களாகும். ஒருவர்க்கொருவர் விரோதங்கொண்டு வெறுத்துப் பேசாமலும், நேசம் கொள்ளாமலுமிருப்பதும் கூடாதகாரியமென நம்மார்க்கத்தில் விளக்கப்பட்டுள்ளது. ஒரு மூமினானவன் தனதுசகோதரனை மூன்றுநாளுக்கு மேல் வெறுத்திருப்பது கூடாத செயலாகும் என்று நாயகம் (ஸல்.) அறிவுறுத்தியுள்ளார்கள்.

———

حفاظة الاسلام مدارس

அனுசார பித்அத்துகள்.

சுத்தசத்திய இஸ்லாம் மதமானது புத்திக்கும் யுத்திக்கும் மிகமிகப் பொறுத்தமான சன்மார்க்க மென்பது உலகமேற்கும் உண்மையாகும். அதின் ஒவ்வொரு அனுஷ்டானமும் ஆழ்ந்த கருத்துகளை யுடையதாய் அமைந்திருக்கிறது. சன்மார்க்கத்துக் குரிய ஒவ்வொரு காரியங்களைப்பற்றியும் இஸ்லாத்தின் அதிபர் ரஸூல் (ஸல்.) அவர்கள் கூறியுள்ளார்கள். அதனைப் பின்பற்றவேண்டியது யாவர்மீதும் கடமையாகும். அவ்வாறு பின்பற்றி நடக்கும்படி திருக்குர்ஆனும் கட்டளை யிடுகின்றது. நபிகள்நாயகம் (ஸல்.) அவர்கள் அனுஷ்டித்துக் காட்டிய வழிமுறையை திரஸ்கரித்து நடப்பவர்கள் தீய வழியில் சென்றுழல்வரென்பது நிச்சயம். சொற்களாலும், செயல்களாலும், நிர்ணயங்களாலும் எம்பெருமானார் (ஸல்.) அவர்களின் அடிச்சுவட்டையே பின்பற்றி நடக்க வேண்டியது ஒவ்வொருவருடையவும் கடமையாகும். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் நன்னடத்தையென்னும் ஸுன்னத்துக்கு நேர்மாற்றமானது பித்அத்தாகும். நாயகம் (ஸல்.) அவர்களது காலத்தில் கொடிய பித்அத்துகள் இல்லாதிருக்கக் கூடுமாயினும், பழைய பழக்க வழக்கங்களை அனுசரித்து முஸ்லிம்களிடையேயும் சிற்சில அனுசாரங்களிருந்து வந்தன. அவைகளைக் களைந்தெறிவதில் நபிகணாயகம் (ஸல்.) அதிகப்பிரயாசை எடுத்துழைத்து வந்தார்கள். "நூதனக்கிரியைகள் (பித்அத்) அடங்கலும் வழிகேடுகளாகும்; வழிகேடடங்கலு நரகத்திலாகும்" என்று அடிக்கடி கூறிக்கொண்டிருப்பார்கள். நபிகள்நாயகம் (ஸல்) அவர்களின் நல்லனுஷ்டானங்கட்கு மாற்றமாய் புதிதாக உற்பத்தி பண்ணப்பட்டிருக்கும் நூதனக் கிரியைகள் வழிகெட்டனவாகும். மேலும், இவ்வழிகேட்டைப்பின்பற்றி நடப்பவர்களை அச்செயல்கள் நரகில்கொண்டுபோய் சேர்த்துவிடும்" என்பது அதன் கருத்தாகும்.

நிற்க. மத்ராஸாக்கள் ஸ்தாபிப்பது, சத்திரம் கட்டிவைப்பதுபோன்ற புண்ணிய காரியங்கள் நாயகமவர்களுடைய காலத்தில் ஏற்பட்டிராத புதிய காரியங்களாயினும் இவைகளினால் நன்மைகள் உண்டாவதாயிருப்பதால் இதற்கு "பித்அத்தெ ஹஸனா" என்று கூறப்பட்டிருக்கிறது. மேலே ஹதீஸில் கூறப்பட்ட நூதனக்கிரியையின் கருத்து கெட்ட காரியங்களாகும். இதற்கு "பித் அத்தே ஸய்யிஆ" என்று கூறப்பட்டிருக்கின்றது.

முஸ்லிம் சமூகம் வெகுகாலம்வரை தீய பித் அத்தென்னும் கொடிய நோயால் பீடிக்கப்படாமலிருந்து வந்தது. நாளடைவில் பற்பல அனுசார பித்அத்துகள் மக்களிடையே வந்து நுழைத்துவிட்டன. இவைகளைக் கெல்லி யெறிந்து சீர்திருத்துவதில் மகான்களாலும் பெரியோர்களாலும் அரும்பெரும் பிரசாரங்கள் புரியப்பட்டு வந்தபோதிலும், அக் காரியங்கள் ஜனங்களிடையே வேரூன்றிவிட்டிருந்தமையால் அவைகளை அறவே ஒழித்துவிடச் செய்ய முடியவில்லை.

கூடுகள் எடுப்பதும், கொடிகள் ஏற்றுவதும் கொடிய பித்அத்தான காரியங்களென்பது யாவரு மறிந்ததே. குதுபெஜீலானீ

(ரலி.) அவர்கள் இறந்த இந்த இம்மாதத்தில் பற்பல ஊர்களிலும் அவர்களது பெயரால் கொடிகளை ஏற்றுகின்றனர்; கூடு எடுத்து ஊர்வலஞ் சுற்றுகின்றனர்; கூடு கொடியேற்றங்கு மரியாதையும் சங்கையும் செய்கின்றனர். அதற்கு நேர்ச்சை, காணிக்கைகளையும் நிறைவேற்றுகின்றனர். அவைகளினால் நன்மையுண்டாகு மென்றுங் கருதுகின்றனர். இதனால் ஷிர்கும் இறைவனுடன் இணைவைக்கும் என்னும் பெரும் பாபத்துக்கு ஆளாகி விடுகின்றனர். அந்தோ பரிதாபம்! ஷிர்க்கு என்றால் இன்னதென்பதைக் தெரிந்துகொள்ள வேண்டாமா? "ஷிர்க் என்னும் பாவத்தை யான் சிறிதும் மன்னித்துக் கொள்ள மாட்டேன்" என்று அல்லாஹு தஆலா தன் திருக்குர்ஆனில் கூறியிருக்கின்றான். மேலும் கவ்துல் அஃலம் குதுபெஜீலானீ அவர்களுடைய உபதேசங்களை உணர்ந்த எந்த முஸ்லிமும் அவ்வுத்தம மகானின் பெயராலேயே அத்தகைய ஷிர்க்கான கெட்ட காரியத்தைச் செய்யத் துணிவரோ?

கூடு கொடியேற்ற வைபவங்களுடன் வீண் விளையாட்டுகளும், மேளதாளக் கொட்டு வாத்தியங்களும் ஏற்பட்டுக்கொள்ளுகின்றன. இவைகள் நம்மார்க்கத்திற்கு முற்றுங் கூடாத கொடிய ஹரா மென்பதில் சந்தேகமில்லை. இதுவுமல்லாமல் இவ்வாறு கூடி கொடியேற்றங்கள் நிகழ்வுறும் இடங்களில் ஏராளமான பணச்செலவுகளும் ஏற்பட்டு வீண் விரயமாகின்றது. திரவியத்தை இங்ஙனம் வீண் விரயம் பண்ணிய குற்றத்துக்கும் அத்தகைய காரியத்தைப் புரிவோர் ஆளாகின்றனர். இவ்வாறே மற்ற ஒலியுல்லாக்களின் தர்காக்களிலும் இவ்விதக் கெட்டகாரியத்தை ஒரு சில முஸ்லிம்கள் செய்துவைத்து பல்வித பாபங்கட்கு ஆளாகின்றனர்.

இவ்வித வைபவங்களைக் கண் காக்ஷியாக காண்பதற்காகப் பெண்மணிகளும் பாமரர்களும் ஏராளமாக கூடுகின்றனர். இங்ஙனம் நம் இஸ்லாமியப்பெண்கள் கோஷாமுறையை விடுத்து அலங்கோலமாய் ஆடவர் கூட்டத்தினிடையே அலைந்து திரியவுந் துவங்கிவிடுகின்றனர். இதனால் முஸ்லிம் பெண்கள் எத்தனைப் பாபகாரியங்களுக்கு இலக்காகின்றனரென்பதை ஒவ்வொருவரும் தம் பகுத்தறிவைக்கொண்டு யூகித்துப் பார்க்கவேண்டியது அத்தியாவசியமாகும்.

எனவே, ஆங்காங்குள்ள உலமாக்களும், பிரமுகர்களும், அறிஞர்களும் ஒன்றுசேர்ந்து ஆத்மார்த்தத்தைக் கெடுக்கும் இக்கொள்ளை நோயைத் தடுத்து ஒழித்து சீர்திருத்துவதற்குப் பெருமுயற்சி செய்யவேண்டும். இன்னும் அவ்வவ்விடங்களிலுள்ள சங்கங்களும் இந்நல்ல காரியத்துக்காக முனைந்து பாடுபட்டுச் சமூக சீர்திருத்தம் புரிவது அவைகளின் அவசியக் கடமையாகும்.

சமத்துவத்தூதரும் தாருல் இஸ்லாமும்.

பக்கா அஹ்மதீ யார்?

சோதரீர்! இவ்வருடம் ஈபீஉல் அவ்வல் மாதம் யவ்முன்னபீயில் விநியோகிப்பதற்கென்றே "சமத்துவத்தூதர்" என்னும் நூல் நமது "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தாரால் வெளியிடப்பட்டதென்பது யாவரு மறிந்தவிஷயம். அது லாஹூர் வீரத்

கமிட்டியாரால் வெளியிடப்பட்ட உர்தூ நூலின் மொழிப்பெயர்ப்பாகும். அதின் முதற்பாகம் அல்ஹாஜ் லார்டு ஹெட்லி அல் பாரூக் அவர்களால் எழுதப்பட்டதாகும். பிற்பாகம் காஜீ அப்துல் மஜீத் கர்ஷீசாஹிப் அவர்களால் எழுதப்பட்டதாகும். லாஹூர் வீரத் கமிட்டியார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் உண்மையான சரிதை, குணாதிசயங்கள், நல்லொழுக்கம் முதலியவற்றில் ஆண்டுதோறும் முறையே ஒவ்வொரு விஷயத்தைப்பற்றி எழுதி உலகத்திலுள்ள சகல பாஷைகளிலும் மொழிபெயர்த்து உலக முற்றும் பரவச்செய்து நபி ஜனன தினத்தின்று எங்கும் ஏகமாய் படித்துணர வேண்டுமென்ற கைங்கரியத்தை மேற்கொண்டவர்களாவர். இவ்வாறு செய்வதானது லோகதயாளர் (ஸல்.) அவர்களின் சற்குணங்கள் உலகமனைத்தும் பரவுவதற்கு மிக மிக பொறுத்தமான இயக்கமென்பது வெளிப்படை. பற்பல பாகங்களிலுமுள்ள சங்கங்களும், பொது ஸ்தாபனங்களும், சபைகளும், அஞ்சுமன்களும்சொஸைட்டிகளும், லாஹூர் வீரத் கமிட்டியாரின் வேண்டுகோளுக்கிணங்கி அப் பிரசுரத்தை முக்கியமான பாஷைகளில் மொழி பெயர்த்து வெளியிட்டுபரத்தி வருதோடு, சகல பாஷைகளிலும் அது மொழி பெயர்க்கப்பட வேண்டுமென்றமுயற்சிகளும் செய்து வருகின்றார்கள். அதனை யனுசரித்து நமது ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தினர், தமிழ் பாஷையில் அப்பிரசுரத்தை மொழிபெயர்த்து தமிழ் நாடு முழுவதிலும் வினியோகித்து வருகின்றனர்.

சென்ற இரண்டு வருடங்களாக லாஹூர் வீரத் கமிட்டியார் மௌலானா கர்ஷீ சாஹிப் அவர்களால் எழுதப்பட்ட வீரத் பிரசங்கத்தையே அச்சிட்டு வெளிப்படுத்தி வந்தனர். இவ்வருடம் அவ்வித பிரசங்கத்தை இதர பிரபலஸ்தர்களில் ஒருவரின் மூலமாய் எழுதச் செய்யவேண்டுமென்று முடிவு செய்தனர். அதற்கேற்ப அல்ஹாஜ் லார்டு ஹெட்லீ அவர்களை கொண்டு இவ்வருடத்துக்குரிய வீரத் பிரசங்கம் எழுதச்செய்து வெளியிட்டார்கள். அல்ஹாஜ் அவர்களுடைய பிரசங்கம் சுருக்கமாயிருந்ததால் அதன் அனுபந்தம் கர்ஷீ சாஹிபால் எழுதப்பட்டு அத்துடன் சேர்க்கப்பட்டு வெளியாயிற்று. நாயகம் (ஸல்.) அவர்களுடைய திருவாழ்க்கையில் மிளிரும் சமத்துவம், சகோதரத்துவம், உலோகோபகாரம் ஆகியவற்றை இதர மதஸ்தர்களும் படித்துணர வேண்டுமென்ற கருத்துடன் சமத்துவம் சகோதரத்துவம் முதலிய தத்துவங்களை விளக்கி இப்பிரசுரம் எழுதப்பட்டுளது. இதை யொட்டி, அழுக்காறு கொண்ட தாருல் இஸ்லாம் பத்திரிகை 7-8-31 லும் 14-8-31 லும் வெளியான பிரதிகளில் இருகுறிப்புரைகளை வெளியிட்டிருக்கிறது. அதில், லார்டு ஹெட்லி ஒருபக்கா அஹ்மதிய ரென்றும், அவர்களது நூலை பிரசுரிப்பதால் அஹ்மதிய இயக்கத்தையும் கொள்கைகளையும் போற்றுவதாகுமென்றும் குறிப்பிட்டிருக்கிறது.

லார்டு ஹெட்லி அவர்களோ தமது சிறு பிராயமாகிய பத்தாவது வயதிலிருந்தே இஸ்லாத்தை ஆராய்ச்சிசெய்து நடந்துவந்தவரென்று தா. இ பத்திரிகையே 14-1-28 ல் எழுதியிருக்கின்றது. லார்டு ஹெட்லி, காஜா கமாலுத்தீனுடைய அன்பரென்பது யாவரும் அறிந்த விஷயமே. அவரது மூலியமாய் இஸ்லாத்தின் கலா ஞானங்கள் பலவற்றைக் கற்று மிருக்கலாம். ஆனால் அவர்கள் மிர்ஜாகுலாம் அஹ்மத்காதியானியை மஸீஹ் யென்றும் மஹ்தியென்றும் ஒப்புக்கொள்ளல், நரகம் முடிவடைந்துவிடு மென்றும் முஷ்ரிக்கின்களும் சுவர்க்கானந்தத்தை அனுபவிப்பார்களென்றும் கூறுதல், ஈஸா (அலை) அவர்களை யூஸுபுன்னஜ்ஜாரின் குமாரரென்றும், சிலுவையில் அறையப்பட்டா ரென்றும் சொல்லல் போன்ற அஹ்மதியாக்களின் கொள்கைகளை ஒப்புக்கொண் டிருப்பதாக அவர் கூறவில்லை. மேலும் லார்டு ஹெட்லீ அவர்கள் அஹ்மதியா இயக்கத்தில் ஈடுபடாதிருந்த காரணத்தாலேயே அவர்களை 1927-ம் வருடம் டிசம்பர் மாதம் 25, 26, 27-ந் தேதிகளில் டில்லியில் நடந்த தப்லீக் மகா நாட்டுக்கு தலைமை வகிக்கும்படி ஸுன்னத் துவல் ஜமாஅத்து முஸ்லீம்கள் கோரிக்கொண்டார்கள். மேற்கண்ட மகாநாட்டிலும் அவர்கள் அரிய உபன்னியாஸமும் புரிந்தார்கள். அதைப் பற்றி சென்ற வருடம் ஆகஸ்டு மாதம் வெளியான நம் ஹிபாஜாத்துல் இஸ்லாம் பத்திரிகை தன் தலையங்கத்தில், மேற்படி மகாநாட்டில் லார்டு ஹெட்லி அவர்கள் புரிந்த உபன்னியாஸத்திலிருந்து

முக்கியாம்ஸங்களை எடுத்தெழுதி போற்றி யிருக்கிறது. பா. தா. அப்பொழுதெல்லாம் மௌனமா யிருந்து வந்ததின் காரணம்தான் தெரியவில்லை.

லார்டு ஹெட்லீ அவர்கள் இஸ்லாத்தின் தத்துவங்களையும், நபிகணாதர் (ஸல்) அவர்களின் குணாதிசயங்களையும் உள்ளாவுள்ளபடி மேனாட்டில் பிரசாரம் செய்து வந்தார்கள். அதனை யனுசரித்து அவர்கள் மூலமாக இவ்வருஷத்திய வீரத் பிரசங்கத்தை எழுதும்படி கோரப்பட்டிருந்தது. அவ்வாறே அவர்கள் எழுதிய பாகம் இது போழ்து வெளியிடப்பட்டுள்ளது. இதில் ஏதேனும் அஹ்மதியக் கொள்கையின் வாடையேனும் இருப்பதாக பா. தா. வும் ஹாபிஜ் பாகவியும் நிரூபிப்பார்களா? அவ்வாறு ஒன்றும் அதில் காணப்படாதிருக்கும் நிலைமையில் அவ்வியாஸத்தைப் பிரசுரித்ததைப்பற்றி, பிரசுரித்தவர்களை அஹ்மதியக் கொள்கையை பிரசாரம் பண்ணுகிறவர்களென்று வெட்கமின்றி மேற்படி ஆசிரியர்கள் கூறத் துணிந்தது விந்தையினும் விந்தையே. லார்டு ஹெட்லீ அவர்களை தா. இ. ஆசிரியர் எவ்வாறு மதிக்கிறார்களென்பது புலப்படவில்லை. வீரத் பிரசங்கத்தில் சர்குரூயன்ஜே, லேன்போல் போன்ற பிற மதஸ்தர்கள் நமது நபிகணயத்தைப் போற்றி வரைந்துள்ள புகழுரை வியாஸங்கள் வீரத் பிரசங்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருப்பதை ஆக்ஷேபிக்காத தா. இ. ஆசிரியர்கள், ஜனாப் ஹெட்லீ பிரபுவின் புகழுரையை நாம் பிரசுரித்ததை முன்னிட்டு ஆக்ஷேபிக்க முன் வந்துவிட்டதுதான் ஆச்சரியத்திலும் பேராச்சரியமாயிருக்கின்றது. அப்படியானால் அன்னவர்களைவிட நம் லார்டு ஹெட்லீயை கேவலமாய் மதிக்கின்றனர்போலும்! பாவம் என் செய்வார்கள்! ‘‘பா. தா. பக்கா அஹ்மதீ. அவரது நூற்கள் அஹ்மதியாக்களின் நூற்களின் மொழிபெயர்ப்பாகும். அதில் அஹ்மதியக் கொள்கைகள் மலிந்து கிடக்கின்றன’’ என்னும் விஷயங்கள் தக்க ஆதாரங்களோடு ஏற்கெனவே நிரூபிக்கப்பட்டுப் போயிற்று. அதை மறுக்க பா. தா. வுக்கு ஒரு வழியும் கிடைக்கவில்லைபோலும்! ‘‘காதியானி அஹ்மதியக் கொள்கைகளை வேரறுக்கும் அஸ்திபாரத்தைகொண்டு நிறுவப்பட்டிருக்கும் ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாருங்கூட லார்டுஹெட்லீயின் வியாஸத்தை மொழிபெயர்த்துவிட்டனர். அவர்கள் ஒரு பக்கா மிர்ஜாயியின் சிஷ்யராவர்.’’ என்று கூறத் துணிந்துவிட்டார். இது எத்துணை தூரம் முரண்பட்டக் கூற்றென்பதை விஷய ஞானமுள்ள நேயர்கள் எளிதில் உணர்ந்து கொள்வர்.

தா. இ. ஆசிரியர் எழுதியிருக்கும் மேற்படி குறிப்பிலிருந்து இரண்டு விஷயங்களை செவ்வனே தெரிந்துகொள்கின்றோம். முதலாவது இச்சென்னையம்பதியில் தம்மை பக்கா அஹ்மதியென்று பகிரங்கப் படுத்திக்கொண்டிருப்பவர் ஜனாப் மலங்கு அஹ்மத்பாஷாசாஹிப் பீ. எ. என்று குறிப்பிட்டது.

மலங்கு அஹ்மத் பாஷாசாஹிபவர்கள் பா. தா. வின் அத்தியந்த நண்பரும் தா. இ. யின் பழைய போஷகரென்பதும் யாவரும் அறிந்த விஷயம். அவருடைய அஞ்சுமனே இஷாஅத்தே இஸ்லாம் சார்பாகத்தான் அஹ்மதிய கொள்கை நிரம்பிய ‘இயேசுவின் இரகசியம்’ என்ற நூல்வெளியிடப்பட்டது. என்று பா. தா. குறிப்பிடுகின்றார். ‘இயேசுவின் இரகசியம்’ அந்தபக்கா அஹ்மதீயின் சங்கத்திலிருந்தே தான் வெளியிடப்பட்டதென்பது செவ்வனே வெளியாகின்றது.

இரண்டாவது காஜாகமாலுத்தீன் சாஹிபை மிர்ஜாகுலாம் அஹ்மத் காதியினியின் சிஷ்யரென்று தா. இ ஆசிரியர்கள் கூறுகின்றனர். காஜா கமாலுத்தீன் மிர்ஜாயீ என்பதை ஆசிரியர்களே ஒப்புக்கொண்டுவிட்டனர். பாதா மேற்படி மிர்ஜாயீயான காஜா சாஹிபிடம் லண்டனுக்குச் சென்று படித்துக்கொண்டு வந்ததும், லாஹூர் காதியானீ முஹம்மத் அலீ எம். எ. விடஞ் சென்று கற்றுக்கொண்டு வந்ததுமான விஷயங்களை இத்தமிழ்நாட்டின்கண் வெளியிட்டு பிரசாரம் செய்த காரணத்தினாலேதான் அவரை அஹ்மதீ யென்று முஸ்லிம்கள் கூறுகின்றனர். எனவே பக்கா அஹ்மதீ யாரென்பதை நேயர்களே உணர்ந்து கொள்வார்களாக.

தொழுகையின் மகத்துவம்.

(கெய்ரோவிலிருந்து வெளிவரும் "அல்மு அய்யித்" என்னும் பிரபலப் பத்திரிகையில் அல்லாமா ஷெய்கு முஹம்மத் ரிஜ்கு என்னும் பெரியாரால் வரையப்பெற்ற அரிய வியாஸமொன்று "தொழுகையின் மகத்துவம்" என்னும் தலையங்கத்தின் கீழ் வெளி வந்துள்ளது. அப்பெரியார் அவ்வியாஸத்தில், ஐரோப்பாவின் பிரபல கிறிஸ்து கலா வல்லுனர்கள், நியாயமான முறையில் நமது இஸ்லாமியத் தொழுகையைப்பற்றிக் கூறியுள்ள திவ்வியமான அபிப்பிராயங்களை ஒருங்குத் திரட்டி வெளியிட்டுள்ளார்கள் அவ் வியாஸத்தை நாம் நமது நேயர்களின் பார்வைக்காக ஈண்டு எடுத்தெழுதியுள்ளோம்:—)

தொழுகையின் மகத்துவம்.

ஐரோப்பா தேசம் இதுகாலை வாழ்க்கையின் முன்னேற்றமும் நாகரிக அபிவிருத்தியும் அடைந்த நாடென்று போற்றப்படினும், மதாசாரத்துறையில் கவனிக்கப் புகுங்கால் அந்நாடு நாஸ்திக வாதத்துக்கு மகத்தானதோர் உறைவிடமாகக் காணப்படுகின்றது. இதுகாலை இவ்வுலகத்தின்கண் எவ்வளவு நாஸ்திகத் தன்மைகள் விருத்தியாகி யிருக்கின்றனவோ அவை யாவற்றிற்கும் ஐரோப்பாவே பிறப்பிடமாகுமென்று கூறுவது மிகையாகாது. ஆயினும் அங்கும் ஆண்டவனின் மகாத்மியம் நிலைபெற்று இலங்குவதையும் கண் கூடாய்க்காணலாம். எவ்வாறெனின், நாஸ்திகத்தன்மை மலிந்த ஸ்தலமான அந்த ஐரோப்பா தேசத்தின்கண், தங்கள் முழு ஆதரவைக்கொண்டு இறைவனது சத்தியத்தையும், உண்மையையும் ஒப்புக்கொண்டு சன்மார்க்க ஆசாரத்தைப் போற்றுவதில் சதா உழைத்துக் கொண்டிருக்கும் உத்தமர்களும் இருக்கின்றார்கள். இன்னோரது பிரதான நோக்கம், இதுகாலை மனிதர்களிடையே தோன்றியுள்ள எதேச்சாதிகாரமான மனப்போக்குகளையும் தடுமாற்றங்களையும் ஒழித்து, இறைவனது சத்தியத்தை நிலைநாட்ட வேண்டுமென்பதாகும்.

நாம் ஈண்டு போற்றும் ஐரோப்பிய அறிஞர்கள், ஒருவாறு சுயேச்சையான போக்கில் இருந்துங்கூட சன்மார்க்க ஆசாரத்தின் அவசியம், மேன்மை இவைகளை ஆதரித்தும், ஆண்டவன் உண்டென்பதை அங்கீகரித்துமுள்ள உத்தமர்களே யாவர். இப்படிப்பட்ட நியாயவான்களில் சில அறிஞர்கள் நம் "இஸ்லாமியத் தொழுகை" யைப்பற்றி வெளியிட்டிருக்கும் உத்தமமான அபிப்பிராயங்களை ஈண்டு எடுத்தோதுவோம். நாலுத் திசையிலும நாஸ்திகப்புயல் அடித்துக்கொண்டும், சத்திய ஈமானின் தீபம் அசைவுற்றுக் கொண்டுமிருக்கும் இக்காலை மேற்படி அபிப்பிராயங்கள் மிகவும் அத்தியாவசியமாகும்.

அபிப்பிராயங்கள்,

(1) கண்ணியமிக்க தத்துவ சாஸ்திரியான ரெவரண்டு "லேபான்" என்னும் அறிஞர் நம் இஸ்லாமிய தொழுகையின் மேன்மைகளைப்பற்றி நல்லபிப்பிராயம் வெளியிடுங்கால் பின்வருமாறு எழுதியுள்ளார்.—

"நான் அநேக விடுத்தம் இஸ்ரவேலர்களின் வணக்கத்தையும், கிறிஸ்துவர்களின் ஜப முறையையும், இஸ்லாமிய தொழுகையையும் ஆராய்ந்துள்ளேன். எனவே, இறுதியாய் இஸ்லாமியத் தொழுகைதான் மிகமிகச் சிறந்த வணக்கமென்று தெள்ளற விளங்கிகொண்டேன். ஏனெனின், இஸ்லாமிய தொழுகையில்தான் எல்லாவித வணக்கங்களும் பரிபூர்ணமாய் அமையப்பெற்றுள்ளன. இத்தொழுகையில்தான் ஆண்டவனின் ஸ்தோத்திரம், புகழ், தூய்மை, மகாத்மியம், பிரார்த்தனை, தாழ்மையான கோரிக்கை யாவுமிருப்பதோடு, அடியானின் விநயமான அடிபணியுந் தன்மையும் இனிது அமைந்து வெளியாகின்றது. நிற்க, யான் வெள்ளிக்கிழமை தோறும் பிரதானமாய் இஸ்கந்திரிய்யா நகரின் பிரபல ஜாமிஃ மஸ்ஜிதுக்குள் இஸ்லாமியத் தொழுகையின் வனப்பை

யும் கண்ணியத் தோற்றத்தையும், 'கண்ணுறுவதற்காக வென்றே போவதுண்டு; அதுகாலை, மஸ்ஜிதின் கதிப் சாஹிபவர்களால் நடத்தப்படும் மதப் பிரசங்கத்தின் மேன்மை, ஜனங்கள் அணிவகுத்திருப்பதின் ஒழுங்கு, ருகூஉ, ஸுஜூது முதலிய அனுஷ்டானத்தின் அமைப்பு, அவற்றின் உட்கருத்து ஆகியவைகளை உற்றுணர்ந்து பார்க்குங்கால் அவை எனது மனத்துள் பெரும் வியப்பை உண்டு பண்ணிக் கொண்டிருக்கும். இதைக் கண்ணுற்ற யான் இஸ்லாம் மதம் என்னை அன்புடன் அழைக்கிறதென்றும், அத்தொழுகையிலமைந்துள்ள தெய்வீகத்தன்மை யமைந்த தோற்றமானது எனது ஆத்மாவை வசீகரித்துக் கொண்டதென்றும் யான் எண்ணிக் கொள்வேன்'' (எ லெக்ச்சர் ஆன் ரெலிஜென், என்னும் நூல் 46-ம் பக்கம்.)

(2) ரோமாபுரியின் பிரபல மதப் பிரசங்கியாரான ஸெனட் ஹேலர் என்னும் அறிஞர் "திபிரேயர்'' என்ற தமது நூலில் (இஸ்லாமியத்தொழுகையின்மேன்மையைப்பற்றி) பின்வருமாறு எழுதியுள்ளார்:—

"யான் எங்கெந்த இஸ்லாமிய நாடுகளின் சுற்றுப்பிரயாணம் செய்தேனோ அவற்றிலுள்ள வணக்கஸ்தலங்களையெல்லாம் அவசியமாகப் போய்ப் பார்ப்பதுண்டு. இந்தத் துறையில் யான் எனது அனுபவத்தைக்கொண்டு இஸ்லாமியத் தொழுகையையே மிகமிகச் சிறந்த வணக்கமென்று தெரிந்து கொண்டேன். ஆண்டவனின் உண்மையான பக்தனொருவன் தன்னுடைய வியவகார வேலைகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு ஆண்டவனின் திருப்தியை வேண்டி அவ்வாண்டவனை மனமாரவாயார துதித்துக்கொண்டிருக்குங்கால் அவனது ஆன்மாவானது தெய்வீக உணர்ச்சிப் பெறுமலிருக்கமுடியுமா? நிச்சயமாக அப்பக்தன் தனது ஆண்டவனிடம் மிகவும் நெருங்கியவனாய் விடுவதுடன் தனது சக்தியாவற்றையும் அடக்கிக்கொண்டு எல்லாம் வல்ல ஏக இறைவன்முன் பணிந்து விடுகின்றான். இவ்வாறு செய்வதால் அவ்வடியானின் ஆன்மா பரிபக்குவமடைவதுடன் அவனது உள்ளம் தூய்மையும் பெற்று விடுகின்றது. இஸ்லாமியத் தொழுகையில் சரீரப்பியாசத்தின்முறைமையும் அமைந்திருப்பதால் சரீர சக்தியும் அதிகரிக்கின்றது. எனவே, தொழுகை நிறைவேற்றுபவர்கள் பலஹீனர்களாகவோ, சோம்பலுடையவர்களாகவோ இருந்ததை யான் பார்த்ததில்லை. (தொழுகைக்காக) அதிகாலையில் விழிப்பது அற்புதமான பிரயோஜனங்களை அளிக்கின்றது.''

(3) கிறிஸ்து மதப்போதகர்-பாதிரியான ரெயூரன் மூல்லர் என்னும் பேரறிஞர் இஸ்லாத்தின்மீது குரோதமுடையவரே எனினும், அவர் இஸ்லாமியத்தொழுகையைப்பற்றி கூறியிருக்கும் அபிப்பிராயம் பின்வருமாறு:—

"ஏதேனும் குரோதங்கொண்டு, விஷயத்தை சாதிப்பது மிகவும் இலேசானதாகும். ஆனால், உண்மையான விஷயத்தைக்கூறுவது மிகச் சிரமமானதாகும். யான் இந்த சிரமமான வழியின் பக்கமே செல்ல விரும்புகின்றேன். யான் அநேக முறை எனது முஸ்லிம் நேயர்களுடன் கலந்து சம்பாஷணை புரிந்துள்ளேன்; அவர்களுடைய கொள்கைகளை நன்கு ஆராய்ச்சி செய்துள்ளேன். பதின்மூன்றரை நூற்றாண்டு கடந்து போயுங்கூட அம்முஸ்லிம்கள் தங்கள் திருத்தூதர் (முஹம்மத் ரஸூல்-ஸல்) அவர்களுடைய அத்தியந்த விசுவாசகராயிருந்து வருகின்றனர். அவர்கள் தங்கள் திரு நபியை எல்லாவற்றைக் காட்டினும் மிகவும் அதிகமாக நேசிக்கின்றனர். முஸ்லிம்களின் இந்நேசத்தினின்று கிறிஸ்துவ உலகத்தினர் கற்றுக்கொள்ளவேண்டிய அநேக பாடமிருக்கின்றது.

இன்றும் இஸ்லாமிய ஜனங்களில் பெரும்பான்மையோர் ஒரு பிரதானமான வணக்கத்தை அனுஷ்டித்து வருகின்றனர். அதனை அவர்கள் தொழுகை என்று கூறுகின்றனர். அத்தொழுகையானது சகல பாபங்களைவிட்டும், அருவருப்பான காரியங்களை விட்டும் பாதுகாக்கிறதென்பது அவர்களுடைய

கொள்கையாகும். பகிரங்கமாக நோக்குமிடத்து, தொழுதுக்கொள்பவர் சகலவிதமானபாப காரியங்களைவிட்டும் நீங்கியவர்களாய் காணப்படாவிட்டாலும், அநுபவப் பூர்வமாய் ஆராய்ந்து பார்த்ததில், முஸ்லிம்கள் தினமும் ஐந்து நேரம்- அதாவது மாதத்துக்கு சுமார் 150 விடுத்தம் தொழுதுக் கொள்ளும் போதெல்லாம் ஆண்டவனிடம் தங்கள் பரிசுத்தத்தன்மையைவெளியாக்கி, பாப காரியங்கள் மீது தங்களுக்குள்ள வெறுப்பை வெளியாக்கி, தங்களது வாக்குறுதியை நிறைவேற்றுகிறார்கள். இதன் காரணமாய் அவர்கள் பரிசுத்த நடத்தை யுடையவர்களாகவே பிறகு ஆகிவிடுகின்றார்கள் என்பது நன்கு தெரிகிறது.''

(4) பிரபல அறிஞரான மிஸ்டர் வி. எம். கிங் என்பவர் இஸ்லாமியத் தொழுகையின் மகத்துவத்தையும், தொழுகையில் அமைந்திருக்கும் இஸ்லாமிய சமத்துவப் பெருமையையும் பின்வருமாறு எழுதியுள்ளார் :—

"பொதுவாக மானிடன் உலக வியவகாரங்களிலும், விளையாட்டு விநோதங்களிலும் ஈடுபட்டிருக்குங்கால் அவனுக்கு ஆத்மார்த்தத் திருத்தத்தின் பக்கல் சிந்தனை செல்வதில்லை யென்பது மானுஷ்ய இயற்கையாகும். விளையாட்டு விநோதங்களில் பிரவர்த்திக்கும் மக்கள் முக்கியமாக தங்களது சிருஷ்டிகர்த்தாவாகிய ஆண்டவனை முற்றும் மறந்துவிடுகின்றார்கள். இந்த நிலைமைகளையெல்லாம் நோக்கிவிட்டு, இஸ்லாம் மதம் தனது பக்தர்கள்மீது தினம் ஐந்துவேளைத் தொழுகையை விதியாக்கி அவசியம் அதை நிறைவேற்றியே தீர வேண்டுமென்று கட்டளைப் பிறப்பித்திருப்பதை நோட்டமிட்டு ஆராய்ந்து பார்க்குங்கால், 'இஸ்லாத்தின் தொழுகையானது மிகமிகச் சிரேஷ்டமான சத்கருமமென்று யான் ஒத்துக் கொள்ளுகின்றேன். நிச்சயமாக சத்தியக்கொள்கைகளையுடைய ஒரு பக்தன் உலகத்தொல்லைகள் யாவற்றையும்விட்டு நீங்கி கலப்பற்ற பக்தி விசுவாசத்தோடு எல்லாம் வல்ல சிருஷ்டி கர்த்தாவை தியானித்தும் போற்றிப்புகழ்ந்து தூய்மைப்படுத்தியும், அவ்வாண்டவனிடமிருந்து திருப்தி—உதவி இவைகளை வேண்டுங்கால், உண்மையாகவே அந்த பக்தனின் ஆத்மா ஒரு பரிசுத்தமான திவ்விய நிலைமையை அடைந்துவிடுகின்றது. அவ்வுத்தமனுடைய உள்ளமும் அறிவும் தீயமனச் சேஷ்டையினின்று தூரமாகி தூய்மையடைகின்றது.

யான் உயர்தரமான போக்கும், நோக்குமுடைய முஸ்லிம்கள் பல்லோரைக் கண்டுள்ளேன்; இவர்களெல்லோரும் தங்களுக்குரிய கண்ணியம், மேன்மையின் காரணமாக ஒருவித சிரேஷ்ட அந்தஸ்துடையவர்களாகவே இருக்கின்றனர். எம்மைப்போன்ற தாழ்ந்த அந்தஸ்துடையவர்கள் அவர்களுடன் சமமாய் நின்று சம்பாஷிப்பதற்கும் தைரியம் தோன்றுவதில்லை; அப்படிப்பட்ட முஸ்லிம்கள்கூட தொழுகையின் நேரம் வந்தவுடன் அவர்கள் செய்யும் காரியம் எத்தகையதாயிருப்பினும் அதை நிறுத்திவிட்டு தன்னிலையற்றவராய் மஸ்ஜிதுக்குள் போய் தொழுகையில் கலந்து கொள்ளுகின்றனர். தொழுகையில் கலந்துள்ள அன்னிய முஸ்லிம் ஸோதரர்களுடன் எத்தகைய வேற்றுமையுமில்லாமல் ஒட்டி நின்று சமத்துவமாய்த் தொழுகையை நிறைவேற்றுகிறார்கள். இந்த அபூர்வ காக்ஷியை காணுங்கால், இந்த வணக்கத்தில் எளிய தன்மையும், தாழ்மை சுபாவமும் பிறர் கற்றுக்கொள்ளவேண்டிய படிப்பினையும் இருப்பதைத் தெரிந்துகொள்ளலாம். தொழுகையில் சமத்தும் சகோதரத்துவநிலை பரிபூரணமாய் அமையப்பெற்றுள்ளது. வாஸ்தவமாகவே இஸ்லாத்தின் நபித்திருத்தூதரவர்கள் (ஸல்.) ஓர் அற்புதமான தோரணையில் அரசர், ஏழை, உயர்ந்தோர், தாழ்ந்தோர், வலியோர், எளியோர் யாவரையும் ஒரே அணியில் சமத்துவமாய் நிற்கச் செய்துள்ளார்கள். இதன் பொருட்டால் மனிதரின் எல்லாவித அகங்காரம், தற்பெருமை, ஆணவம் யாவும் தொழுகையின்போது ஒரு சிறிதும் இல்லாது மறைந்துபோகின்

றன. முடிவாக, தொழுகையானது மிகச்சிறந்ததொரு வணக்கம் என்பதை யான் மனப்பூர்வமாக ஒப்புக் கொள்ளுகின்றேன்''

(இவ்வாறு பிரமதஸ்தர்களாலும் புகழப்பட்டு இஸ்லாத்தின் தூணேபோல் நின்றிலங்கும் தொழுகையை நம் முஸ்லிம் சோதரர்கள் விட்டிருப்பதேனோ?)

இஸ்லாத்தின் சமத்துவம்.

இயற்கை மதமாகிய பரிசுத்த தீனுல் இஸ்லாம் மிகமிக உயர்வானதொரு சன்மார்க்கமாகும். இதன் தூய்மைக்கும், தாராளத் தன்மைக்கும், பரந்த நோக்கத்துக்கும் உலகத்தின் இதர மதங்கள் இன்னும் வந்து சேரமுடியாம லிருக்கின்றன. இவ்வுலகத்திலுள்ள அநேக மதங்களானது இஸ்லாத்தின் கொள்கை, குர்ஆனின் கட்டளை, சன்மார்க்க நீதி, பெரியோர்களின் திருவுபதேசம் இவைகளைக்கொண்டு அஸ்திவாரம் போடப்பட்டிருக்கிறதெனச் சொல்வது பொருந்தும். ஆரியர் மதத்தைப்போல் இஸ்லாத்தின்பால் துவேஷம் பூண்ட மதம் வேறொன்றில்லை. எனினும், அந்த மதத்தின் வழிகாட்டித் தலைவர்களுடைய நூல்களையும், அம்மதத்தின் ஆரம்பக் கொள்கைத் திட்டங்களையும் சிறிது உற்றுணர்ந்து நோக்குமிடத்து, அவை நம் பரிசுத்த இஸ்லாத்தினின்று கிரகித்துப் பின்பற்றியனவாகவே காணப்படும். இஸ்லாத்தின் திட்டங்களே அந்த மார்க்கத்தின் அடிப்படையான கொள்கைகளா யமைந்துள்ளன. ஆரியர்கள் சற்றே திரித்து எடுத்துக் கூறும் ஏகதெய்வத்துவ வாதமானது, இஸ்லாத்தினின்று கிரகித்து அதன் நிறத்தையும் கோலத்தையும் தங்கள் சமயத்துக் கேற்றபடி மாற்றிக்கொண்டதாகும். அவர்கள் ஏக தெய்வத்துவ வாதத்தை எந்தத் தோரணையில் மாற்றித் திரித்துக் கூறியபோதிலுஞ் சரியே, ஆதியில் ஏக தெய்வத்துவத்தை (தவ்ஹீதை) அவர்கள் ஒத்துக்கொண்டார்களெனறே தான் கூறவேண்டும். ஆனால் அவர்கள் ஏக தெய்வத்துவ வாதத்தைத் திரித்துப் புரட்டிக் கூறுவதால் அதன் சக்தியும் வன்மையும் இதுகாலை க்ஷீணித்ததாய்க் காணப்படுகின்றது.

இந்தியமதங்களும் இஸ்லாமும்.

இந்தியாவின் பூர்வ சரிதையை நோக்குமிடத்து, இஸ்லாம் உதயமாகி தன் மெஞ்ஞான ஜோதியையாண்டும் பரவச்செய்தற்கு முன்னர், உண்மையில் ஆண்டவன் என்றொரு ஏக பரம்பொருள் உண்டா? இல்லையா? என்பதைக் கூட அக்கால மக்கள் அறியாதிருந்து வந்தனர் என்று தெரிகிறது. அக்காலத்திய ரிஷிகள், யோகிகள், தபசிகள் கூட அந்த ஏக தெய்வத்தன்மையை நிராகரித்துக்கொண் டிருந்தனர். 'எந்த ஒரு பொருள் மானுஷ்யனது கரத்துக்கோ, சரீரத்துக்கோ புலன்படமாட்டாதோ அப்படிப்பட்டதை பூஜிக்கக் கூடாதென்பது இன்னாரின் போதனை யாகும். (எனவே, இன்னோரால் ஸ்பரிசிக்கப்படக்கூடிய கல், செம்பு, மர விக்கிரகங்களைப் பூஜித்து வந்தனர்.)

உலக சீர்திருத்தக்காரர்களுள் ஒருவர் எனக் கூறப்படும் மகாத்மா புத்தருடைய போதனையிலுங்கூடப் பரிபூரணம் காணப்படவில்லை. இதனைச் சிறிது ஆராய்வோம். இதுகாலை உலகத்தின்கண் கௌதம புத்தபிரானைப் பின்பற்றி நடக்கும் சிஷ்யவர்க்கத்தினர் இவ்விந்தியாவிலும் இதர நாடுகளிலும் சுமார் 50-கோடிப் பேர் இருக்கிறார்கள். எனினும், அந்தக் கௌதம புத்தரும் ஏகதெய்வத்தை நிராகரிக்கக் கூடியவராகவே யிருந்துள்ளார். உதாரணமாக, காலஞ்சென்ற லாலா லஜபதி ராயவர்கள், தமது 'இந்திய சரிதை' என்னும் நூலில் ''மகாத்மா புத்தர் இறைவனைப்பற்றிய எத்தகைய போதனையையும் புகட்டியது கிடையாது'' என்று எழுதியிருக்கின்றார். இவற்றை நோக்குமிடத்து, இஸ்லாம் உதயமாவதற்கு முன் இவ்விந்தியாவானது முற்றும் நாஸ்திகத்தில் மூழ்கிக் கிடந்ததென்று கூறுவது மிகை யாகாது.

நிற்க ஐரோப்பா தேசமோ அதனினும் மிக மோசமானதாயிருந்தது. பிதா, குமாரர், பரிசுத்த ஆவி என்னும் வாதம் பரவிப்போய், மூன்றும் ஒரே கடவுள்தான் என்னும் குருட்டுவாதம் தலை விரித்தாடிக்கொண்டிருந்தது.

அக்கினியை வணங்கும் ஜர்தஷ்தியர், "அஹ்ரமன், யஜ்தான்" என்பவைகளைத் தெய்வம் என்று நம்பி தமது வர்க்கத்தாருக்கு அவ்வாசாரத்தையே புகட்டிவந்தனர். எனவே, பொதுவாக உலகமானது, உண்மையான ஏக தெய்வம் ஒன்றுண்டென்ற மெய்யான உணர்ச்சி பெறுமலே இருளில் மூழ்கிக்கிடந்தது. ரிஷிகள் மகான்கள் சீர்திருத்தக்காரர்கள் ஆகியோரின் மூளைகளிலுங்கூட ஏகதெய்வத்துவத்தின் உண்மையான உணர்ச்சி தோன்றுமலே தானிருந்து வந்தது. அக்கால உலகமக்கள் தம் பண்டைய நபிமார்களுடைய நற்போதனைகளை முற்றும் மறந்து ஆசாபாசங்களில் முழுதும் மூழ்கிக்கிடந்து வந்தனர். எனவே தான், அக்காலத்தவர் இறைவனது இன்னருளைப் பெறுவதற்காக தத்தமக்கேற்ற பற்பலவிதமான வழிகளை ஏற்படுத்திக்கொண்டு நடந்து வரலானுர்கள். ஆனுல் பலதிறப்பட்ட எல்லா கற்பனு வழிகளாலும் உண்மைத் தெய்வத்தின் அருட்பாக்கியம் சித்திக்கப்பெறுமல் ஏங்கிநின்றனர். ஒரு சாரார் இதனுல் மனஞ்சடைந்து தெய்வமே கிடையாதென்று கூறத் தலைப்பட்டுவிட்டனர். இன்னேரின் மனத் தடுமாற்றங்களையும், குருட்டுவழிகளையும், தவறுன கொள்கைகளையும் ஒழித்து சத்தியம் இன்னதென்று நல்வழிகாட்டியது பரிசுத்த "தீனுல் இஸ்லாமே" யாகும்.

சுத்த சத்திய இஸ்லாம் மதம் உதயமாகி "எல்லாம் வல்ல இறைவன் ஒருவனே, அவன் தூய்மை யானவன், இணையற்றவன், தேவையற்றவன்" என்னும் திவ்விய தத்துவங்களை போதித்தது. "அவ்விறைவன் ஆசாபாசமற்றவன்; எவருக்கும் அவன்பிறந்தவனல்ல; எதையும் அவன்பெறவுமாட்டான்" என்னும் சத்தியத்தை இவ்வுலகத்தில் ஒங்கச்செய்யவே, "தேவனின் புதல்வர்-இயேசு-பரிசுத்த ஆவி" என்னுங் கிறிஸ்துவக்கோஷ்டியாரின் கோட்பாடுகள் திண்டாட்டத்திலாக்கிவிட்டன. எனவே, உலகமக்கள் கிறிஸ்துவக்கோட்பாடுகளையும், பல தெய்வப்பூஜைகளையும் அடியோடு விட்டுத் தொலைத்து இஸ்லாத்தில் வந்து சேரலானுர்கள்.

பல நூற்றுண்டுகளாய் எந்த அறிஞராலும் ரிஷியாலும், யோகியாலும், பாதிரியாலும் தபசியாலும் கண்டு பிடிக்கப்பட முடியாமலிருந்த ஒரு பரமரஹஸ்யத்தை எம் இஸ்லாத்தின் தீர்க்கதரிசியாகிய நபிபெருமானுர் ரஸூல் (ஸல்.) அவர்கள் மிகச் சாதாரணமாக எடுத்துக் கூறிவிட்டார்கள். இது தான் "ஏகதெய்வம்" என்னும் உண்மையாகும்.

ஏகதெய்வமே சர்வலோக சராசரங்கட்கும் அதிபனென்றும், மக்களெல்லாம் அந்த ஏக இறைவனையே வணங்கவேண்டு மென்றும், ஏக தெய்வத்துவ மகாத்மியம் 33-கோடி தேவதைகளெனப்படுவதில் கிடையாதென்றும், கர்த்தா-புத்திரர்-பரிசுத்த ஆவி என்னும் விதண்டாவாதத்திலுங் கிடையாதென்றும், அஹ்ரமன்-யஜ்தான் என்னும் பொய்த் தெய்வங்களிலும் கிடையாதென்றும் நபிகள் நாயகம் ரஸூல் (ஸல்.) அவர்கள் மிக ஸ்பஷ்டமாய் எடுத்தோதிவிட்டார்கள். எனவே உலகம் கண் திறந்துகொண்டது.

இஸ்லாத்தின் முன்னேற்றம்.

இஸ்லாம் மதத்தின் சத்திய போதனையாலும், ஏக தெய்வத்துவ உன்மையினுலும் இவ்வுலகம் சிறந்து முன்னேற்றமடைந்துகொண்டு சென்றது. இஸ்லாம் மதம் தனது இணையற்ற அனுகூலங்களைக் கொண்டு உலகத்தினரையெல்லாம் ஈர்த்துக்கொள்ளலாயிற்று. நாளுக்குநாள் இஸ்லாம் மதம் நல்லபிவிருத்தியடைந்தது. ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக், உமர் பாரூக், உஸ்மான், அலீ, காலித்பின் வலீத், (ரலி.) மாமூன், ஷிப்லீ, கஜ்ஜாலீ, அபூ ஹனீபா, மாலிக்கீ, ஷாபிஈ, ஹன்பலீ, ஸஅதி, ரூமி (றஹ்) முதலிய சத்திய சீலர்களும், வீர பக்தர்களும், மேதாவிகளும், பெரியோர்களும் தோன்றி இஸ்லாம் இயற்கைக்கொத்த மதமென்று ஸ்தாபித்து உலக மக்களுக்குப் பல்வழிகளிலும் அனுகூலங்களும், உபகாரங்களும் புரிந்துள்ளார்கள். இத்தகைய உத்தமர்களும் சத்தியவான்களும் தோன்றி உலகோபகாரத்தமாகச் செய்த நன்மைகளின் கீர்த்தியும் பெருமையும் இஸ்லாத்துக்கே உரியனவாகும்.

இஸ்லாம் இயற்கையான சன்மார்க்கமாகும்; ஏகதெய்வத்துவ உணர்ச்சி இதில் பரிபூரணமாய் இருக்கின்றது; ஆகவேதான் இஸ்லாத்தை அங்கீகரிக்கும் மக்கள் ஏனையோரைவிட ஆன்மார்த்தத்தில் சிறந்திருக்கின்றார்கள். இப்பெரும் பாக்கியத்தைப் பெறுவான் வேண்டி அக்காலை ஆயிரக்கணக்கான மக்கள் பிறசமயங்களை வெறுத்துவந்து இஸ்லாத்தில் சேர்ந்துகொண்டார்கள். இஸ்லாம் மதம் அதிதுரிதமாய்ப் பரவி வியாபித்ததற்கு இஸ்லாத்தின் ஏக தெய்வப் போதனையும், திவ்விய ஞானங்களும், அனுகூலங்களுமே சாதனங்களாகும்.

இஸ்லாத்தின் சமத்துவம்.

இஸ்லாம் மதம் இப்பிரபஞ்சத்தவர்க்குப் புரிந்த பெரியதோர் உபகாரம் "சமரஸ-சமத்துவம்" என்பதாகும். இஸ்லாம் உதயமாவதற்கு முன்னர் இவ்வுலகம் எத்துணை ஏற்றத் தாழ்விலும், அதிக்கிரமங்களிலும், அஞ்ஞான அந்தகாரத்திலும், வழிகேடுகளிலும் ஆழ்ந்து கிடந்ததென்பது வெளிப்படை. குறிப்பாக, அராபிய தேசம் மற்ற நாடுகளைக் காட்டினும் எம்மட்டுஞ் சீர்கேட்டில் கிடந்ததென்பதை உலக சரித்திரத்தால் நன்கறிகின்றோம்.

அராபியா தேசத்தில் அடிமைகளும், அடியாள்களும் பலப்பல கொடுமைகட்கு ஆளாக்கப்பட்டு வந்தமையும், இந்திய தேசத்திலோ ஜனங்கள் தம்மைச் சூத்திரரென்றும், வைசியரென்றும், க்ஷத்திரியரென்றும், பிராம்மணரென்றும் வகுத்துக்கொண்டு ஒருவரையொருவர் மிகத் தாழ்த்தி அடக்கி யாண்டு வந்தமையும் உன்னற் பாலதாகும். அப்படிப்பட்ட கொடுமைகளையும், ஏற்றத் தாழ்வுகளையும் அநீதிகளையும் போக்கி, "எல்லோரும் ஏக சகோதரர், யாவரும் சமத்துவமானவராவர், என்னும் திவ்ய போதனையை முதன் முதல் இத்தரணியோர்க்குப் புகட்டியது இஸ்லாம் மதமேயாகும். இஸ்லாம் மதம் உதயமாகி சிறிது காலத்திற்குள் அது பிரவேசித்த இடங்களிலெல்லாம் கொடுமைகளையும், ஏற்றத் தாழ்வுகளையும் அதிக்கிரமங்களையும் ஒழித்து, சமத்துவ-சகோதரத்துவ அன்னியோன்னியத் தன்மையை இனிது நிலைநாட்டிற்று. எனவே இஸ்லாத்தை அங்கீகரித்தவர்களுள் உயர்வு தாழ்வு, அடிமை அரசன், மேல்ஜாதி கீழ்ஜாதி, வெள்ளையன் கருப்பன் என்பன போன்ற இழிய வேற்றுமை ஒன்றுமில்லாமல் "எல்லோரும் இஸ்லாமிய மக்கள்-ஏக சகோதரர்கள்" என்னும் பரஸ்பரநேசம் சிறந்து விளங்கலாயிற்று. இஸ்லாத்தை தழுவிக்கொள்ளா முன்னர் இழிவாகவும் அடிமையாகவும் கருதப்பட்டு வந்தோருங்கூட இஸ்லாத்தில் சேர்ந்துகொண்டபின் உயர்ந்தவராகவும், பெரியோராகவும் பாராட்டப்பட்டுள்ளனர். உதாரணமாய், ஹஜ்ரத் பிலால் (ரலி.) ஸல்மான்பார்ஸீ (ரலி.) ஆகியவர்களை எடுத்துக் கொள்ளலாம். இன்னோர் ஆரம்பத்தில் மிகத் தாழ்ந்தவர்களாய்க் கருதப்பட்டார்களென்பதும் முஸ்லிமானதன் நற்பாக்கியத்தால் உலக முஸ்லிம்களனைவராலும் போற்றப்படுகிறார்களென்பதும்நாமறிந்ததே. ஸுல்தான் ஸுபக்தகீன், மஹ்மூத் கஜ்னவீ முதலியோருங்கூட இஸ்லாமிய சமத்துவத்தின் நற்பாக்கியத்தினாலேயே உயர்ந்த பதவிகள் பெற்று, உலகம் போற்றும் வேந்தர்களாகவும், வீரர்களாகவும் விளங்கி இஸ்லாத்துக்கு அழியாப் புகழ் அளித்துச் சென்றார்கள்.

பிறசமூகத்தார்களின் விழிப்பு.

கிறிஸ்துவர்களும், யூதர்களும் தமக்குள் பிற சமூக வேற்றுமைகளை ஏற்படுத்திக்கொண்டு பல நூற்றாண்டுகளாய் உழன்று வந்தார்கள். ஹிந்துக்களோ அவர்களைவிட மிகத் தீவிரமாய் ஜாதி வேற்றுமைக்குள்ளாய் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற பிரிவினைச்சேற்றில் அநேக நூற்றாண்டுகளாய் உழன்றுவந்தார்கள். இங்ஙனமிருக்க, இஸ்லாம் மதம் உதயமாகி, சத்திய போதனைகளை உலகிடைப்பரப்பி, ஜாதிசிற வேற்றுமைகளை ஒழித்து, சமரஸ சகோதரத்துவ சமத்துவத்தை நிலைநிறுத்தி, முன்னேற்றமும் அபிவிருத்தியும் அடைந்து வருவதைக்கண்டு அப் பிற சமூகத்தினர்கள் விழித்துச்கொண்டார்கள். எனவே 19-ம் நூற்றாண்டு முதல் ஜாதி வேற்றுமைகளை முறித்தெறிய வேண்டுமென்ற புத்துணர்ச்சி அவர்களிடையே தோன்றி இருக்கிறது. இஸ்லாத்தின் சமத்துவத்தைக்கண்டு பிற சமூகத்தினரும் ஓர் உணர்ச்சியும் படிப்பினையும் பெற்றுக்கொண்டதனால் இஸ்லாத்துக் கேற்படும் பெருமை நபிகள் நாயகம் ரஸூல் (ஸல்.) அவர்களுக்கே உரியதாகும்.

பூர்த்தியான சமத்துவமும், நிரந்தரமான பரஸ்பரமும் நிலவி இருப்பது பரிசுத்த இஸ்லாம் மதம் ஒன்றிலேயேயாம். இத்துணைப் பரந்த நோக்கமும், தாராளத் தன்மையும், சகோதரத்துவநலனும் வாய்ந்த சன்மார்க்கம் இஸ்லாத்தைத் தவிர்த்து வேறொன்றுங் கிடையா தென்பது வெளிப்படை. எனவே இஸ்லாம் மதம் உலக முடிவுகாலம்வரை அழியாதிருக்கும். உலகம் அழிந்தாலும் முஸ்லிம் ஆன்மாக்களின் சமத்துவ சகோதரத்துவ பரஸ்பரநேசம் என்றும் அழியாது. ஆண்டவன்மீது "நன்னம்பிக்கை கொண்டவர்க ளெல்லோரும் சகோதரர்களாவர்." சாதிவேற்றுமையில் மூழ்கிக்கிடந்த ஹிந்து சமூகத்தாருக்கு சமத்துவ உணர்ச்சியளித்தது இஸ்லாமே யாகும். கிறிஸ்துவர் யூதர் ஆகியோரின் உள்ளங்களின் அழுக்காறை உண்டாக்கியது இஸ்லாத்தின் முன்னேற்றமும் சமத்துவச் சிறப்புமாகும். உலகத்தை அடைய வளைந்துகொண்டதும் இஸ்லாத்தின் சமத்துவமே யாகும். இப்படிப்பட்ட புனிதம் வாய்ந்த இஸ்லாம் மதம் என்றென்றும் தழைத்துப் படர்ந்து ஓங்கிவளர்வதாக !

இஸ்லாமிய சமத்துவமும், பிறசமயத்தாரின் சிறப்புரைகளும்.

(1) காசி ஹிந்து சர்வ கலாசாலையில் பெரும் கியாதிபெற்று விளங்கும் புரோப்ஸர் மஹேஷதாஸ் என்னும் அறிஞர் "இஸ்லாமிய மனோவசிகரத்துக்குரிய ரகஸ்யம்" என்ற தலைப்பில் எழுதிய ஒரு வியாஸத்தில் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார் :—

"இஸ்லாத்தில் சமத்துவம் நிலவியிருக்கின்றது. முஸ்லிமல்லாத சமூகத்தாரிட மிருப்பதுபோன்ற ஜாதிபேத முரண்பாடுகள் இதிக் கிடையா. கிறிஸ்துவர்கள் இதற்கு நேர் விரோதமாயிருக்கின்றனர். கிறிஸ்துவர்களிலும்கூட வெள்ளையர், கருப்பர், ஐரோப்பியர், ஐரோப்பியரல்லாதவர் என்ற தாரதம்மியங்கள் இருக்கின்றன. சுருங்கக் கூறுமிடத்து, இஸ்லாமிய ஆரம்பகால சரிதையை நாம் உற்றுணர்வோமானல் இஸ்லாமும், இஸ்லாமிய மக்களும் ஜாதிபேத ஒழுங்கீனங்களையும், பொருத்தமற்ற முரண்பாடுகளையும் ஒரு சிறிதும் அங்கீகரித்தது கிடையாதென்பது நன்கு விளங்கக் கிடக்கின்றது. சர்வ சாதாரணமான ஒரு முஸ்லிம், வம்சத்தாலும் வர்க்கத்தாலும் சிறந்து விளங்கும் இதர முஸ்லிம்களுடைய குடும்பத்தில் விவாகம் செய்துகொள்ளுகிறன். முஸ்லிம்களுள் ஜாதி வித்தியாஸமே கிடையாது. இதை நோக்குமிடத்து, இஸ்லாமிய மக்களின் முன்னேற்றமடையுந் துறையில் ஆதரவாயும் சாதனமாயு மிருந்த அம்சங்களுள் ஜாதி பேதங்களைப் பாராமல் சமத்துவம் பூண்டிருந்தது முக்கியமான தொன்ருகும்." (கிராந்தீ, பக்கம் 66.)

(2) வங்காளத்தின் பிரபல விஞ்ஞான சாஸ்திரியான புரோப்ஸர் ஸர் பி. ஸி. ராய் என்பவர் "கிராந்தி" என்னும் சஞ்சிகையில் எழுதுவதாவது :—

"இஸ்லாம் மார்க்கமானது வாள்வீச்சின் சகாயத்தால்தான் இந்தியாவின் கண் பரத்தப்பட்டது என்று இஸ்லாத்தின்மீது பெரியதோர் அபவாதம் சுமத்தப்படுகிறது ; இது ஒப்புக்கொள்ளத் தக்கதாகாது. ஏனெனின், அங்ஙனம் வாள்வீச்சால் இஸ்லாம் பரத்தப்பட்டதாயிருப்பின், இந்தியாவின் கண் இஸ்லாமிய அரசாங்கத்துக்கு மத்திய ஸ்தலமாயிருந்த இடங்களில் முஸ்லிம்கள் அதிகம் பெருகியிருந்திருக்கவேண்டுமல்லவா ? ஆனல் அங்ஙனமில்லை. இஸ்லாமிய அரசாங்க ஸ்தலங்களான டில்லி, ஆக்ரா, அவுத், முதலிய ஸ்தலங்களில் தான் முஸ்லிம்கள் மிகவும் சிறுபான்மையினராய்க் காணப்படுகின்றனர். இஸ்லாமிய அரசாங்கம் ஏற்பட்டிருந்த இடத்துக்கு வெகு தூரத்திலிருந்த வங்காளம் முதலிய பகுதிகளில் சுயமே முஸ்லிம்கள் பெருத்து அபிவிருத்தியடைந்து பெரும்பான்மையா யிருக்கின்றனர். இந்த உதாரணங்களால், இஸ்லாம் வாள்வீச்சால் பரத்தப்பட்டதென்ற பேச்சு முழுதும் வீண் அபவாதமென்பது விளங்கக்கிடக்கின்றது. இஸ்லாம் பரவியதற்குக் காரணமாயிருந்ததென்று கூறப்படும் ஆயுதம் உலோகத்தால் செய்யப்பட்டவாளன்று. "இஸ்

லாமிய சமத்துவம்" என்ற தூய்மைத் தன்மையால் நிர்மாணமான தெய்வீக ஆயுதமேயாகும்."

(3) மேற்கூறிய அறிஞரே மற்றோரிடத்தில் குறிப்பிட்டிருப்பதாவது :—

"இஸ்லாம் மதம் தோன்றித் தனது சமத்துவப் போதனையைக் கொண்டு வந்தபோது, இந்தப் போதனையானது இந்தியாவில் துன்ப மனுபவித்துக் கொண்டிருந்த எளிய வர்க்கத்தார்வரை வந்து சேர்ந்துவிட்டது. இந்தச் சமத்துவத்தை அவ்வெளிய மக்கள் தங்கட்குக் கிடைத்த மகா அருட்பாக்கியமெனக் கருதி இஸ்லாத்தின் போதனைகளை அங்கீகரித்துக்கொண்டார்கள். மேலும், இஸ்லாம் மதம் வெற்றிகரமாய் விளங்கியதற்குரிய ரகஸ்யம், அம்மார்க்கம் மனுஷ்யரால் சுயமே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஜாதி பேத உயர்வு தாழ்வுகளாகிய பிரிவினைகளை அடியோடு ஒழித்து, தீண்டாதானை உயர்த்தி அவனைப் பிராம்மணனது ஸ்தானத்தில் கொண்டுவந்து வைத்ததேயாகும். இஸ்லாமிய வெற்றிக்குரிய மர்மம், மிருகத்தினினும் இழிவாகக் கருதப்பட்டுவந்த கோடிக்கணக்கான மனித வர்க்கத்தாரை ஜாதி பேத அடிமைத்தளையினின்றும் விடுவித்து மனித சமரஸ ஆபரணமணிவித்து சமத்துவ அணியில் சேர்த்துக் கொண்டதேயாகும்."

முஸ்லிம்களின் கடமை

முஸ்லிம் சோதரர்காள்! நம் பரிசுத்த சமத்துவ தீனுல் இஸ்லாத்தைப்பற்றிப் பிறசமய அறிஞர்கள் பாரபக்ஷமற்ற மனதுடன் கூறும் சிறப்புரைகளை உற்று உணருங்கள். உங்களுடைய சுய நிலைமை இதுகாலை எத்தகைய ஸ்திதியில் கிடந்துழல்கிற தென்பதைச் சிந்தித்துச் சீர்திருந்தி ஒழுகுங்கள். நம்மில் ஒரு சிலர் அறியாமையின் காரணத்தால் ஏற்படுத்திக்கொண்டுள்ள சிறுசிறு வேற்றுமைகளை விட்டொழித்து ஒற்றுமைப்படுங்கள். சமத்துவத்தூதர் நகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அரிய உபதேசங்களை சிரமேற்கொண்டு யாவரும் ஒன்றுகி சகோதரத்துவம் பூண்டு அன்பு நிலவி வாழுங்கள். வழி கெடுக்கும் தலைவர்களெனப்படுவோரை பின்பற்றிக் கெடாதீர்கள். நமக்குள் காணப்படும் அபிப்பிராய பேதங்களை ஒழுங்கு செய்துகொண்டு ஒன்றுபட்டு பலத்துடன்வாழுங்கள். பிரிவினைப் பட்டு சிதறுண்டு எதிரிகளுக்கு இடங்கொடுத்துவிடாதீர்கள். மார்க்க விஷயத்திலாயினும், ராஜீய விஷயத்திலாயினும், சமூக விஷயத்திலாயினும் ஏற்படும் பிரச்சினைகளையும் அபிப்பிராய பேதங்களையும் நமக்குள்ளே பைஸல் செய்துகொண்டு சமரஸமாய் வாழுங்கள்,

சகோதரர்காள்! நமக்குள் கக்ஷிப்பிளவுகளும், போராட்டங்களும் புரிந்துகொண்டிருப்பதற்கு இது காலமல்ல. ஆனல் ஒவ்வொருவரும் விழிப்புற்று புத்துணர்ச்சி பெற்று மத சமூக முன்னேற்றத்துக்காகப் பாடுபட வேண்டிய நெருக்கடியான காலம் இதுவேயாகும். எனவே, நமது பரிசுத்த தீனுல் இஸ்லாம் போதித்த சமத்துவம், சகோதரத்துவம், ஒற்றுமை, நல்லொழுக்கம் ஆகியவைகளைப்பின்பற்றி நடப்போமாக. இஸ்லாமிய சமத்துவம் நற்போதனை ஆகியவைகளைப் பிறசமயத்தவர்கட்கு எடுத்தோதி இஸ்லாத்தை முன்னுக்குக் கொண்டுவருவோமாக. முஸ்லிம்காள்! விழிமின்! எழுமின்! உழைமின்! வஸ்ஸலாம்.

இனம்! ஓர் அறிக்கை இனம்!!

1931-ம் ஆண்டு ரபீஉல் அவ்வல் மாதத்தின் மீலாத்ஷரீப் கொண்டாட்டத்திற் கென்றே நம் ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரால் வெளியிடப்பட்டுள்ள "சமத்துவத்தூதர்" என்னும் நூல் தேவையானவர்கள் தபால் சார்ஜுக்காக ஒரு அணு ஸ்டாம்பு அனுப்பினுல் இனமாக அனுப்பிவைக்கப்படும்.

நமது சமூக ஒற்றுமை

நற்குண நல்லொழுக்கங்களுடன் விளங்கி பரஸ்பர முன்னேற்றத்துக்கும், உலகமுற் போக்குக்கும் ஏற்ப ஒத்துழைக்கும் ஜனப் பகுதியையே ஒரு சமூகம் என அழைக்கத்த குதியுடைதாகும். பல்வேறு சமூகங்களுள்ள இவ்வுலகில் ஒரு சமூகம் உயிருடன் வாழ்ந்து வந்து முன்னேற்ற மடைய வேண்டுமாயின் அந்த சமூகத்தைச் சேர்ந்த நபர்களுள் ஒற்றுமை நிலவியிருத்தல் மிகவும் அத்தியாவசியமாம். ஆனால் நமது சமூகத்திலோ ஒற்றுமை பரவி யிருப்பதற்குப் பதிலாக ஒற்றுமையின்மை தலைவிரித்தாடுதல்கண்டு நாம் மனம் வருந்தவேண்டி யிருக்கிறது. இதற்குக் காரணம் நாம் உலகநிகழ்ச்சிகளை அறியாமல் அவிவேகத்தை வளர்த்து வருவதே யாகும்.

நமது புராதனச் சிறப்பு

புராதனகால முஸ்லிம்கள் ஐச்கிய பாவத்துக்கு ஒரு முன் மாதிரியாய் விளங்கினர். அக்கால முஸ்லிம்களிடை பரவியிருந்த ஒற்றுமையைக் கண்டு ஐரோப்பியரும் எகிப்தியரும் ஆச்சரியப் பட்டனர்.

உண்மையாகவே அக்கால முஸ்லிம்களின் உள்ளங்களில் ஒற்றுமை உணர்ச்சியும் பரஸ்பர உபகார எண்ணமும் நிரம்பித் ததும்பிக்கொண்டிருந்தன. ஆனால் இக்காலத்திலோ நாம் இத்தகைய நல்லம்சங்களையெல்லாம் மறந்து பெரிய வீழ்ச்சி யடைந்துள்ளோம். முன்னர் நம்மவர்களுடைய ஒற்றுமையையும் மேன்மையையும் கண்டு வியப்படைந்த பிறநாட்டார், இப்போது நம்மவர்களின் ஐக்கிய மின்மையையும், பிளவையும், அதன் காரணமாய் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியையும் கண்டு எள்ளி நகையாடு கின்றனர்.

மார்க்கத்தின் போதனையும் நமது அசிரத்தையும்.

ஒற்றுமையானது நமது பரிசுத்த தீனுல் இஸ்லாத்தின் நல்லாசாரமுறையில் ஓர் அரிய பிரதான திட்டமாயிருந்துவருகின்றது. நாம் அந்த ஆசார அம்சத்தைக்கூட மறந்து நம்முள் பிளவுபட்டுச் சீர்குலைந்து வருகிறோம். நம்முள் ஒருசாரார் சன்மார்க்க சட்டதிட்ட அனுஷ்டானங்களில் சிரத்தைக் குறைவுள்ளவரா யிருப்பதுபோன்றே சமூக ஒற்றுமையிலும் குறைவுள்ளவராயு மிருக்கின்றனர். நம்மில் இதுகாலை ஒற்றுமை, பரஸ்பர உபகாரம், ஊக்கம், தைரியம் முதலிய அருங்குணங்கட்குப் பதிலாக பிளவு, விரோதம், சோம்பல் வீண்காலப் போக்கு, பயங்கொள்ளித்தனம் முதலிய கெட்ட குணங்கள் தோன்றிவருகின்றன. இக்கெட்ட குணங்களின் பயனாய் நமது சுத்த சத்திய திவ்விய இஸ்லாத்தின் சிறந்த திட்டமாகிய ஐக்கிய வாழ்வு சீர்குலைந்து வருகின்றது. அதனால் ஒற்றுமை வாழ்வு என்பது முஸ்லிம் சமூகத்துக்குப் புறம்பானதேபோல் காணப்படுகின்றது. என்னே நம்மனோரின் துரதிஷ்டம்!

ஆனால் நம் முஸ்லிம்களில் யாவருமே இங்ஙனம் ஐக்கிய உணர்ச்சி, தைரியம், நல்லுணர்ச்சி ஆகியவற்றை இழந்து கேவலமான நிலைமை யடைந்துவிட்டதாக எண்ணவேண்டாம். நம் எளிய மக்களுள் சிலர் பிளவாலும், வேற்றுமையாலும் கட்டுக்குலைந்து சீர்கெடுவதைக்கண்டு மனம் நலிந்து, சமூக ஐக்கியத்துக்காக அல்லும் பகலும் அனவரதமும் பாடுபட்டு வரும் தலைவர்களும், அறிஞர்களும் நம்மில் பலர் இருக்கின்றார்கள். அவ்வுத்தமர்கள், தீயசெயல்களினின்றும் எளிய மக்களை எச்சரித்து கட்டுப்பாட்டுக்கும், ஐக்கிய நலத்துக்கும் கொண்டுவரப் பெருமுயற்சிகள் செய்து வருகின்றனர். இங்ஙனம் சமூக ஒற்றுமைக்காகப் போதனைபுரிவதும், நல்வழி காட்டுவதும் நமது சமூக முன்னேற்றத்துக்குரிய நற்சாதனமாயிருப்பதோடல்லாமல், மனுஷ்யத்தன்மைக்குரிய முக்கியக் கடமை யாகவுமிருக்கின்றது.

நமது உணர்ச்சியற்றநிலை

நம்மில் ஒரு சிலர்க்கு உள்ளத்தினின்று ஒற்றுமையின் நல்லுணர்ச்சியே எடுபட்டுப் போய் விட்டதென எண்ண வேண்டியிருக்கின்றது. குளத்தில் போட்ட சிறுகல் குளத்

தடியில் போய் யாதொரு அதிர்ச்சியையும் உண்டு பண்ணுமல் அமுங்கி விடுவதே போன்று இத்தகைய யோரின் உள்ளத்தில் நல்லுபதேசங்களின் பயனும் யாதொரு உணர்ச்சியும் தோன்றுவதில்லை. எனவே, உபதேசத்தால் எதிர்பார்த்த அளவு பிரயோஜனமும் ஏற்படாது விழலுக்கிரைத்த நீராய் விடுகின்றது.

நம்மில் ஜனக்கட்டுப்பாடுவேண்டும்.

இதர சமூகத்தினரிடமும் இத்தகைய குறைபாடுகள் உண்டெனினும், முக்கியமாக இந்திய முஸ்லிம்கள் அடைந்துள்ள பிற்போக்கான நிலைமையை யெண்ணி யெண்ணித்தான் நாம் கண்ணீர்வடிக்க வேண்டியதாயிருக்கின்றது. இதர சமூகங்கள் தமது சமூக முற்போக்கு சம்பந்தமான விஷயங்களிலேனும் தீவிரமாய் உழைத்து வருவதை நாம் கண்கூடாகக் காணலாம். அவ்வெதிர் மதவாதிகள் தங்களால் கூடியமட்டும் ஜனக்கட்டுப்பாடும், ஒற்றுமையும் ஏற்படுத்திக்கொண்டு, பிற சமூகத்து ஜனங்கட்கு எதிரிடையாகக் கெடுதிகள் புரிவதற்கே பிரயத்தனப் பட்டுக் கொண்டிருக்கின்றனர். அவ்வெதிரிகள் நம்மவர்க்கு ஒரு சிறு உபகாரமும் செய்யக்கூடாதென்ற நோக்கத்தோடு கொடுக்கல் வாங்கல் ஏற்றுமதி இறக்குமதி முதலிய வியாபாரத் துறைகளிலுந் தங்கள் சுய சமூகத்தாருடன் மட்டுமே கூட்டுறவும் வியாபாரமும் உடையவர்களாயிருக்கின்றனர். சகல விதத்திலும் அன்னூர் தங்கள் சமூகத்துக்கே நலன் அளிக்க வேண்டுமென்ற பிரயத்தனத்தில் கண்ணுங் கருத்துமாயிருக்கின்றனர். இதையெல்லாம் உணர்ந்துங் கண்டுங்கூட நம்மவர்க்கு ரோஷமும் உற்சாகமும் பிறக்காமலிருக்கிறது. ஆதலின், இனியேனும் நாம் ஒவ்வொருவரும் ஒரு மனப்பட்டு வாழ்வதோடு, நமது அவசியங்கட்கு வேண்டுமான பொருள்களை யெல்லாம் நம் சமூக முஸ்லிம் வியாபாரிகளிடமே வாங்கி இவர்கட்கே இலாப மளித்துநஞ்சமூகத்தை முன்னுக்குகொண்டுவரவேண்டும். பிறசமூகத்தினர் தங்கள் வர்த்தக "லேவாதேவி"க்காரர்களிடம் இனிமையாய்ப் பேசி இலாபமும் அனுகூலமும் அடைவதே போன்று நமது வியாபாரிகளுடனும் அன்பு மரியாதையுடன் நடந்துக்கொண்டு பரஸ்பரம் இலாபம் பெறுவதற்கு முயலல்வேண்டும்.

வியாபாரத்துறையில் நாம் நன்மை அடைந்து முன்னுக்கு வருவதற்குரிய இதுபோன்ற அம்சங்களை நம் சமூகத்தினர் உணர்ந்து கொள்ளாதவர்க ளாகவே காணப்படுகின்றனர். ஏனெனின், அப்படி நம்மவர்கள் உணர்ந்திருந்தால் நஞ்சமூகம் இது காலை சமுதாய ஐக்கிய வாழ்வில் அனுகூலமான வழிகளை விட்டு வழிகெட்டு க்ஷீணதிசை யடைந்திராதன்றே?

இஸ்லாமிய ஐக்கியாசாரத் தத்துவம்.

சமுதாய ஐக்கியம், சமூக ஒற்றுமை, பரஸ்பரவாழ்வு, ஜனக்கட்டுப்பாடு ஆகிய நல்லம்சங்கள் நம்மில் ஏற்பட்டு நாம் முன்னுக்கு வருவதற் காகவேண்டி நமது சுத்த சத்திய தீனுல் இஸ்லாம் பற்பல திட்டங்களை ஏற்படுத்தி உதவியிருக்கின்றது. அதாவது, அந்தரங்கத்திலும் பகிரங்கத்திலும் ஏக ஒற்றுமையும், ஒரேவிதமான அனுஷ்டானமும், ஜனபலமும், பரஸ்பர வாழ்வும் உண்டாவதற்காக வேண்டி தொழுகை, நோன்பு, பெருநாள், ஹஜ்ஜு, குத்பா, ஸலாம்சொல்லல், முதலியவைகளை ஏற்படுத்தி யிருக்கின்றது. உதாரணமாய் உலகத்திலுள்ள எல்லா முஸ்லிம் மகாஜனங்களும் ஒரேவிதமாய்த் தொழுவதற்குத் தம்தம் ஊர் மஸ்ஜிதுகட்குள்வந்து ஜமாஅத்தாகக் கூடுகிறார்கள்; இஸ்லாமியக் கட்டளைப்படி உலகத்திலுள்ள எல்லா முஸ்லிம்களும் ஒரேவிதமான பக்தியோடு தினம் ஐந்து நேரமும் ஒருமனப்பட்டுத் தொழுகின்றார்கள். ஜமாஅத்துத் தொழுகையின் தத்துவம் இஸ்லாமிய மக்களெல்லோரும் இறைவனது முன்னிலையில் சமமாக ஐக்கியமாய் அடிபணிந்து ஒழுகவேண்டு மென்பதாகும். ஜமாஅத்துடன் தொழுவதைப்பற்றி நம் சன்மார்க்கஷரீஅத்தில் பெரிதும் வற்புறுத்தப்பட்டிருப்பது வெளிப்படை. இஸ்லாத்தைப் போன்று இத்தனை சிறந்த தத்துவம் அமைந்த வணக்கம் வேறெந்த வர்க்கத்தாரின் மதத்திலுங் கிடையாதென்பது திண்ணம்.

இவ்வாறே ரமலான்மாதம் ஆரம்பமாகும்போது உலகத்தின் பல்வேறு பாகங்களிலுள்ள எல்லாமுஸ்லிம்களும் நோன்பு நோற்பதின் சந்தோஷத்தோடு முதற் பிறையைக் கண்டு ஏகமாய் ரமலான் மாதத்தை எதிர்கொண்டழைக்கின்றனர். அம்மாதம் 30-நாளும் நோன்பு நோற்றுக்கடைசியில் பெரு

நாளன்றுஏகமாகக்கூடி ஈதுத்தொழுகைநிறை வேற்றுகிருர்கள். இஸ்லாத்தின்ஐக்கியாசாரத் துக்கு இதுவும் ஒரு பெருங் காக்ஷியாகும்.

ஹஜ்ஜின் காலத்தில் முஸ்லிம்களுள் சக்தி யும் பணமும் உடையவர்கள் ஏராளமாய் பல விடங்களிலிருந்தும் வந்து மக்காவில் கூடி, இறைவனது முன்னிலேயில் வணங்குங்கால் யாவரும் ஒரேவிதமான உடையும் ஒரேவித மான அனுஷ்டானமுமுடையவர்களாய்க் கா ணப்படுகின்றனர்.

வாரந்தோறும் முஸ்லிம்கள் ஜும்ஆத் தொழுகைக்காக கூட்டமாகக்கூடி இஸ்லாமிய ஐக்கிய ஆசாரத்தின் பெருமையை அனுஷ் டிக்கிருர்கள். இவ்வாறே முஸ்லிம்கள் எத் தகைய வித்தியாசமுமில்லாமல் ஒருவர்க் கொருவர் "அஸ்ஸலாமு அலைகும்!" என ஸலாம் கூறி க்ஷேமங்கள் விசாரித்து விசுவா சம் பூணுகின்றனர். இதுபோன்ற தத்துவா சார நற்கருமங்கள் நம் இஸ்லாத்தில் ஏராள மாக இருக்கின்றன.

இஸ்லாம் மதமானது (ஷரீஅத்) ஆசாரத் துறையில் இதர எல்லா மதங்களைக் காட்டி லும் ஐக்கியத்தாலும், ஏகத்தன்மையாலும் சாஸ்வதமான நற்பெயரும் நற்கீர்த்தியும் பெற்றிருக்கின்றது. "உலமாக்கள், பெரி யார்கள், மகான்கள் கூறும் மார்க்க சம்பந்த மான நல்லுபதேசங்களைப் பக்திபூர்வமாய் ஏற்று நடப்பதில் முஸ்லிம்கட்கு இணையான வர்கள் உலகத்தில் யாருங் கிடையாது" என்று டாக்டர் லோத்ராப்ஸ்டார்டு என்பார் உறுதி கூறியுள்ளார்.

நம் உலகார்த்த ஐக்கியம்.

உண்மையாகவே முஸ்லிம் சமூகத்தவர் இஸ்லாமிய ஷரீஅத்தாசார அனுஷ்டானங் களை நிறைவேற்றுவதில் மிகமிக சிரேஷ்ட மான ஐக்கியம், சமத்துவம், ஒற்றுமை, சம ரஸம் ஆகியவற்றைப் பூரணமாய் உடையவர் கள்தாமென்பதில் சந்தேகமில்லை. இதைப் பற்றிப் பிற நாட்டாரும் பிற சமூகத்தாரும் நம்மைப் போற்றிப் புகழ்வதிலும் குறை வில்லை. ஆனல் நம் முஸ்லிம்கள் உலகசம்பந்த மான விஷயங்களிலும், பொருளாதாரத் துறைகள், தேச சமூக உரிமைகள் முதலிய வை சம்பந்தமான விஷயங்களிலும் பிளவு பட்டுச் சச்சரவிட்டுக்கொண்டு வருவதையுங் கண்டுதான் நாம் பெரிதும் கண்ணீர் வடிக்க வேண்டியிருக்கிறது.

உலகார்த்த விஷயங்களில் ஐக்கியம், பரஸ் பரம், கட்டுப்பாடு, ஜனப்பலம் முதலியன இல்லாத காரணத்தால் நம்மவர்கள் நோயால் பீடிக்கப்பட்டஅங்கஹீனர்களைப்போல் கிடக் கின்றனர். இத்துறையில் இக்கொடும் பிணி கள் நாளுக்குநாள் அபிவிருத்தி யடைந்து மலைபோல் வளர்ந்துகொண்டே செல்கிறது. சமூக வாழ்க்கையின் உயிர்க் கொல்லியாகிய இப்பிணிகளைப்போக்கி நம்சமூகத்தை க்ஷேம மடையச் செய்யவேண்டியது ஒவ்வொரு முஸ்லிமின் அத்தியாவசியக் கடமையாகும். இவ்வேற்றுமைகள், பிளவுகள் முதலிய பிணி களைப் போக்குவதற்குரிய சிகிச்சையை நாம் புரியாதிருந்து விடுவோமாயின் பின்னல் பெருங் கேட்டுக் காளாக நேருமென்பது வெளிப்படை.

ஒத்துழைப்பின் பயன்

"வயிற்றை நிரப்பவும் நாவுக்கு ருசி யளிக் கவுமென்று உடலின் இதர உறுப்புகளாகிய மூளை, கண், காது, கரம், கால் யாவும் பாடு பட்டுழைத்தே ஆகவேண்டு மென்பது இயற் கை. அங்ஙனமிருக்க "வாயிற்கும் நாவுக்கும் நலனைத் தேடித்தர நாங்களெல்லோரும் பாடு படுவதா? என்ற அழுக்காறுகொண்டு ஒற்று மையற்று இதர உருப்புகளெல்லாம் சில நாள் வேலை நிறுத்தம் புரிந்து விட்டதென்றும், ஒத்துழைப்பில்லாமல் போனதால் உடலின் உருப்புகள் போஜனமில்லாமல் சோம்பிவாடி இறுதியில் உடலுக்கும் உயிருக்கும் ஆபத்து வந்து விட்டதென்றும், ஆகவே ஒவ்வொன் றும் தமது கடமை புரிந்து ஒத்துழைப்பது தான் சிறந்ததென்றும்" சிறு பிள்ளைகள் கதைபடிப்பதுண்டு. ஒற்றுமை இல்லாத சமூகம் கதையில் குறிப்பிட்ட உடலின் கதி யைத்தான் இறுதியில் அடையும். ஏனெனின், பொதுவேலைகளில் ஒவ்வொருவரும் சோம் பலும், குரோதமுங்கொண்டு பிரிவினைப்பட்டு ஒத்துழைப்பின்றி இருந்து விட்டால், இறுதி யில் சமுதாய வாழ்வுக்கே ஹானி நேரிட்டு விடுமென்பது வெளிப்படை. எனவே ஒவ் வொருவருடைய உள்ளத்திலும் சமூகப்பற் றும், ஐக்கிய உணர்ச்சியும் நிலவியிருத்தல் வேண்டும். ஒவ்வொருவர் மனத்திலும் இவ் வுணர்ச்சியில்லாவிடின் சமூகத்தின் ஒவ்

வொரு நபரும் கூீனித்து மாளவேண்டிய தாக ஏற்படும்.

எந்தக் காரியத்தைச் சாதிப்பதற்கும் ஒத்துழைப்பு அத்தியாவசியமானதாகும். தனியான ஒரு தாரை மழைத்துளியினுல் ஒன்றும் செய்யமுடியாது. ஆனுல் ஏராளமான மழைத்துளிகள் ஒன்று சேர்ந்துவிடின் ஒரு பெரிய வெள்ளமாய்ப் புரண்டோடி குளத்தையும் நதியையும் நிரப்பி பசும்பயிர்களை விளைவிக்கும். அல்லது, ஒரு பெரிய வெள்ளப் பிரளயமாகிஎந்ததட்டுத்தடங்கலுக்கும்அடங்காது பெருந் தீங்கை விளைவித்துவிடும். இவ்வாறே தான் ஒரு பெரிய நற்காரியத்தைச் சாதிப்பதற்கும் கெட்ட சக்தியை ஒழிப்பதற்கும் எல்லோருடைய ஒத்துழைப்பும் வேண்டும். ஒற்றுமையின் மேன்மைகளும் தத்துவங்களும் அளப்பரியனவாகும். ஆகவே முஸ்லிம்களாகிய நாமெல்லோரும் இன்று முதல் சமூக ஐக்கியபலத்தைக் கருதிப் புத்துணர்ச்சி பெறவேண்டும். நம் சன்மார்க்க ஷரீஅத் கிரியைகளில் நாம் ஒற்றுமையாயிருப்பதே போல், உலகார்த்த பொருளாதார விஷயங்களிலும் ஒற்றுமை, ஐக்கியம், கட்டுப்பாடு, ஒத்துழைப்பு ஆகிய அம்சங்களைப் பூரணமாய்ப் பூண்டு இகபர ஜயமடைவோமாக!

சுல்தான் இப்னுஸுஊதின் அரசியல்.

நஜத் தேசம்

அரேபியப் பிரதேசத்திலுள்ள அரசாங்கங்களுள் மிகவும் வன்மை பொருந்தியதும், கீர்த்தி வாய்ந்ததுமாய் விளங்குவது நஜத் அரசாங்கமாகும். சுல்தான் அப்துல் அஜீஜ் இப்னு ஸுஊதவர்கள் இதன் அரசராவர். இத்தேசத்தின் நிலப் பரப்பு சுமார் 6-லக்ஷம் சதுரமைலாகும். அரேபியா அரசாங்கங்களுள் இதுதான் அதிகமான நிலப்பரப்புடைய தாகும். இந்தத் தேசத்தின் ஜனத்தொகையை சுமார் 20 லக்ஷம் என்று மதிப்பிடலாம். சுன்னத்து வல் ஜமாஅத்தினர்கள், வஹ்ஹாபிகள், ஷீஆக்கள், ஹன்பலீகள், முதலிய பலவகையினரும் ஆங்குக் காணப்படுகின்றனர். நஜத் பிரதேசத்தில் ரியாஜ், புரீதா, அனீஜா, ஹாயில், தர்மதா, ஷுக்ரா, மஜ்மஆ, ஹரீமலா, ஹீபூப், குதைப் முதலிய பல கீர்த்திவாய்ந்த ஸ்தலங்களிருக்கின்றன. முஸ்தீர், ஹரப், உதைபா, ஷபீஉ, தவாஸர், அஜ்மான், அவாஜிம், ஸஹூல், பனுமுர்ரா, கஹ்தா ஆகிய இடங்களும் ஆங்கு பெயர் பெற்றனவாகும்.

சில வருடங்கட்கு முன்னர் ஹிஜாஸ் அரசாங்கமும், நஜத் அரசாங்கமும் ஐக்கியமாகி, இப்போது அவை யிரண்டும் ஒரே செங்கோலுக்குட்பட்ட அரசாங்கமாயிருந்து வருகின்றது. இவ்விரு அரசாங்கங்களும் ஒன்று சேர்ந்ததன் பயனுய் நஜத் அரசாங்கமானது இது போழ்ந்து முன்னையைவிட அபிவிருத்தியடைந்து, 75000 சதுரமைல் அதிக பரப்புள்ளதாகவும், 3 லக்ஷம் அதிக ஜனத்தொகையுள்ள தாகவும் இருக்கின்றது.

நஜத் அரசாங்கச் சரிதை

நஜத் அரசாங்கச் சரிதையானது சென்ற 18வது நூற்றுண்டுக்கு முன்னிருந்துதான் ஆரம்பமாகின்றது. அதாவது, கி.பி. 1803ம் வருடத்தில் முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் என்பவர் அரப் தேசத்தில் சுன்னத்தை நிலைநிறுத்தப் போவதாகச் சொல்லித் தம் பிரசாரத்தை ஆரம்பித்தார். (அதாவது வஹ்ஹாபிக் கோஷ்டியைத் தோற்றுவித்தார்.) கி. பி. 1704ம் ஆண்டில் "தர்இய்யா" வின் ஷெய்காகிய முஹம்மத் பின் ஸுஊது (இவரே நஜத் அரசாங்கத்தின் முதன்முதலான அதிபர்) என்பவர் அப்பிரசாரத்தில் சேர்ந்துகொண்டார்.

பின்னர் 1746-ம் ஆண்டில் ஆங்கிருந்த பல கபீலாக்களுக்குள் சண்டை ஏற்பட்டுவிட்டது. அக்காலந்தொடுத்து ஸுஊது வர்க்கத்தாருக்கு நல்ல செல்வாக்கும் பலமும் ஏற்படலாயிற்று. ஆனுல் மக்கமா நகரின் தலைவர்கள் இன்னோர்களை ஹஜ்ஜுக்கு வர

விடாமல் தடுத்து விட்டார்கள். இங்ஙன மிருக்க, அக்கால நஜத் ஆதிபரான முஹம்மதின் ஸூஊது 1765-ம்வருஷத்தில் தமது நோக்கம் நிறைவேறுமல் காலஞ் சென்றுவிட்டார். அதன்பின்னர் அவரது குமாரராகிய அப்துல் அஜீஸ்பின் முஹம்ம இப்னு ஸூஊது என்பவர் தந்தையின் ஸ்தானத்துக் குரியவரானுர். இவர் 1795-ம் ஆண்டில் அல் ஹிஸாஉ, குதைப் ஆகியபகுதியை ஜயித்துக் கொண்டு பாரசீக வளைகுடாவின் கரைப்பிராந்தியத்தில் தமது ஆதிக்யத்தை நிலைநிறுத்திக் கொண்டார். ஆனுல் துருக்கியர்கள் ஸூல்தான் அப்துல் அஜீஜை எவ்வாறேனும்வெளி யேற்றி விடவேண்டுமென்று முயற்சித்துப் பார்த்தனர். எனினும், அவர்கள் அபஜயமே யடைந்தனர். இறுதியாக பக்தாதின்பாதுஷா இவருடன் தற்காலிகமான சமாதானஞ் செய்துகொண்டார். ஸூல்த்தான் அப்துல் அஜீஸ் அவர்களுக்கு நல்ல ஆதிக்யம் ஏற்பட்டு, அது மேலும் மேலும் பெருகிவருவதைக் கண்ட அக்கால மக்காவின் ஷரீப், சுல்தான் அப்துல் அஜீஸ் வகையினர் ஹஜ்ஜூக் குவரலாமென 1708-ம் வருடத்தில் அனுமதியளித்தார். சுல்தானும் மக்காநகரின் ஷரீபுடன் நேசங்கொண்டு, அவரது ஆதிக்யத்துக் குட்பட்ட இடங்களில் தாம் பிரவேசித்துத் தொந்திரை செய்வதில்லையென்று அறுதிமானமுஞ் செய்துகொடுத்தார். ஆனுல் இந்நேச சம்பந்தங்கள் நீடித்திருக்கவில்லை. ஷெய்கு கஜ்அல் என்பவர் வஹ்ஹாபிய காபிலா ஒன்றின்மீது படையெடுத்துத் தாக்கினுர். இதற்காகப் பழிவாங்கவேண்டுமென்ற ரோஷங் கொண்டு ஸூல்தான் அப்துல் அஜீஸ் 1802ம் ஆண்டில் கர்பலாமீது படையெடுத்துச் சென்று அங்குள்ள புண்ணிய ஸ்தங்களைக் கண்ணிய ஹீனப்படுத்தியதன்றி அவ்விடத்திய ஜனங்களையும் வாளுக்கிரையாக்கினுர்.

பின்னர் 1803-ம் ஆண்டில் சுல்த்தான் அப்துல் அஜீஸ் மக்காவின் ஷரீபுடன் கடும்போர் தொடுத்தார். இதன்காரணமாய்ஸூல்த்தான் அப்துல் அஜீஸ், தாயிபைக் கைப்பற்றிக் கொண்டார். இவர் அதேவருஷத்தில் கீர்த்தியான முறையில் ஹஜ்ஜையும் நிறைவேற்றியதுடன், அவ்விடத்தில் தமது வஹ்ஹாபிய துருப்புக்களையும் காவலாக வைத்திருந்தார். ஆனுல் அவர் திரும்பிச்சென்றவுடன் காலிப் ஷரீப் என்பவர் வஹ்ஹாபியச் சேனையை வெளியேற்றிவிட்டார். இச் சம்பவம் நிகழ்ந்தகாலத்தில், வஹ்ஹாபியர்கள் பாரசீக வளைகுடாப் பகுதியின்மீது ஆதிக்யம் வகித்தவண்ணம் மேலும் மேலும் அபிவிருத்தியடைந்து இறுதியாகப் பஹ்ரைனையும் பிடித்துக் கொண்டனர்.

சுல்த்தான் அப்துல்அஜீஸூக்குப்பின்னர், ஸூஊதுபின் அப்துல் அஜீஸ் என்பவர் அவருடைய ஸ்தானத்தில் அமர்ந்தார். இன்னவர் 1805-ம் வருடம் மதீனு முனவ்வரா, மக்கா முஅல்லமா இவ்விரண்டு நகரங்களையும் கைப்பற்றிக்கொண்டு ஷரீப் காலிபையும் தமக்குக் கீழ்படியும்படி செய்து விட்டார்.

குத்பாவில் ஷரீப் காலிபுடைய நாமம் சேர்த்து ஓதப்பட்டு வந்ததை நீக்கி விடும்படி ஏற்பாடு செய்து விட்டார். மேலும் துருக்கிய தேசத்திலிருந்து ஹஜ்ஜூ செய்ய வருபவர்களையும் தடைசெய்து விட்டார். இது வன்றித் தமது வாதத்தை ஏற்றுக் கொள்ளுமாறு கலீபாவை அழைத்தார். ஆனுல் இக் கோரிக்கையை கலீபா நிராகரித்து விட்டமையால் 1810-ம்ஆண்டில்ஹூரான் என்னும் ஊர்கொள்ளையிடப்பட்டது. பாரசீகக்குடாப் பகுதியிலும் பல அட்டூழியங்கள் நடந்தன. அக்காலை அப்பகுதியைப் பாதுகாப்பதற்காக ஆங்கிலேயர்கள் தமது பட்டாளமொன்றை அனுப்பி வைத்தார்கள். இப்பட்டாளம் "ராஸூல் கைமா" என்னு மிடத்தைக் கைப்பற்றிக்கொண்டு ஸூஊதியச் சேனையை சின்னுபின்னப்படுத்தி விட்டது.

இதே காலத்தில், எகிப்தின் அதிபராயிருந்த ஸூல்த்தான் முஹம்மத் அலீபாஷா, வஹ்ஹாபியர்களை எதிர்ப்பதற்காக வென்று சேனைகளை அனுப்பி வைத்தார். எனவே, தூஸூன்பாஷா என்பவர் 1811-ல் யன்பஉல்பஹர், யன்பஉல்பற் ஆகிய இருபகுதிகளையும்கைப்பற்றிக்கொண்டார். 1812-13-ம் வருடங்களில் இன்னவர் மக்கா, மதீனு ஆகிய பிரதான நகர்களையும் பிடித்துக் கொண்டார்.

1813-ம் வருடம் முஹம்மத் அலீபாஷா தாமே ஜித்தாவுக்கு வந்தா ரெனினும் ஸூஊதியருடன் சமரஸஞ் செய்துகொள்ள முடியவில்லை. 1813-ம்வருடக்கடைசியில் தூஸூன் பாஷா 'துர்பா, மீது மற்றெருமுறை படையெடுத்தார். இதில் அவர் வெற்றி பெறவில்லை

இதோடு எகிப்தியர்களுடைய யுத்த முயற்சிகள் முடிவடைந்து விட்டன.

பின்னர், 1814-ம் ஆண்டு ஸுஊது பின் அப்துல் அஜீஸ் மரணமடைந்து விட்டார். அவருக்குப்பின் அவரது புதல்வரான அப்துல்லாபின் ஸுஊது பட்டத்துக்கு வந்தார். அவருக்குப்பின் முஹம்மத் அலீபாஷாவும் போரில் இறங்கினர். 1815-ம் ஆண்டில் அவர் துர்பாவைக் கைப்பற்றிக்கொண்டு, அவீர் வழியாய் முன்னேறி, கன்பஜாவைக் கடந்து மக்காவுக்கு வந்து சேர்ந்தார். இதே ஆண்டு மார்ச்சுமாதம் தூஸுன் பாஷாவும்நஜதுக்கு வந்துசேர்ந்து, "அர்ராஸ்" என்னுமிடத்தைக் கைப்பற்றிக் கொண்டார். இங்கு இவருக்கும் அப்துல்லாபின் ஸுஊதுக்கும் தற்காலிகமாக சமாதானம் ஏற்பட்டது.

1816-ம் ஆண்டில் முஹம்மத் அலீ பாஷாவின் புதல்வரான இப்ராஹீம் பாஷா எகிப்திய சேனைகளின் உதவிகொண்டு ஓராண்டுவரை கடும்போர் தொடுத்துவந்ததன் பயனாய் "தர்இய்யா" என்னும் பகுதியை அடைந்தார். இன்னவர் 1818-ம் ஆண்டில் நஜ்தின் தலைநகர்மீது படையெடுத்து அதைக் கைப்பற்றிக்கொண்டுஸுல்தான் அப்துல்லா, முஹம்மத்பின் அப்துல் வஹ்ஹாபு ஆகியவர்களின் குடும்பத்தினரைக் கைதுசெய்து அவர்களையெல்லாம் கெய்ரோவுக்கு அனுப்பிவிட்டார்.

1819-ம் ஆண்டில் தூஸுன்பாஷா நஜ்தை விட்டுத் திரும்பினர். இவர் திரும்பிய சிறிது காலத்துக்கெல்லாம் ஸுல்தான் அப்துல்லாத்வின் சகோதரரான முஷாரீ என்பவர் மீண்டும் தர்இய்யாவில் தமது அரசாக்ஷியை நிலைநிறுத்தினர். ஆயினும் ஹுஸைன்என்ற அதிபர் சிறிது காலத்துக்குள்ளேயே தர்இய்யாவைச்கைப்பற்றிக் கொண்டு முஷாரீயையும் கைது செய்தார்.

இவ்வாருக எகிப்திய போராட்டங்கள் நடைபெற்று வந்த காலத்தில் அப்துல்லாபின் முஹம்மத் என்பவரின் புதல்வரான "தர்க்கி" என்பவர் ஸுரைருக்கு ஓடிப்போயிருந்தார். முஷாரிக்குப்பின் தாமே ரியாஜில் சுயேச்சாதிகாரம் செலுத்தலாமென இவர் பிரயத்தனப்பட்டார். ஆனால் எகிப்தியர்கள் அன்னவரை அவ்விடத்தைவிட்டுத் துரத்திவிட்டார்கள். அன்னவர் 1822-ல் மீண்டும்கிளம்பி ரியாஜிலிருந்த எகிப்திய சேனைகளைத் தாக்கித் தொல்லை விளைவித்ததல்லாமல், முஹம்மத் அலீபாஷாவுக்கு வருடாந்திரத்தொகை தருவதாகப் பேசிக்கொண்டு அவரிடம் சமாதானஞ்செய்து கொண்டார். இவர் 1830-ல் கிளம்பி, அல்ஹஸாவில் ஆதிக்யங்கொண்டிருந்த துருக்கியரை விரட்டி அதைக் கைப்பற்றி, பஹ்ரைனையும் கைவசமாக்கிக்கொண்டார். அது முதல் தான் நஜத் அரசாங்கத் தலைநகர் 'தர் இய்யா' வைவிட்டு 'ரியாஜு'க்குமாற்றிக் கொள்ளப்பட்டது.

1834-ம் வருடத்தில் தர்க்கி பின் அப்துல்லா என்பவரை முஷாரீபின் அப்துர்ரஹ்மான் என்பவர் முறியடித்து ஒழித்துவிட்டார். அரசாங்கம் அவர் கைக்குக் கிடைத்து 40 நாட்கள் தான் ஆயின. அதற்குள்ளாகவே அவர் பைஸல்பின் தர்க்கி என்பவருடைய கரத்தால் ஹுபூப் என்னுமிடத்தில் மரணமடைந்தார். இதற்குப் பின் பைஸல் என்பவரே அரசரானர்.

நஜ்திய வம்ச வழியிலுள்ள மூன்ருவது அதிபதியாகிய ஸுஊதின்புதல்வர் காலித் என்பவர் எகிப்தியப்பட்டாளங்களின் உதவியைக்கொண்டுபைஸலுக்குவிரோதமாகலகஞ் செய்தார். இதனல் ரியாஜில் பைஸலுக்குத் தோல்வி ஏற்பட்டது. எகிப்தியசேனையின் தளபதியான குர்ஷீத் பாஷா என்பவர் 1830-ல் அத் தகீதம் என்னுமிடத்தில் இரண்டாம் முறையும் அன்னவரை முறியடித்துச் சிறைசெய்து எகிப்துக்கு அனுப்பிவிட்டார். எனவே காலித்பின்ஸுஊது நஜ்தின் அதிபதியாகிவிட்டார். ஆனல் பக்கபலமாக விருந்த எகிப்திய ராணுவம் திரும்பிச்சென்ற பிறகு 1841-ம் வருடம் அப்துல்லாபின் ஷனியான் ஆலே ஸுஊது அவர்கள் காலிதை ரியாளை விட்டும் வெளியற்றிவிட்டுத்தாமே அரசராகிவிட்டார். இங்ஙனம் பதவி வகித்து ஒருவருடங்கூட ஆகவில்லை. இதற்கிடையில் எட்டாவது அதிபரானபைஸல் என்பவர் அவரை (அப்துல்லாபின்ஷனியானை)பிடித்துச் சிறையிட்டார். இந்தபைஸல்பின் தர்க்கீமுன்னெருமுறைதுன்பப்பட்டு அனுபவம் பெற்றுள்ளாராதலால் இம்முறை மிகஜாக்கிரதையாக நடந்து கொண்டு, இரண்டாவது முறையாக நஜ்தில்

தம்முடைய அரசாக்ஷியை நிறுவலானர். இவர் 1865-ம் வருடம் காலஞ் சென்றூர்.

பைஸல்பின் தர்க்கி மரணமடைந்த பின்னர் அவரது புதல்வர் அப்துல்லா பின் பைஸல் தந்தையின் சிம்மாசனத்தில மர்ந்து ஆக்ஷிபுரியலானுர். இங்ஙனம் ஆக்ஷிபுரியத் தொடங்கிய 6 வருடத்துக்குப்பின்-1871-ல் அவரது சகோதாரான ஸுஊதுபின் பைஸல் என்பவர் அவரைச் சிம்மா சனத்தை விட்டு இறக்கி விட்டார். ஸுஊதுபின் பைஸலுடைய காலத்தில் தான் துருக்கியர்கள் அல்ஹிஸாஉ, குதைப் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டனர்.

ஸுஊதுபின் பைஸல் மரணமடைந்தபின்னர், அவரது சோதரரான அப்துல்லாபின் பைஸல் 1874-ல் சிம்மாசன மேறினுர். இங்ஙனம் இவர் பல்லாண்டுகள் வரையில் அரசு புரிந்து வந்தார். இதே ஆண்டில் தான் இவர் முஹம்மத்பின் ரஷீத் ஹாயுலீ என்பவருடன் யுத்தம் புரிய வேண்டியதாயிற்று. இங்ஙனம் இவர் யுத்தப் பிரயத்தனங்களில் ஈடுபட்டிருந்ததைத் தக்க சமயமெனக் கண்ட, ஸுஊதின் புதல்வர்கள் சிம்மாசனத்தைத் கவர்ந்துகொண்டு அப்துல்லாவை தேசப் பிரஷ்டம் செய்துவிட்டனர். அம்மக்களுள் ஒருவரான முஹம்மத்பின் ஸுஊது என்பவர் அரசுபுரியலானுர். இங்ஙனம் சின்னுட்களேதாம் கழிந்தன. இதற்கிடையில் முஹம்மத்பின்ஸுஊதுடைய சிறிய தந்தையான அப்துர்ரஹ்மான் பின் பைஸல் என்பவர் ராஜ்ஜியத்தைத் தன் வசப்படுத்திக்கொண்டார். ஆனுல் ஒருவருடஞ் சென்றபின் முஹம்மத் பின் ரஷீத் என்பவர் அப்துர் ரஹ்மானை சிம்மாசனத்தை விட்டிறக்கிவிட்டு, அப்துல்லா பின் பைஸலை அச்சிம்மாசனத்தில் உட்கார வைத்தார். இது அன்னுர் மூன்றும்முறை சிம்மாசனம் ஏறியதாகும். இவர் இரண்டு வருடகாலம் அரசு புரிந்தபின் 1880-ம் வருடத்தில் காலஞ்சென்றுவிட்டார். இவரது மரணத்துக்குப் பின் (முஹம்மத்பின் ரஷீத் என்பவர்) முஹம்மத்பின் பைஸலைப் பட்டத்தில் அமர்த்தினுர். இவ்விதம் அரசர்களை நியமிக்கும் பாத்தியதையானது ஆங்கு முஹம்மத்பின் ரஷீதுடைய ஆதீனத்திலிருந்து வந்தது. முஹம்மது இப்னுபைஸலும் காலஞ் சென்று விட்டபடியால், இறுதியாய் ரியாளில் முஹம்மத் பின்ரஷீதுடைய நிர்வாகிகளே அவ்வரசாக்ஷியை நடத்திவந்தார்கள்.

தற்போதைய அரசர்

ஸுஊதிய வம்சத்து இறுதிமன்னராய், இதுகாலைவிளங்குபவர் ஸுல்த்தான் அப்துல் அஜீஸ் ஆலெஸுஊது அவர்களே யாவர். இந்தப் பெரியாரே தமது மூதாதைகளுடைய நலிந்து அழிவுற்றுப் போய்க்கிடந்த அராபிய அரசாங்கத்தை உயிர்ப்பித்து நிலை நிறுத்திய வராவார்.

பல்லாண்டுகட்குமுன் ரியாள் பிரதேசத்தில் முஹம்மத் பின் ரஷீத் என்பவர் ஹாயில் என்னும் பகுதிக்கு அதிபராயிருந்தார். இவர் தம் இஷ்டம்போல் தமக்குப் பிரியமானவரை அரசராக ஆக்கிவைத்துக் கொண்டிருந்தார். ஆனுல், தற்போதைய ஸுல்த்தான் அப்துல் அஜீஸ் இப்னுஸுஊதவர்கள் 1902-ம் ஆண்டில் கோயத் ஷெய்குடைய சகாயத்தைக் கொண்டு ரியாஜ்மாகாணத்தை தமது ஆதீனத்திற் கொண்டுவந்து விட்டனர். இது தொடுத்து அநேக வருடங்கள்வரை எதிர்ப்புகளையெல்லாம் வெற்றிகரமாய் எதிர்த்தாண்டு கொண்டு வந்தார்.

அவரை எதிர்த்து நின்றவர்களுள் ஒருவரான இப்னுரஷீத் என்பார் துருக்கியரது உதவி பெற்றிருந்தா ரெனினும், ஹாயிலில் ஜனங்கட்குள்ளாகவே அமைதியின்மை பரவியிருந்தமையால் அவரால் ஒன்றுஞ் செய்ய முடியவில்லை. ரியாளில் சுதந்திரத்துடன் கூடிய நஜ்த் அரசாங்கம் ஏற்பட்டுவிட்டது. தற்போது இப்னுரஷீத் நஜ்த் சர்க்காரின் பாதுகாப்பில் இருந்துவருகின்றூர். அவரது அந்தஸ்திற்கேற்ப வசித்து வருவதற்குள்ள வசதிகளை யெல்லாம் ஸுல்த்தான் அப்துல் அஜீஸ் இப்னு ஸுஊதே இதுகாலை அளித்துவருகின்றூர்

சுல்த்தானின் அறிவுசுபாவம்.

ஸுல்த்தான் அப்துல் அஜீஸ் ஆலெஸுஊதவர்கள் மிகத்தீக்ஷண்ணிய அறிவும்,பரந்த நோக்கமும் உடைய வேந்தராவர். அவருக்குக்கூர்ந்த அறிவு, நற்குணசுபாவம், வாக்குவன்மை முதலியன இயற்கையாகவே அமைந்திருக்கின்றன. சுல்த்தானுக்கு கல்விஞான ஆராச்சியிலும் தக்க அனுபவ ஆற்றலுண்டு. சிற

ப்பாக இக்கால இராஜதந்திரங்களை நன்கு அறிந்திருக்கிறார்.

ஐரோப்பாவைப் பற்றியும் அவர் நன்கறிந்திருக்கிறார். ஒவ்வொரு விஷயத்தையும் அவர் நன்கு பரிசீலனை செய்து பார்ப்பார். சுல்த்தானவர்கள் அன்னிய வர்க்கத்தாரின் பலத்தைக் கண்டு சிறிதும் அஞ்சுவது கிடையாது. பிறநாட்டுப் பிரதிநிதிகளிடம் சிறிதும் அச்சமில்லாமல் தமது சொந்த அபிப்பிராயங்களை எடுத்துக் கூறுவார். அவர் ஒரு நஜ்தியராயிருப்பினும், அவருடைய சுபாவத்தில் குரோதமென்பதே கிடையாது. அவர் ஷீஆ வர்க்கத்தாருக்குப் பகைவர் என்று கூறப்படுவது தவறு. அல்ஹிஸாப் பகுதியில் 30 ஆயிரம் ஷீஆக்கள் சுல்த்தானவர்களுடைய அரசாங்கத்தில் எல்லாவித உரிமைகளோடு வதிந்திருந்துவருகின்றனர். சுல்த்தானவர்கள் எந்த வர்க்கத்தார்மீதும் துவேஷங் கொள்வதில்லை.

ஆங்லேயருடன் சம்பந்தம்

பரிசுத்த ஹிஜாஸின் பரிபாலன விஷயமாக முஸ்லிமல்லாத அன்னிய அரசாங்கங்களுடன் நேச சம்பந்தங் கொள்வது அத்தியாவசியமாகும். மகாயுத்த முடிவு காலம் வரைக்கும் அராபியரும் ஆங்கிலேயரும் நெருங்கிய நேசம் பூண்டவர்களாக தாமிருந்தனர். அக்காலே அராபியர் ஆங்கிலேயர்க்கு ஏராளமான சகாயம்புரிந்தனர். இதற்குப் பிரதிபலனைப் ஆங்கிலேயர் சொற்ப தொகையும் கொடுத்துதவினர். ஆனால் சண்டை முடிந்தபின் எவ்வளவு பிரதிபலன் தரவேண்டுமோ அதற்கேற்பத்தரவில்லை. ஆகவே, அதன்பின் இருசாராரின் சம்பந்தங்களில் அதிருப்தி ஏற்பட்டுவிட்டன. ஆனால் பகிரங்கத்தில் மாத்திரம் எத்தகைய குறைபாடும் தென்படாததுபோல் காணப்பட்டது.

ஆங்கிலேயர்ஸுல்த்தானவர்கட்குபலமுட்டுக் கட்டைகளும் போட்டுள்ளனர். அதாவது:—ஸுல்த்தானுடைய பகைவர்களை தேசாதிபதிகளாகச் செய்து அவரைச் சூழ்ந்து தேசாளும்படியான தந்திரம் செய்யப்பட்டுள்ளது. இதனால் ஸுல்த்தான்விரோதிகளால் சூழப்பட்டவரேபோ லிருக்கின்றனர் என்று கூறவேண்டி யிருக்கிறது. உதாரணமாக, இராக்கில் பைஸலும், ஷர்கெஅர்தனில்அமீர்அப்துல்லாவும் சுல்த்தான்இப்னுசுஊதுக்குக் கடும்பகைவர்களாவர்.

இதற்குச் சில ஆண்டுகட்குமுன் ஆங்கிலேயர்களின் ஆடும் பொம்மையாகயிருந்த ஷரீப் ஹுஸைனும் சுல்த்தான்இப்னுஸுஊதுக்கு விரோதமாகவே யிருந்தார். அவரது ஆதீனக்காலம் இப்பொது இல்லாமு போயிற்று. எனினும் அவருடைய ஆட்கள் இன்னுமுள்ளனர். இவ்வாட்கட்கு ஆங்கிலேயர்களின் பொருள் சகாயம் ஆகியவை கிடைக்கின்றன. இவ்வேற்பாட்டின் நோக்கமாவது, சுல்த்தானவர்கள் ஆங்கிலேயர்கட்கு எதிரிடையாக யாதொன்றும் புரியக்கூடா தென்பதேயாகும்.

தான தர்மமும் வீண் விரயமும்.

“நீங்கள் (திருப்தியாய்) உண்ணுங்கள், பருகுங்கள், ஆனால் வீண் விரயஞ்செய்யாதீர்கள். நிச்சயமாக ஆண்டவன் வீண் விரயஞ்செய்வோரை விசுவாசிப்பதில்லை.” (குர்ஆன்)

“ஆண்டவன் உங்களுக்கு சாதனமாய் அளித்திருக்கும் பொருட்களை மடையர்களிடம் ஒப்புவித்து விடாதீர்கள் (குர்ஆன்)

செல்வம் நல்வழியில் செலவளிக்கப் படுவதற்காகத்தான் அருளாளனான இறைவனால் நமக்கு அளிக்கப்படுகின்றது. ஆனால் அச்செல்வத்தை எவ்வாறு செலவு செய்வது? எவ்வழியில் செலவு செய்வது கூடாது? என்பனவற்றைமுதலில்தெரிந்துகொள்ளல்வேண்டும். தவிர செல்வந்தர்கள் இதரஜனங்களுடன் எவ்வாறு பழகி அன்னியோன்னிய மாயிருத்

தல் வேண்டும்? எந்தெந்த துஷ்டகாரியங்களினின்றும் விலகியிருத்தல் வேண்டும்? என்பனவற்றையும் உணர்ந்து கொள்ளல் வேண்டும். இதைத்தான் உலகவாழ்க்கை, அனுபவஞானம், பொருளாதாரவியல் எனக்கூறப்படுகின்றது .இஃது நற்குண நல்லொழுக்க முறைகளில் சிறந்தனவுமாகும் மேலே குறிப்பிடப்பட்ட திருவாக்கியங்களி லொன்றில், அனுவசியமாய் திரவியத்தை விரயமாக்கி கஷ்டநஷ்ட மடைய வேண்டாமென்றும், மற்றொன்றில், பணத்தை குடி, விபசாரம், சூதாட்டம், பாபகாரியம் தீயவழி இவைகளில் வீண் விரயஞ்செய்யும் மடையர்களிடம் ஒப்புவித்துவிட வேண்டாமென்றும் எச்சரிக்கப் பட்டிருப்பதை நன்கு தெரிந்து கொள்ளலாம். மற்றொரு திருவாக்கியத்தில், "உங்களுடைய கரங்கள் கழுத்தில் சுருட்டப் பட்டிருப்பதே போன்று அவைகளை சுருக்கிக் கொள்ளவும் வேண்டாம். அவைகளை அளவுக்கு அதிகமாக நீட்டிவிடவும் வேண்டாம்." என்று ஆண்டவன் நமக்கு எச்சரிக்கை செய்கின்றான்.

இவற்றினின்று நமக்கு தெரிய வருவதாவது, அளவுக்கதிகமாய் சிக்கனஞ் செய்து உலோபித்தனத்தில் வீழ்ந்துவிடலாகாதென்பதும், அளவுக்கதிகமாய் தவறான வழிகளில் பணத்தை வீண் விரயஞ்செய்து; மனக்கவலையும் பணக்கஷ்டமும் அடையலாகா தென்பதுவுமாகும். ஆகவே ஆண்டவன் நமக்களித்துள்ள செல்வத்தை பெட்டியில் போட்டு பூட்டி வைக்காமல் புண்ணியமான காரியங்களில் மிதமாக தான தருமஞ்செய்து நலம் பெறல் வேண்டும்.

சிக்கனமும் சம்பாத்தியமும்.

செல்வச் சீர்திருத்தம் அல்லது சிக்கனம் எனப்படுவது வருவாயைவிட அதிகமாக செலவு செய்துவிடாதிருப்பதும், வரும்படியை அபிவிருத்திச் செய்துகொண்டு செலவை ஓரளவு சுருக்கிக்கொள்வதுவுமாகும். ஒவ்வொருவரும் தமக்குரிய சொத்து சுதந்திரத்தையும், வருமானத்தையும் அபிவிருத்திச் செய்துகொள்வதில் கவலையும் சிரத்தையும் எடுத்துக்கொள்வது பிற்காலச் சாதனமாகும். அறியாமையினால் வீண் விரயஞ் செய்வதும், ஆடம்பரம், பெயர்பகட்டு, பெருமை ஆகியவற்றிற்காக வீண் செலவு செய்வதும் பிற்காலத்தில் தனக்குதானே கேட்டை விளைவித்துக்கொள்வதாகும். எப்போதும் தமக்கு சவுகரியத்தையும் கவலையின்மையையும் அளிக்கும் வரவு செலவு முறைமையையே ஒவ்வொருவரும் கைகொள்ளல் வேண்டும்.

பக்ஷிக்கு பறக்குஞ் சக்தி யிருந்தபோதிலும் அது தனது அந்தஸ்தையும் கவனியாது வானத்தைப்போய் தொட்டுவிடுவோம் என்ற கெர்வங் கொண்டு நீண்ட தூர உயரம் பறந்துவிடுமாயின் பின்னர் அது திரும்பி இறங்கிவரசக்தியற்றுப்போய் குப்புறவீழ்ந்து பூமியில் மோதி மாண்டுவிடுமென்பது யாவருமறிந்த விஷயம். இவ்வாறேதான், சொத்துச் செல்வம் படைத்தோர் தமக்குத்தான் ஏராளமான சொத்து இருக்கிறதே, அபரிமிதமாய் செலவிடுவோமென்று கருதிவீண்விரயத்தைக் கைகொள்ளுவார்களாயின்; கூடியசீக்கிரத்தில் தங்கள் திரளான பூஸ்திதிகளும் செலவாகிப் போய், உண்ண உணவின்றியும் உடுக்க உடையின்றியும், நிற்க நிழலின்றியும் வறுமையாளராகி பரிதபிக்க நேரிடுமென்பது வெளிப்படை. இஃதன்றி, ஒருவன் ஆடம்பரமான செலவு செய்தும் ஆர்பாட்ட நடத்தை நடந்தும் வருகின்றான் என்பதைத் தெரிந்து, அவனுடன் போட்டிப் போட்டுக்கொண்டு நாம் வீண் விரயச் சேஷ்டையில் இறங்கி விடுவோ மாயின், குறுகிய ஒற்றையடிபாலத்தில் இருமூர்க்களும் சமமாய் நின்று போட்டிப் போட்டுக்கொண்டோடி இருவரும் இடிபட்டு வெள்ளத்தில் வீழ்ந்து மாளும் உவமைப் போல் சீர் கெட்டு மாய்வோம்.

இவ்வாறே இக்காலை அறிவும் விவேகமுமில்லாத எத்தனையோ பணக்காரர்கள், போதிய வரும்படியில்லாமல் வீணடம்பரங்கள் புரிந்துகொண்டோ, தட்டு முட்டுச் சாமான்களை அளவுக்கதிமாய் வாங்கி நிறப்பிக் கொண்டோ, உடை நகை முதலிய சிங்காரங்கட்கு அபரிமிதச் செலவு புரிந்துகொண்டோ, விபசார சேஷ்டையில் ஈடுபட்டுக் கொண்டோ, தீயநடத்தையுடைய தோழர்களுடன் கெட்டலைந்துகொண்டோ, பெருமை ஆடம்பரங்களில் பிறருடன் போட்டிப்போட்டு பணத்தைப் பலதுறையிலும் அள்ளி இறைத்து கொண்டோ, கலியாண விசேஷக் காலத்தில் மற்றோர்புரிந்த ஆடம்பரத்தைபோல் தாமும் புரியவேண்டு

மென்ற எண்ணங்கொண்டு பணத்தை பாழ்படுத்தி ஆகாத கருமங்களைப் புரிந்துகொண்டோ, சீர்கெட்டு நாளுக்குநாள் க்ஷீணதிசையடைந் துழல்வதை நாம் கண்ணாரக் காண்கின்றோம். இஃதொரு பக்கலிருக்க, ஒரு சில செல்வந்தர்க ளெனப்படுவோர் "ஹாத்திம்தாயி" க்கு கிடைத்ததுபோன்ற கீர்த்தி தமக்குங் கிடைக்கவேண்டுமென்ற சிந்தை கொண்டு ஆவசியமற்ற காரியங்கட்கும், தம் சமூகத்துக்கோ, மார்க்கத்துக்கோ, மதக்கல்விக்கோ, ஏழைமக்களுக்கோ ஒருசிறிதும் பயனில்லாத வழிகளில் பணத்தைப் பாழ்படுத்தி வீணாடம்பரங்கள் செய்து கவரவப் பட்டங்களைப் பெற்று பெருமை வாழ்க்கைப் பூணுகின்றன ரென்பது உலகறிந்த விஷயம். இஃதெல்லாம் நம் சமூகத்துக்கோ, மதத்துக்கோ, ஆன்மார்த்தத்துக்கோ, பரலோக வாழ்க்கைக்கோ நன்மைகளை அளிக்காதென்பது முக்காலுந் திண்ணமே யாகும். இஃதன்றி வேசையர்க்கும், கச்சேரிகட்கும், ஆடம்பர வைபவங்கட்கும் தமது தீயசகாக்கட்கும், பணத்தை வாறி இறைத்து தத்தம் செய்துவிட்டு அதனால் தமக்கு தருமவான் கொடைவள்ளல் என்ற பெயர் கிடைக்குமென்று நம்பிக்கிடப்பாரும் இல்லாமலில்லை.

வீழ்ச்சிக்கு காரணம்

நம்மவர்களின் வீழ்ச்சிக்கும், க்ஷீணகதிக்கும் ஈண்டு கூறப்பட்டது போன்ற வீணாடம்பரச் செலவுகளும், துர் நடத்தைகளும் தீய எண்ணங்களுமே காரணமாகும், நம் இஸ்லாம் மதம் நமக்கு போதித்த மிதச் செலவு, சிக்கனம், தானதருமம், நேர்மையான வாழ்வு ஆகியவற்றினை இதர சமூகத்தினர் பின்பற்றி முன்னேற்றத்துக்கு வருகின்றனர். ஆனால் நாமோ நம் சன்மார்க்க நற்போதனையைப் புரக்கணித்து ஏழ்மையிலும், க்ஷீணத்திலும், இழிவிலும் கிடந்துழல்கின்றோம். நம் சத்திய சன்மார்க்க போதனைகளையும், சமூக சீர்திருத்த உபாயங்களையும், மிதமான செலவுகளையும், சிக்கன வாழ்வையும், பொருளாதார நலனையும், சம்பாத்திய அபிவிருத்தியையும், உதார குணங்களையும், நற்குண நல்லொழுக்கங்களையும் பற்றிப் பிடித்து ஆண்டவன்மீது பூரண நம்பிக்கை வைத்து நடந்துவந்தால் தான் நாம் முன்னேற்றமும், பரிபக்குவமும், நன்மையும் அடைந்துய்ய இயலும்.

விவேகமில்லாப் பணக்காரர்கள் வீணாடம்பரங்களில் செலவிடும் பணங்களில் ஒரு சொற்பத்தை சமூக சீர்திருத்தக் காரியங்களிலோ, சன்மார்க்கக் கல்வி யபிவிருத்தி வழிகளிலோ,ஏழை அனாதை சம்ரக்ஷண வழிகளிலோ செலவிட்டால் நமது சமூகம் எம்மட்டும் க்ஷேமமும் நலனும் அடைந்து முன்னுக்கு வருமென்பதை சொல்லவும் வேண்டுமோ? ஏனோ நம்மவர்க்கு இந்நல்லெண்ணம் உதிப்பதில்லை?

ஆண்டவனின் எச்சரிக்கை.

இறைவனின் கட்டளைகளை உதாசீனஞ் செய்து மனம்போன போக்கின்படி வீணாடம்பரங்களிலும், புண்ணியமற்றவழிகளிலும் ஆண்டவன் அளித்த பொருட் பாக்கியங்களை செலவிட்டுத் தொலைக்கும் அவிவேகிகள் தங்களை எல்லாம் வல்ல இறைவன் இறுதித் தீர்ப்பு நாளின்போது கேள் விகணக்குக் கேட்கமாட்டானென எண்ணிக் கொண்டுள்ளனர்போலும்! நன்மை தீமைகளின் ஒவ்வொரு அணுவத்துணையைப் பற்றியும் கேள்வி கேட்கும் அவ்வாண்டவன், உலகத்தில் தானளித்த பொருட்பாக்கியங்களை மக்கள் எந்தவழியில் செலவிட்டனர் என்பதற்கு, ஒவ்வொரு சிறு நாணயத்தைப்பற்றியும் கேள்வி கணக்கு கேட்டு நற்கூலி அல்லது தண்டனையை அளித்தே தீருவன்.

"உங்களுள் ஒருவர்க்கு மரணம் வந்தணுகுவதற்கு முன்பாக, ஆண்டவன் உங்கட்கு அளித்துள்ளவற்றினின்று (செல்வத்தினின்று எளியோர்க்கு தானதருமமாய்) செலவு செய்யுங்கள். (அங்ஙனமின்றேல்) பிற்காலத்தில், ஆண்டவனே! நெருங்கிய மரணகாலத்தை எங்களுக்காக சிறிது பிற்படுத்தி வைக்கலாகாதா? அவ்வாறு செய்யப்படுமோயின் சத்கருமம் புரிந்து உத்தமர்களில் நின்று மாய்விடுவோமேன்று (பாவிகள்) கூறுவர்.'' (குர்ஆன்)

இது ஆண்டவனின் எச்சரிக்கையாகும். தான தருமத்தைப்பற்றி நற்போதனைப் புரிந்துவிட்டு பிற்காலத் தண்டனையைப்பற்றி ஆண்டவன் நமக்கு அறிவுறுத்தியுள்ளான். ஆகவே இவ்வுபதேசங்களையும், எச்சரிக்கைகளையும் ஊன்றி கவனித்து நடந்துகொள்ள வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் அத்தியாவசியமான கடமையன்றோ?

தான தருமம்.

வீண் ஆடம்பரங்களைப் புரிந்துழன்று தம் செல்வங்களில் ஆயிரக்கணக்காய்பாழ்ப்படுத்தும் விவேகமிலா தனவந்தர்கள் அவ்வித விரயங்களைச் சுருக்கி சில ஆயிர ரூபாய்களை ஒரு மதரஸாவுக்கோ, கலாசாலைக்கோ, அனுதைச் சாலைக்கோ, பொதுச் சேவை புரியும் பொது ஸ்தானங்கட்கோ, சமூக ஊழியம் புரியும் முஸ்லிம் பத்திரிகைக்கோ, இஸ்லாம் பிரசாரச் சபைகட்கோ அளித்தால் நமது சமூகமும், மதமும் முன்னுக்கு வருமல்லவா? இவ்வித அரிய தருமத்தால் இத்தரணியில் கீர்த்தியும் கண்ணியமும் கிடைப்பதோடு, பரலோகத்திலும் ஆண்டவனின் தனிப்பட்ட அருளும் நற்பாக்கியங்களும் சுகானந்தமும் கிடைக்கு மென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

நமது எதிர்மத வாதிகளான கிறிஸ்துவர்களையும் ஹிந்துக்களையும் மற்றோரையும் சிறிது கூர்ந்து கவனியுங்கள். அவர்களில் பணக்காரர்களா யிருப்போர் வீண் செலவுகளை சுருக்கி அந்நிதியை சமூக முன்னேற்றதுக்குரிய பொதுநலக் காரியங்கட்கு தான தருமஞ் செய்துவிடுகின்றனர். தவிர பெரும் பான்மையான் தனவந்தர்கள் தங்கள் சம்பாத்தனையினின்று சொற்ப பாகத்தைப் பிரித்து பொதுநலக் கைங்கரியத்துக்காக தானஞ் செய்கின்றனர் இவ்வித முறையில் தானதருமஞ் செய்து. தம் சமூகத்தையும் சன்மார்க்கத்தையும் முன்னுக்குக் கொண்டு வரவேண்டுமென்பது நமது இஸ்லாமிய போதனைகளாயிருக்க அவற்றை நாம் புரக்கணித்துவிட்டோமன்றோ?

"ஏ ஜனங்களே! உங்களால் இயன்ற மட்டும் ஆண்டவனுக்கு பயப்படுங்கள். அவனது கட்டளையைக் கேட்டு, வழிப்படுங்கள். உங்கள் ஆன்மாவின் நலனுக்காக அவனது பாதையில் செலவிடுங்கள்"—(குர்ஆன்)

நேயர்காள்! இத்திருக்கட்டளையை ஊன்றி கவனியுங்கள். நம் ஆன்மாக்களுடைய நன்மைக்காக வேண்டி தானஞ்செய்யும்படி ஆண்டவன் கட்டளைப் பிறப்பிக்கின்றான். அங்ஙனமிருக்க, ஆண்டவனளித்த திரவியத்தை அவன்பாதையில் தானதருமஞ் செய்யாமல் உலோபித்தனமாய் பத்திரப் படுத்துவது நீதியாகுமோ? புண்ணியமான காரியங்களில் நம் பொருள், உடல் உயிர் யாவற்றையும் தத்தம் செய்ய முஸ்லிம்களாகிய நாம் கடமைப்பட்டிருக்கின்றோம்.

பெருமைக்காகப் பணத்தைச் செலவிடுவதில் புண்ணியமொன்றுமில்லை. நம் சமூகமும், எளிய மக்களும், க்ஷேமமடையவேண்டுமென்று ஆண்டவன் பெயரால் அளிக்கப்படும் செலவினத்தில்தான் ஆண்டவனுக்கு மிகப்பிரியமுண்டு. இத் தானதருமம் தான் நமக்கு இகத்திலும் பரத்திலும் மனச்சந்தோஷத்தையும், ஆன்ம ஆனந்தத்தையும் பரிபூரணமாய் நல்கும். உலகத்தாரிடம் பெருமையும் பெயர் பகட்டும் நமக்குவேண்டாம். எல்லாம் வல்ல ஏக இறைவனை அல்லாஹ்வின் திருப்தியும் புகழுமே நமக்கு வேண்டற்பாலதாகும். ஆகவே இன்றுமுதல் நாம் நற்காரியங்கள் புரிய பிரதிக்ஞை செய்துகொள்வோமாக. வீண் செலவுகளையும், ஆடம்பரச் செலவுகளையும் நிறுத்தி நற்காரியத்திலும் புண்ணியமான வழியிலும் அத்திரவியத்தை தானதருமம் செய்வோமாக. திருப்தியாய் உண்டு, திருப்தியாய் உடுத்தி, எஞ்சியுள்ளவற்றை நம் ஏழை எளிய சகோதரர்களுக்களித்து திருப்தியுறுவோமாக. இஸ்லாமிய பிரசாரம், பொது ஜனச்சேவை, கல்வியபிவிருத்தி, அனுதை சம்ரக்ஷணை, விதவாவிவாகம், ஏழைகள் விவாகம், சமூக சீர்திருத்தம், சமூக முன்னேற்றம், இஸ்லாமிய பாதுகாப்பு முதலிய புண்ணிய காரியங்கட்காக நமது திரவியங்களை நம்மாலானவரை செலவு செய்து இகபர நற்பாக்கியம் பெற்றுய்வோமாக.

பொன் மொழிகள்

அறியாமைக்காக அல்லாஹுதஆலா ஒருவனுக்கு கௌரவம் கொடுப்பதேயில்லை. பொறுமை கொண்டதற்காக ஒருவனை தாழ்வுபடுத்த மாட்டான். தர்மஞ் செய்வதால் பொருள் ஒருபோதும் குறைந்து விடாது.

கிறிஸ்துவர்களின் எதிர்ப்பும் நமது கடமையும்

பிரசாரத்திற் குரிய சன்மார்க்கம் கிறிஸ்துவர்களின் மார்க்கமா? அல்லது முஸ்லிம்களின் மதமா? என்பதைச் சீர்தூக்கிப் பார்ப்போம். இந்த ஆராய்ச்சியின்கண் பல நீதிகளும் உபதேசங்களும் வெளியாகும்.

கிறிஸ்துவ சமயம் பிரசாரத்திற்குரித்தான மதமன்று. ஏனெனின், இயேசுகிறிஸ்து (ஈஸாநபி) அவர்கள் "யான் இஸ்ரவேல் மக்களினின்று காணமற்போய்விட்ட ஆடுகளை ஒன்றுசேர்ப்பதற்காக மட்டுமே வந்துள்ளேன்; இஸ்ரவேலரல்லாதார்க்கு எனது நீதி யுபதேசங்களைப் புகட்டி, எனது குழந்தைகளின் ரொட்டியை நாய்களுக்குப்போட யான் விரும்பவில்லை" என்றுகூறியிருக்கின்றார்கள்.

கிறிஸ்துவ மதம் பிரசாரத்துக்குரியதல்ல என்பதற்கு இஃதொன்று மட்டுந்தான் ஆதாரமென்று கருதவேண்டாம். கிறிஸ்துவ சரித்திராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் முதலியோரும் தங்களாராய்ச்சியின் முடிவில் இந்த உண்மையை ஒத்துக்கொண்டிருப்பதுடன், கிறிஸ்துவ மார்க்கத்தைப் பிரசாரம் செய்து பரத்தவேண்டுமென்ற எண்ணமுங் கொள்ளாதிருந்து வந்துள்ளனர்.

கிறிஸ்துமதத்தின்மீது வெறுப்பு.

"கிறிஸ்துமதக் கோட்பாடுகளும் உபதேசங்களும் கண்ணியத்தோடுஉலக ஜனங்கள்ள்பால் எடுத்தோதுவதற்குத் தகுதியுடையனவாயில்லை" என்பதை இக்காலக் கிறிஸ்துவ சகோதரர்கள் நன்குணர்ந்துகொண்டுள்ளார்கள். உதாரணமாய், "கிறிஸ்துவ ஆசார வாழ்க்கை முறையானது நமது சமூக வியலை அழித்துவிடக்கூடியதாகும்" என்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் லாயிட் ஜார்ஜு அவர்கள் கூறியிருக்கிறார்கள். இங்கிலாந்தின் மற்றொரு பெரிய பிரதம மந்திரியவர்கள் "இயேசு நாதர் இதுகாலை நம்மிடையே தோன்றுவாரானல் நாம் அவரைப் போலீஸ் பாதுகாவலில்தான் வைக்கநேரிடும்" என்று கூறியுள்ளார். பர்மிங்ஹாமின் பிஷப் டாக்டர் பாரன்ஸ் என்பவர், "ஜனனவேதத்தின் (பைபிலின்) கதைகளை நாம் நமது பாடசாலைகளில் பாடங்களாக ஏற்படுத்தினல் நமது சந்ததியார் தங்களுடைய மூதாதைகள் சத்தியத்தை உணரும் சக்தியற்றவராயிருந்தனர்" என்று முடிவுசெய்து பரிகசிப்பார்கள்.

கிறிஸ்துவமதத்தில் இவ்வளவுதூரம் குறைபாடுகளும், ஊழல்களும் நிறைந்திருக்க, இக்காலை கிறிஸ்துவமார்க்கத்தைப் பிரசாரம் புரியக் கிளம்பியிருக்குங் கோஷ்டியினர், ஈஸா நபி (அலை.) யின் ஏவல் விலக்கல்களை ஒரு சிறிதும் நோட்டமிடாமலும், கிறிஸ்துவ மார்க்க போதனைகள் வெறுக்கப்பட்டு ஒதுக்கித் தள்ளப்படுவதை ஒரு சிறிதும் பொருட்படுத்தாமலுந்தாம் வீண் பிரயத்தனப்பட்டு வருகின்றனர் என்பது நன்கு விளங்குகின்றது. இங்ஙனம் பலவிதமாகப் பிரயத்தனப்பட்டு அலைவோரின் நோக்கம் யாதெனில், உலகத்திலுள்ள எல்லா மனிதர்களையும் இயேசு கிறிஸ்துவுடைய காணமற்போன ஆடுகளாக்கி தங்கள் மந்தைக்குள் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பதேயாகும்.

இஸ்லாத்தின் சத்தியமும், முஸ்லிம்களின் நிலையும்.

இனி ஈண்டு சிறிது நம்முஸ்லிம்களுடைய நிலைமையை உன்னுவோம். இஸ்லாம் மார்க்கம் சர்வ லோகத்தார்க்கென்று அருளப்பட்ட விசுவசன்மார்க்கமென்பதையும், இது பிரசாரத்திற்குரிய சமரஸமதமென்பதையும், நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்.) அவர்கள் சர்வலோகத்தினர்க்கும் இறுதி நபியாய் அவதரித்தவர்களென்பதையும், உலக முடிவு காலம் வரைக்கும் இந்நபி முஹம்மத் (ஸல்.) அவர்களுடைய போதனையாகிய இஸ்லாம் தான் நிலைத்திருந்து வியாபிக்கு மென்பதையும் நம் முஸ்லிம்களெல்லோரும் மிக உறுதியாக நம்பி இருப்பதோடு, தாம் அவ்வாறு நம்புவதற்காதாரமாகத்தக்க வேதவாக்கியங்களையும் எடுத்தோதுகின்றார்கள்.

பொதுவாகக்கிறிஸ்துவர்கள் தங்கள் மதத்தின்மீது எத்துணை வெறுப்பும் அவநம்பிக்கையுங் கொண்டிருக்கிறார்களென்பதையும், நம் முஸ்லிம்கள் தங்கள் சன்மார்க்கத்தின் மீது எத்துணை பற்றும் நன்னம்பிக்கையும் கொண்டிருக்கிறார்களென்பதையும் மேலே ஒருவாறு உணர்ந்துகொண்டோம். ஆனால் கிறிஸ்துவர்கள் தங்கள் உண்மையற்ற கிறிஸ்துவமார்க்கத்தைப் பிரசாரம்செய்து பரப்புவதில் மிகமிகத் தீவிரமுயற்சிகள் செய்துவர, முஸ்லிம்கள் தங்கள் சுத்தசத்திய தீனுல் இஸ்லாமைப் பிரசாரம்புரிந்து பரப்புவதில் சிரத்தையற்றவராயும் போதிய ஊக்கங்காட்டாதவராயும் இருந்து வருகின்றனர்.

கிறிஸ்துவப் பிரசாரம்.

இவ்வுலகத்தின்கண் இதுகாலை சுமார் 900-பாஷைகளிருந்து வருகின்றன. இவற்றுள் 853-பாஷைகளில் கிறிஸ்துவர்களின் பைபிள் வேதம்மொழிப்பெயர்க்கப்பட்டிருக்கின்றது. இதுகாலை இந்தியாவில் மட்டும் 275-கிறிஸ்துவப் பிரசாரசபைகள் பிரசாரவேலைகள் புரிந்துவருகின்றன. இவற்றின் அபாரப் பிரயாசையினால் ஆண்டுதோறும் ஓர் இலக்ஷத்துக்கு அதிகமான ஜனங்கள் கிறிஸ்துவ மார்க்கத்தைத் தழுவிக்கொண்டு கிறிஸ்துவராகி வருகின்றனர். தவிர இவ்வுலகத்தின்கண் எந்தப் பகுதியிலும் கிறிஸ்துவப்பிரசார சபையினரின் காரியாலம், பைபிள் நூல் பிரசுராலயம், ஆண் - பெண் பள்ளிக்கூடங்கள், அநாதைச் சாலைகள், கலாசாலைகள், ஆஸ்பத்திரிகள், தொழிற்சாலைகள், விவசாயபோதனா பாடசாலைகள், கூட்டுறவுச் சங்கங்கள் முதலியன ஏற்படுத்தப்பட்டிராத இடம் இல்லையென்று கூறலாம். மேலும், இக்காலை காணப்படும் பைபிள்வேதம் திரித்து மாற்றிப் புதுப்பித்து அமைக்கப்பட்டதாயிருந்துங்கூட அதனைப் பிரசுரித்து உலகிடை பரப்புவதில் கிறிதுவர்கள் அபரிமிதமான ஊக்கம் செலுத்திவருகின்றனர். இக்கிலாந்திலுள்ள ஒருகிறிஸ்துவப் பிரசாரசங்கத்தினர்(பிரிட்டிஷ் அண்டு பாரீன் சொஸைட்டி) கிறிஸ்துவமதப் பிரசாரத்தைக் கருதி ஒவ்வொரு மூன்று வினாடிக்கும் ஒவ்வொருபைபிள்பிரதிவெளிவருவதற்குள்ளஏற்பாடுகள் செய்திருக்கின்றனர் இதுவரை 37-கோடியே 50 லக்ஷம் பைபிள் பிரதிகள் ஷெ சங்கத்தினரால் வெளியிடப்பட்டு உலகிடை விநியோகிக்கப்பட்டுள்ளன. அன்னோர் மட்டும் 553 பாஷைகளில் பைபிளை மொழி பெயர்த்துப் பிரசுரித்துள்ளனராம். என்னே அவர்களின் ஊக்கம் !

குர்ஆனும் பைபிளும்

கிறிஸ்தவக் கோஷ்டியாரின் இத்துணைப் பிரயாசையும் பிரசாரமும் "இஸ்ரவேல் மக்களில் காணாமற்போன ஆடுகளை ஒன்றுசேர்க்க மட்டும்" தோன்றிய வேதத்துக்காகச் செய்யப்படுவனவாகும். அஃது அங்ஙனமிருக்க, சர்வலோகத்தாருக்கும் அருளாயவதரித்த நபிகளில் இறுதியானவர்களான முஹம்மத் (ஸல்) அவர்கள் மூலமாக அருளப்பட்ட 'சர்வலோகப் போதனை' யாகிய பரிசுத்த குர்ஆன் ஷரீபின் பிரசாரம் எத்தகைய நிலையில் இருக்கிறதென்பதை உன்னுந்தோறும் உன்னுந்தோறும் மனம் வருந்துகின்றது. ஒரு சாராருக்குமட்டுமென்று அருளப்பட்டு மாற்றித் திரிக்கப்பட்ட பைபிள் வேதம் கோடிக்கணக்கணக்காய் உலகில் பரத்தப்பட்டு வருங்கால், சர்வலோகத்தாருக்கும் ஏகபோதனையாய் அருளப்பட்ட பரிசுத்த குர்ஆன் ஷரீபு போதிய அளவு உலகமக்களுக்கு அளிக்கப்படாதிருப்பதை யுணரும் எந்த பக்தர்தான் மனங்கலங்கி வருந்தாதிருப்பார் ?

மௌலானா அப்துல்லா மின்ஹாஸ் சாஹிப் என்னும்பெரியார் கணக்கிட்டிருப்பதுபோல், இதுகாறும் 21-பாஷைகளில்மட்டுமேதான் நம் பரிசுத்த தூய சத்திய குர்ஆன் ஷரீப் வெளியிடப்பட் டிருக்கிறதெனத் தெரிகிறது. இதிலும் ஒரு விசித்திரம்! இவ்விருபத்தொரு பாஷைகளிலும் 6, 7 பாஷைகளில் மட்டுமே தான் நம் முஸ்லிம்களால் குர்ஆன் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. ஏனைய 14, 15 பாஷைகளிலுள்ள மொழிபெயர்ப்புகள் தப்புந் தவறுமாய் கிறிஸ்தவப் பிரசார சபையினர்களுடைய பிரயத்தனங்களால் இஸ்லாத்தை இழிவுள்ளதாகக் காட்டவேண்டுமென்ற நோக்கத்துடன் எழுதப்பட்டு வெளியிடப்பட்டனவாகும். மேலும் 21 பாஷைகளில் நமது குர்ஆன் ஷரீப் மொழி பெயர்க்கப்பட்டு வெளியாகியுள்ளதெனினும், இதுகாலை 7- அல்லது 8 பாஷைகளில் மட்டுமே தான்

குர்ஆனின் மொழிபெயர்ப்புகள் விற்பனைக்கு கிடைக்கக்கூடியதா யிருக்கிறது.

இங்கிலேயை நோக்குமிடத்துக் கிறிஸ்துவப் பிரசாரகர்களின் பேருக்கமும், நம் முஸ்லிம் மகாஜனங்களின் பெருந்தூக்கமும் இனிது விளங்குகிறது. பரிசுத்த குர்ஆன் ஷரீபின் போதனை யொன்றுதான் உலகமக்களுக்கு இகபரசாதனத்தை நல்கக்கூடியதா யிருக்கிற தெனினும், இவ்விஷயத்தில் முஸ்லிம்களின் அக்கரையின்மை பெரிதும் வருந்துதற் குரிய தாகும்.

முஸ்லிம்களுக்கோர் விண்ணப்பம்

முஸ்லிம் சகோதரர்காள்! உங்களிடம் ஒரு விஷயத்தைக் கேட்கின்றேன். "அனுஷ்டான பூர்வமாய்ச் சாதிப்பதற்கு, கிறிஸ்து மதம் பிரசாரத்துக்குரியதா யிருக்கிறதா? அல்லது உலகமெங்கும் அடைய வளைந்திருக்கும் இஸ்லாம் மதம் பிரசாரத்துக்குரியதாய் இருக்கிறதா? உலக மக்களெல்லோருக்கும் பார பக்ஷமின்றிச் சன்மார்க்கத்தையும், மோட்ச சாதனத்தையும் அளிக்கவல்லதான திருவேதம் குர்ஆன்ஷரீபா? அல்லது பைபிளா?" இதற்கு விடை "உலகப்பிரசாரத் துக்குரிய மதம் இஸ்லாம் தான் என்றும், உலக மக்களுக்கு நலன் தரும் வேதம் பரிசுத்த குர்ஆன்ஷரீப்தானென்றும்" நீங்கள் சாக்ஷியம் பகர்வீர்களென்பது நிச்சயம். இங்ஙனம் குர்ஆன் ஷரீப் சர்வ லோகத்தாருக்குமுரிய உத்தம போதனையாயின், அதனால் சர்வ லோகத்தாரும் நலன்பெறுமாறு செய்ய நாம் எவ்விதமான பிரயத்தனங்கள் செய்தல் வேண்டும்? குர்ஆனின் போதனைகளையும், இஸ்லாத்தின் சிறப்புகளையும் உலக மக்கள் அறிந்தொழுகச் செய்வதற்குத் தக்க வழி எது? உலகமக்களெல்லோருக்கும் இவ்வுண்மைகளை எங்ஙனம் அறிவிப்பது? ஒவ்வொரு முஸ்லிமும் இவ்விஷயங்களை நன்கு ஆராய்ந்து தக்கது செய்ய முன்வரல் வேண்டும்.

பரிகார முறை

இங்ஙனம் முஸ்லிம்களாகிய நாம் நம் கடமைகளை மறந்து கிடப்பதினின்று விழித்தெழுந்து உழைக்கவேண்டும். இஸ்லாத்தின் போதனைகளையும், குர்ஆனின் தத்துவங்களையும் இவ்வுலக ஜனங்களெல்லோருக்கும் எடுத்து விளக்கிப் பகிரங்கப்படுத்த வேண்டும். நம் கடமையாகிய இப்பரிகாரத்துக்கு ஒரு இலேசானமுறையை ஈண்டு எடுத்தோதுவோம்:—

குர்ஆனின் போதனையையும், இஸ்லாத்தின் மேன்மையையும் இவ்வுலகத்தாருக்கு போதிக்க தகுந்த கருவியாயிருப்பது, உலகச்சிரேஷ்டர், இஸ்லாமியப் போதகர், சற்குண சீலர், முஹம்மது (ஸல்.) அவர்களுடைய திவ்விய வாழ்நாள் திருச்சரிதையை பிரகடனப் படுத்துவதேயாம். ஏனெனின், நபிகள் நாயகம் ரஸூல் (ஸல்.) அவர்களுடைய திவ்விய வாழ்க்கையானது குர்ஆன் போதனைக்கும், இஸ்லாத்தின் கட்டளைக்கும் மனித இயற்கைக்கும் முற்றும் ஒத்தமைந்ததாயிருக்கின்றது. "நபி பெருமானாரின் குணங்கள் குர்ஆனுக்கு முற்றும் நேர்மையாயிருந்தது" என்று பத்தினி ஹஜ்ரத் ஆயிஷா நாயகி (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள். மேலும் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது குணங்களும், நடவடிக்கைகளும், போதனைகளும் சர்வலோக மக்களும் உய்வதற்குரிய நேர்வழியாகவும், ஓர் அழகிய முன்மாதிரியாகவும் அமைந்திருக்கின்றது. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைப் பின்பற்றுவோர் நிச்சயம் ஆன்மார்த்த வெற்றியும் முக்தியும் அடைவரென்பது திண்ணம். ஆகவே நபி பெருமானார் (ஸல்.) அவர்களின் ஜீவிய வாழ்வை உலகத்தோருக்கு எடுத்தோதி அதை அவர்கள் பின்பற்றச் செய்வோமாயின் குர்ஆன் பிரசாரமும் இஸ்லாம் பிரசாரமும் சுயமே புரிந்ததற்கொப்பாகும்.

இக்கால எதிர்மதவாதிகள் நம் இஸ்லாத்தையும், அதன் சத்திய போதனைகளையும், முஸ்லிம் சமூகத்தையும் ஆயுதங்கொண்டும் தேகபலங் கொண்டும் தாக்குகிறார்களில்லை. ஆனால் பேனாபலத்தைக்கொண்டு எழுத்து வாசக மூலமாய் இஸ்லாம் மதத்தையும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் தூய ஜீவியத்தையும் எதிர்த்து அபவாதஞ் சுமத்தி, சுத்த சத்திய இஸ்லாம் பிரகாசத்தை வாயால் ஊதி அணைத்துவிடலாமென்று பார்க்கின்றனர். இது அன்னோரால் ஆகக்கூடிய காரியமன்று. எல்லாம்வல்ல அல்லாஹுதஆலா தன் சன்மார்க்கமாகிய ஒளியைப் பாதுகாத்துக்கொள்கிறான். சத்திய இஸ்லாமியத் தற்காப்புக்காக

முஸ்லிம்களாகிய நாம் ஒவ்வொருவரும் முன் வந்து முழு ஊக்கத்தோடு வேலை செய்ய வேண்டும். எதிர் மதவாதிகளைப்போலவே நாமும் பேனுபலத்தையும், வாசகத்தையுங் கொண்டு பிரசாரம்புரிய வேண்டும். குர் ஆனின் போதனை, இஸ்லாத்தின் தத்துவம், நபிபெருமானரின் தூய ஜீவியம் ஆகியவற்றை உலக மக்களுக்குச் சிறந்த முறையில் எடுத்து விளக்கவேண்டும். இதுவே நமது தற்கால முக்கியக் கடமையாகும்.

உண்மைத் தியாகம்.

('பீஸபீலில்லாஹ்'என்பதின் தாத்பரியம்)

"சொல்வீராக! நிச்சயமாய் எனது வணக்கமும், எனது தியாகமும், எனது ஜீவியமும் எனது மரணமும் சர்வலோக இரக்ஷகனாகிய அல்லாஹுக்கே உரியனவாகும்" (குர்ஆன்.)

பரிசுத்த குர்ஆன் ஷரீபில் "பீஸபீலில் லாஹ்" என்று பலவிடங்களில் பிரஸ்தாபிக் கப்பட்டிருக்கின்றது. அதன் தாத்பரியமாவது:—நம்முடைய முயற்சிகள் யாவும், காரியாதிகள் அனைத்தும் அல்லாஹுடைய பாதையிலாய் இருத்தல்வேண்டுமென்பது குர்ஆனின் போதனையாகும். இதையே வேறு விதமாக "நீங்கள் உங்கள் ஜீவியதசையில் என்னென்ன காரியாதிகள் புரிவீர்களோ அவை யாவும் உண்மையாய் ஆண்டவனுக் காகவே இருத்தல் வேண்டும்" என்று கூற லாம். மேலும் "உங்கள் அனுஷ்டானங் களெல்லாம் ஆண்டவனுடைய பாதையில் ஆண்டவனுக்காகவென்றே இருத்தல்வேண் டும். நீங்கள் ஏதாவதுகாரியஞ்செய்ய முயற் சிப்பீர்களாயின் அதை ஆண்டவனுக்காகவே புரியுங்கள். நீங்கள் தருமம் அளிப்பீர்களா யின் ஆண்டவனுக்காகவே அளியுங்கள்; நீங் கள் ரோஷம் கொள்வீர்களாயின் ஆண்ட வனுக்காகவே கொள்ளுங்கள்; நீங்கள் உப காரஞ் செய்வீர்களாயின் ஆண்டவனுக்கா கவே செய்யுங்கள்" என்று ஹதீதும் போதிக் கிறது.

சுருங்கக்கூறுமிடத்து, கணவன் மனைவிக்கு புரியும் உதவி, மனைவி கணவன்பால் கொள ளும் கடமை, பெற்றோர் தம் புதல்வர்களிடம் காட்டும் வாஞ்சை, புதல்வர்கள் தமது பெற் றோர்கட்குபுரியும் ஊழியம் யாவும் ஆண்டவ னுடைய பாதையிலா யிருத்தல் வேண்டும். அன்பு, விசுவாசம், நண்பர்களுடன் புரியும் நட்பு யாவும் ஆண்டவனுக்காகவா யிருத்தல் வேண்டும். மேலே குர்ஆன் வாக்கியத்தில் கூறப்பட்டுள்ளபடி உயிர்வாழ்வதும், உயிர் இழப்பதும், தொழுவதும், தானதருமம் குர் பானீ முதலியன புரிவதும் அந்த ஏக இறை வனுக்காகவே யிருத்தல் வேண்டும்.

'பீஸபீலில்லாஹ்' என்னும் பதத்தைப்படி த்து அதன் ஆழ்ந்த கருத்தை நமது உள்ளடி திலும் அறிவிலும் பதியச்செய்து, அதனால் பேருணர்ச்சி பெறவேண்டும். நம்ஜனங்களுள் மிகச் சிலரேதான் 'பீஸபீலில்லாஹ்' என்ப தின்உண்மையானதாத்பரியத்தை உணர்ந்து நடக்கிறார்கள். எனவே நாம் ஒவ்வொரு வரும் எல்லாம் வல்ல இறைவன் நம்மை ஏன் பீஸபீலின் பக்கம் அழைக்கின்றான், திருத்து தர் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களும் நமக்கு 'பீஸபீலை' பற்றி அதிகம் ஏன் வற் புறுத் கூறியுள்ளார்க ளென்பதை உற்று ணர்ந்து அதன்படி நடந்துவரல் வேண்டும்.

இஸ்லாத்தின் ஏகத்தன்மை.

அல்லாஹ்வின் ஏகதெய்வத்துவமும், இஸ் லாத்தின் ஆசாரமும் இத்தரணியின் முஸ்லிம் மகா ஜனங்க ளெல்லோரையும், எல்லாவித வகுப்புவேற்றுமை கக்ஷிப்பிரிவினை முதலிய வற்றை விட்டொதுங்கச்செய்து எல்லோரை யும் ஒரேசமூகத்தினராகச் செய்து சன்மார்க் கத்தி லீடுபடச்செய்கின்றது.

இவ்வுலகத்தின்கண் ஜனங்கள் பற்பலகூட் டங்களாகவும் வகுப்புகளாகவும் பிரிந்திருந்த போதிலும் இஸ்லாம்மதமானது அவர்களெல் லோரையும் ஒரேசமூகத்தினராக பரிணமிக்

கச்செய்து விடுகின்றது. இத்துறையில் "நிச்சயமாய் நன்னம்பிக்கை கொண்டவரெல்லோரும் ஏக சகோதரர்களாவர்" என்றும் திரு குர்ஆன் நன்கறிவிக்கின்றது. இதன்படி சகல முஸ்லிம்களும் சன்மார்க்கமென்னும் ஆண்டவனது கயிற்றை ஏகமாய்ப்பற்றிப்பிடித்து நடக்கவேண்டியவர்களாயுள்ளனர்.

நெடுந்தூரத்திலுள்ள பிறவர்க்கத்தான் ஒருவன் இஸ்லாத்தைத் தழுவி முஸ்லிமாவானாயின் இன்னவன் இஸ்லாமிய சமத்துவ சங்கிலியால் பிணைக்கப்பட்டு என்றென்றும் உலக முஸ்லிம்களின் உற்ற சகோதரனாகிவிடுகின்றான். பரம்பரையான ஒரு முஸ்லிமுக்கு என்னென்ன பாத்தியதைகளும் உரிமைகளும் இஸ்லாமிய ஆசாரத்திலுண்டோ அவையாவும் அந்தப் புதிய முஸ்லிமுக்கும் தாராளமாயுண்டு. இஸ்லாத்தில் எவரும் ஜாதிப்பெருமையோ குலப்பெருமையோ கொள்ளுவதற்கு உரிமை கிடையாது. யாவரும் ஒரே வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே யாவர்.

பொதுக்காரியம்

ஆண்டவனது பாதையில் புரியக்கூடியகாரியங்கள் அநேகமாய் மத விஷயமாகவும், சமூதாய விஷயமாகவும், ஆசார ஒழுக்க விஷயமாகவுமே இருப்பதுண்டு. நம் பண்டைய முஸ்லிம் மூதாதைகளுடைய வாழ்நாள் வரலாறுகளை நோக்குமிடத்து, அன்னோர் 'பீஸபீல்' ஆண்டவன் பாதையில் புரியவேண்டிய காரியங்களில் எம்மட்டும் பக்தி சிரத்தை காட்டி வந்தனரென்பது நன்கு விளங்கும். ஆண்டவனது பாதையில் உத்தமக் காரியங்கள் செய்துவந்ததன் பயனாய் அம்மூதாதைகள் கீர்த்தியும், செல்வாக்கும், மகிமையும், பெற்று விளங்கினார்கள். மற்றும் அன்னார் ஜன பலமும், சமுதாய கட்டுப்பாடும் உடைவர்களாய் விளங்கினார்கள். இதுபோன்று ஆயிரக்கணக்கான உதாரணங்கள் இஸ்லாமியக் கிரந்தங்களில் காணக் கிடக்கின்றன.

சமூகச் சேவையின் நலம்

உண்மையான முஸ்லிம் ஒருவன் சமூக நலத்தை முன்னிட்டு "பீஸபீல்" நற்சேவைப் புரிவானாயின், அதற்குரிய பிரதிபலனை (கூலியை) இவன் மனிதர்களிடம் கோரி நிற்க வேண்டுவதில்லை. ஆண்டவனுடைய பாதையில் சமூகச்சேவை புரிந்துவிட்டு எல்லாம் வல்ல அவ்விறைவன் சமூகத்திலேயே அதன் நற்கூலியை எதிர்பார்ப்பான். பொது ஜனங்கள் அவனது நற்றொண்டுக்காக அவனைப் போற்றிப் புகழ்ந்து பெருமை யளிப்பினும் அதனையும் அவ்வுண்மை முஸ்லிம் ஆண்டவனுக்கே அர்ப்பணம் செய்வான். இங்ஙனம் ஜனங்கள் தன்னைப்போற்றிப் புகழாவிட்டால் அதற்காக அந்த உண்மை முஸ்லிம் வருந்தமாட்டான். உண்மையான முஸ்லிம் தனது முயற்சி யாவையும் ஆண்டவன் பெயராலேயே புரிந்து திருப்தியடைவான். இம்மனத் திருப்தியைக்கொண்டு அவன் தன் ஜீவிய காலமெல்லாம் பொதுஜன சேவையும் பரோபகாரமுமே புரிந்துகொண்டிருப்பான். ஆண்டவனுடைய பாதையில்(பீஸபீல்) தியாகம் செய்வதின் தாத்பரியங்களில் இதுவுமொன்றாகும்.

இத்தரணியில் சமூகச் சேவையும் பொது நலத்தொண்டும் செய்வது புண்ணிய செயல்களாகும். நற்குண நல்லொழுக்கமுள்ளவர் எவரும் பொதுஜன சேவைபுரிய விரும்புவர். உண்மையான முஸ்லிமுக் கழகு தனது உடல் பொருள் ஆவி யாவையும் ஆண்டவன் பாதையில் அர்ப்பணஞ் செய்வதேயாகும். ஆண்டவன்மீது திட எண்ணங்கொண்டு அவன்மீது பொறுப்பைப்போட்டு நற்காரியம் புரிபவர்கள் புண்ணிய சாலிகளாவர். அவர்சட்கு ஆண்டவனுடைய பாதுகாப்பும் ஆதரவும் என்றென்றும் உண்டு. இத்தகைய உத்தம புருஷனை ஆண்டவன் சகலவிதமான துன்பங்கள், விசாரங்கள், கஷ்டங்கள், கவலைகள் முதலியவற்றினின்றும் காப்பாற்றி இன்னருள் புரிவான்.

பண்டைய முஸ்லிம்களின் உதாரணகுணம்.

பண்டைய முஸ்லிம்களும், இஸ்லாமிய மகான்களும் இங்ஙனந்தான் உண்மையான தியாகங்கள் புரிந்து வந்தார்கள். அன்னோர் தமது ஜீவியம் இன்பம் துன்பம் மரணம், யாவையும் ஆண்டவனுக்காகவென்றே ஒப்படைத்து அனுஷ்டித்து வந்தார்கள். அன்னோரின் வாழ்நாட்களெல்லாம் அநேகமாய் ஆண்டவனுடைய பாதையிலேயே (பீஸபீலில்லாஹ்வில்) கழிந்து வந்தன. அன்னோர் பிறர்க்குஏதேனும் உபகாரஞ் செய்தால் ஆண்டவனுடைய திருநாமத்தைக் கொண்டே செய்வார்கள். யாரேனு மொருவர் தங்கட்குத்

தீங்கு விளைவித்தால் அத்துன்பமும் ஆண்டவனது கற்பனைப்படி நிகழ்ந்ததுதா னென்று மனத்திடங்கொண்டு சகித்துப் பொறுமை யடைவார்கள். எப்படிப்பட்ட கஷ்ட நஷ்டங்கள் நேரிட்டபோதிலும் ஆண்டவன் பெயரால் அதைச் சகித்துக்கொள்வார்கள்.

அக்கால முஸ்லிம் பெரியார்கள் ஆண்டவனுடைய பாதையிலேயே தம் சிஷ்யர்கட்குச் சன்மார்க்கக் கல்வி போதிப்பார்கள். சிஷ்யர்கள் தம் ஆசிரியர்கட்கு மரியாதை ஊழியம் முதலியன புரிந்தாலும் ஆண்டவன் பாதையிலேயே புரிவார்கள். சுருங்கக் கூறுங்கால், எல்லாவற்றிற்கும் ஆண்டவனது திருப்தியையே அவர்கள் பிரதானமாய்க் கருதி யுழைத்தார்கள்.

இக்காலை, முஸ்லிம் சமுதாயம் அப்பண்டைய மூதாதைகளின் உண்மைத் தியாகத்திற்காகவும், சத்தியச் சேவைக்காகவும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றது. ஏனெனின் அப்பண்டைய முஸ்லிம் மகான்களின் தியாகத்தின் காரணமாகவேதான் இத்தரணியில் இஸ்லாம் மதம் தழைத்தோங்கிற்று. அவர்கள் ஆண்டவனது திருநாமத்தைக்கொண்டு செய்த ஊழியத்தால்தான் இத்தரணியில் இஸ்லாம் இத்துணை முன்னேற்றமடைந் திருக்கின்றது. அப்பண்டையப் பெரியோர்கள் ஆண்டவனது கட்டளையையே பிரதானமானதாகவும், பொறுப்பானதாகவும் கருதி யொழுகினர்கள். அவர்கள் சுயநலம் யாதுமின்றிப் பொது நலத் தொண்டாற்றி வந்தார்கள்.

அக்கால முஸ்லிம் பெரியார்களில் அநேகர் சீர்திருத்தகர்களாகவும், சமூகத்தொண்டர்களாகவும், இஸ்லாத்தின் நல்லூழியர்களாவும் இருந்துள்ளார்கள். இவர்களில் எவரும் சுயநலத்தையோ, பெருமையையோ, அதிகாரத்தையோ கருதி சேவைபுரிந்தவர் களல்லர். அக்காலத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் நான்குகலீபாக்களும்மற்றும்சஹாபாக்களும், இஸ்லமிய உம்மத்துகட்குஉண்மையான ஊழியம் புரிவதிலேயே தங்கள் ஜீவியகால மனைத்தையும் ஒப்படைத்திருந்தார்கள். இவ்வுலகத்தில் அவர்கட்கு எத்துணையோ செல்வாக்கும் ஆதரவு மிருந்துங்கூட அவர்கள் அத்தகைய பட்டத்தையும், கவுரவத்தையும் விரும்பவில்லை. ஆகவேதான், அவர்கள் அல்லாஹ்வின் அருளுக்குரியவர்களாய் சத்திய உத்தம பக்த சிரோமணிகளாய் விளங்கினர்கள்.

ஆனல் தற்கால முஸ்லிம் சகோதரர்களின் நிலைமையை நோக்குமிடத்து, "பீஸபீலில்லாஹ்"வின் காரியங்களில் மிகவும் தாழ்வான நிலையை அடைந்துவிட்டார்க ளென்றே கூறவேண்டி யிருக்கின்றது. இக்காலத்தவருக்கு ஆண்டவன்மீது பூரண நம்பிக்கையும், தியாகசிந்தையும், மதபக்தியும் மிகவும்குறைந்து விட்டமையால் தான் நம்சமூகம் இத்துணை க்ஷீணதிசையடைந்துள்ளது

ஆகவே முஸ்லிம் சோதரர்காள்! உங்கள் மனக்கண்ணைத்திறந்து, நம்சமூகத்தின் எளிய நிலையை உற்று நோக்குங்கள்! (பீஸபீலில்லாஹ்) ஆண்டவனது பாதையில் புண்ணியத்தைக்கருதி பொதுஜன சேவைபுரிய முன்வாருங்கள். ஆண்டவன்மீது பூரணநம்பிக்கை வையுங்கள். உங்களில் ஒவ்வொருவரும் தமது உடல் உயிர் பொருள் முயற்சி மூச்சுயாவையும் ஆண்டவனுக்காக அர்ப்பணம் செய்து ஆண்டவனுடைய பாதையில் பாடுபடுங்கள். ஆண்டவனருளைப்பெற்று, இகபரநற்சாதனம் பெற்று உய்யுங்கள்.

ஆண்டவனிடம் ஒப்புக் கொள்ளப்பட்ட மதம் இஸ்லாமே யாகும்.

இப் பிரபஞ்சத்தின் பால் காணப்படும் கோடிக்கணக்கான சிருஷ்டிகளுள் மனிதனே மிக மேலான—இறுதியான சிருஷ்டி அம்சமாய் விளங்குகின்றான்.

பல்வேறு சிருஷ்டி வர்க்கத்தினிடமுள்ள சகல குணாதிசயங்களும் மனித னொருவன் பால் பரிபூரணமாய் அமைக்கப் பெற்றிருப்பதால் மனிதன் பூர்த்தியான முறையில் படைக்கப்பட்டுள்ளான் என கூறப்படுகின்றது.

படைப்பினங்களுள் மனிதவர்க்கமே பூர்த்
தியானதா யிருப்பதேபோல், சன்மார்க்கங்க
ளுள் "பரிசுத்த இஸ்லாமும்," வேதங்களில்
"குர் ஆன்ஷரீபும்" பரிபூரணமான தா
கும். மனிதனின் தன்மையில் சர்வசிருஷ்டிக
ளின் குணநலன்கள் பரிபூரணமாய் அமையப்
பெற்றிருப்பதேபோல், பரிசுத்த இஸ்லாத்
தின் தூய்மையான குர் ஆனிலும் முன்னுண்
டான மதங்கள் வேதங்கள் யாவற்றின் சார
சம் முழுதும் பூர்த்தியாய் அமையப்பெற்
றுள்ளது.

உலகத்தின் இதர சிருஷ்டடிப் பொருள்
களிடம் தனிப்பட்ட ஏதேனுமொரு குண
திசயம் மட்டும் அமையப்பெற் றிருப்பதே
போல். (இஸ்லாத்துக்கு முன்னுண்டான)
மதங்கள்—வேதங்கள் முதலியன அந்தக்
காலத்தார்க்கென்றும், அந்தந்த நாட்டார்க்
கென்றும், அந்தந்த வகுப்பாருக் கென்
றும் மட்டுமே அமைக்கப் பெற்றனவா
யிருந்தன. உலகத்திலுள்ள இதர மதங்கள்
ஒவ்வொன்றிலும் இவ் வுண்மைக் கூற்றை நிரூ
பிக்கதக்க அத்தாக்ஷிகள் நிரம்பியிருக்கின்
றன. உதாரணமாய் மூஸாநபி (அலை.) யின்
மார்க்கம் யூதர்கட்கு மட்டுமென்றும், ஈஸா
நபி (அலை.)யின் மார்க்கம் இஸ்ரவேலர்
(கிறிஸ்துவர்)கட்கு மட்டுமென்றும் அவ்வவ்
வேதங்களில் ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டுள்
ளன. அவ்வேதங்களைக் கொண்டுவந்த மூஸா
நபி (அலை)ஈஸாநபி (அலை.) ஆகியோர் தங்
களுக்குப்பின் இறுதியாக ஒரு நபி யவதரித்
துப் பரிபூரணமான வேதத்தையும் பூர்த்தி
யான சன்மார்க்கத்தையும் கொண்டுவந்து
போதிப்பார்கள் என்று நன்மாராயம் கூறிச்
சென்றுள்ளார்கள். நன்மாராயத்தில் கூறப்
பட்ட அப்படிப்பட்ட இறுதிநபி நமது நாய
கம் முஹம்மத்ரஸூலுல்லாஹி (ஸல்.) அவர்
களும், பரிபூரண சன்மார்க்கம் நமது சுத்த
சத்தியதீனுல் இஸ்லாமுமே யாகும்.

இஸ்லாம் மதம் பரிபூரணமான தென்ப
தற்கு அத்தாக்ஷி அது இறுதியாய் அரு
ளப்பட்ட தென்பதும் ஒன்றாகும். தவிர
அஃது ஏனைய மதங்களைக் காட்டிலும்
சிரேஷ்டமான தென்பதற்குப் பற்பல ஆதா
ரங்கள் இருக்கின்றன. மற்றச் சிருஷ்டிகளி
லெல்லாம் மனிதன் சிரேஷ்டமானவ
னென்பதற்கு என்னகாரணம் மேலே
கூறப்பட்டதோ, அதே காரணமே இஸ்லாம்
ஏனைய மதங்களினும் சிரேஷ்டமானதென்ப
தற்கு சரியானதாகும். இஸ்லாத்தின் திரு
வேதமாகிய குர்ஆன் ஷரீபில் காணப்படாத
சத்திய திவ்வியபோதனை எதுவும் மற்றெந்த
வேதத்திலும் காணப்படமாட்டா தென்பது
திண்ணம். பரிசுத்த குர்ஆன் ஷரீபில் எல்லா
விதமான நற்போதனைகளும் ஒருங்கே அமை
யப் பெற்றிருப்பதால் அது சர்வலோகத்தா
ருக்கும் நற்போதம் புரியும் பேரருளா யிருக்
கின்றது. சர்வலோக மக்களுக்கும் விமோ
சன வழியைக்காட்டும் சாதனம் அந்தக்
குர்ஆனே யாகும். எனவே, சுத்த சத்திய
இஸ்லாமும், பரிசுத்த குர்ஆனும்; இறுதியாய்
அருளப்பட்ட பூர்த்தியான மதமாயும், பரி
பூரண வேதமா யிருப்பது ஊர்ஜிதமாகி விட்
டதால், அவை சிரேஷ்டமானவையென்பதில்
இன்னும் என்ன சந்தேகம் இருக்கப்போகின்
றது?

பிரமதங்களும் இஸ்லாமும்.

சில மதங்கள் ஒரு குறிப்பிட்ட ஊராருக்
கென்றும், வகுப்பாருக்கென்றும், ஜாதியின
ருக்கென்றும் ஏற்பட்டிருக்கின்றன. எனவே
தான் சிலர் தங்கள் மதத்தை மார்வாடியர்
மதமென்றும், மராட்டியர் மதமென்றும், தெ
லுங்கர் மதமென்றும், இந்தியர் மதமென்றும்
மற்றும் பலவிதமாகக் கூறிக்கொள்கின்றனர்.
இவர்களுள் முன்னேற்றமடைந்த வர்க்கத்
தார் எல்லா மார்க்கத்தாரையும் ஒன்று
சேர்த்துக்கொண்டு எல்லோருடைய ஏக
மதம் ஹிந்து மதம் என்கின்றனர். ஹிந்து
மதம் என்பது உண்மையில் ஒருமதத்தின்
பெயராகுமா? ஹிந்து என்றால் என்ன?
இந்தியாவில் (ஹிந்துஸ்தானில்) வசிப்
பவன் என்ற அர்த்தமுடைய பதமே
ஹிந்து வென்பதாகும். இவ்வாறாக ஆப்
கானில் வசிப்போரை ஆப்கானிய மதஸ்த
ரென்றும், ஈரானில் வசிப்போரை ஈரானிய
மதஸ்தரென்றும், அபிஸினியாவில் வதி
வோரை அபஷிய மதஸ்தரென்றும், ஐரோப்
பாவில் வதிவோரை ஐரோப்பிய மதஸ்த
ரென்றும் நாட்டின்பெயருக்குத் தகுந்தவாறு
கணித்துக்கொண்டே போனால் மதங்களுக்
குக் கணக்குவழக்கில்லாமல் ஈசல் கூட்டங்
களே போலாகிவிடுமென்பதில் என்ன சந்
தேகம்?

இன்னுஞ் சிலமதங்கள் ஒரு நபரைக் குறித்
தும் வகுப்பைக்குறித்தும் வழங்கிவருகின்

றன. உதாரணமாக புத்த மதம், கிறிஸ்து மதம், யூதர் மதம் முதலியனவாம். சுயமே ஏற்படுத்திக்கொள்ளப்பட்டதும், உண்மையானதை திரித்து மாற்றி அமைத்துக்கொள்ளப்பட்டதுமான இம்மார்க்கங்களைச் சத்திய மானவையென்று எவரும் ஏற்றுக்கொள்ள முடியாதென்பது உறுதி.

திவ்விய தாத்பரியமுடைய பதத்தாலான திருநாமமும், மாற்றப்படாத சாஸ்வதமான சிறந்த பரிபூரண போதனைகளும் நிலவிய சத்திய சன்மார்க்கம் எதுவெனின் அதுவே தீனுல் இஸ்லாமாகும். "இஸ்லாம்" என்னும் பதம் "சாந்தி—சமாதானம்" என்னும் உயர்ந்த பொருளுடையதாகும். இஸ்லாத்தை ஏற்று நடப்போர் இறுதியில் சாந்தி, சமாதான நிலையமாகிய விமோசனமடைவர். இஸ்லாம் மதம் ஒரு நாட்டைக் குறித்தோ, ஒரு தேசத்தைக் குறித்தோ, ஒரு வகுப்பைக் குறித்தோ அருளப்பட்டதில்லை. சர்வ லோகத்துக்கும், சகல மானிடவர்க்க மனைத்துக்கும், கருப்பர் வெள்ளையர் எல்லோருக்கும் ஏகபோக சத்திய சன்மார்க்கமாக அருளப்பட்டதாகும். இத்தகைய சாந்த சன்மார்க்கத்தைக் குரோதங்கொண்ட எதிர் மத வாதிகள் "முஹம்மதிய மார்க்கம்" (அதாவது முஹம்மதால் ஏற்படுத்தப்பெற்ற மார்க்கம்) என்று கூறுவர். இது இஸ்லாத்தைக் கண்ணியஹீனப்படுத்துவதாகும்.

இஸ்லாத்தின் பரிபூரணப் போதனை.

மனிதன் ஆறறிவும் படைத்த பேசும் பிராணியாவான். மானுஷ்யன் எல்லா சிருஷ்டிகளினும் சிறந்தவனுதலால் இறைவன் மனிதர்க்கு அறிவையும் பேசுஞ் சக்தியையும் அருள்புரிந்துள்ளான். இந்தச் சிறந்த சக்தியினுல் மனிதன் எங்ஙனம் சிறந்தவனுயிருக்கின்ருனே, அவ்வாறே பரிசுத்த குர்ஆன் ஷரீபும் தன்னிடமுள்ள போதனைச் சிறப்பால் ஏனைய எல்லா வேதங்களினுஞ் சிரேஷ்டமானதா யிருக்கின்றது. குர்ஆன் எல்லாம் வல்ல ஏக இறைவனுல் மனிதகோடிகட்கென அருளப் பெற்றதாகும். இதனை மனித கோடிகட்கு போதித்த ஜகத்குரு நமது நபிகள் நாயகம் ரஸுல் (ஸல்.) அவர்களாவர். இறைவன் புறத்தினின்று இத் திருவேதத்தை எம்பெருமானர் (ஸல்.) அவர்கள்பால் கொண்டுவந்து ஒப்படைத்தவர் ஹஜ்ரத் ஜிப்ரயீல் (அலை.) என்னும் தேவ தூதராவர். குர்ஆனின் பாஷை அரபியாகும். இது உலக மக்களெல்லோருக்காகவும் அருளப் பெற்றதாகும். இம்மாண்பு மிக்க திருமறையில், மனிதகோடிகளின் ஆன்மார்த்த உலகார்த்த முன்னேற்றத்துக்கும், விமோசனத்துக்கும் என்னென்ன போதனைகள் வேண்டுமோ அவையாவும் மிகப் பரிபூரணமாயும் விரிவாயும் அமையப்பெற்றிருக்கின்றன. இந்தப் போதனைகள் யாவும் மனித இயற்கைக்கு ஏற்றனவாகவும் அனுபவத்தில் பின்பற்றக் கூடியனவாகவுமிருக்கின்றன. ஆகவே, குர்ஆன் ஷரீபானது உண்மைத்திருமறை யென்பதும், பரிபூரண போதனை நிரம்பியதென்பதும், சர்வ லோக மக்களுக்குமுரியதென்பதும் இனிது விளங்குகின்றது.

பரிபூரண மனித சிரேஷ்டர்

நபீ ஆதம் (அலை.) காலந்தொடுத்து இதுகாறும் எண்ணற்ற மன்பதைகளும், இலக்ஷக் கணக்கான நபிமார்களும் தோன்றிச் சென்றுள்ளார்கள். இவர்கள் யாவரினும் மிகச் சிரேஷ்டரும் பரிபூரண தன்மையாளருமாவர் எனப் போற்றுதற்குரியவர் நமது திருத்தூதர் முஹம்மத் ரஸுல் (ஸல்) அவர்களே யாவர். நபி பெருமானர் (ஸல்.) அவர்கள் தன்மையில் எல்லா குணுதிசயங்களும் ஒருங்கே பூர்த்தியாய் அமையப்பெற்றிருந்தன. இச்சிரேஷ்டர்பால் எத்தகைய குற்றங்குறையுங் காணப்படவில்லை.

நபிகணுயகம் ரஸுல் (ஸல்.) அவர்கள் இறுதித் தீர்க்கதரிசியாகவும், நபிமார்கட்கெல்லாம் முத்திரை யானவர்களாகவும் அனுப்பப்பட்டவர் களாவர். இவர்கட்குப் பின் வேறு நபி கிடையாதாகையால் மனித கோடிகட்கு என்னென்ன போதனையும் அனுகூலங்களும் அளிக்கவேண்டுமோ அவை யாவையும் ஆண்டவன் புறத்தினின்று கொண்டுவந்து அளித்துள்ளார்கள். எம் பெருமானரின் நபித்துவ முடிவை, 'நிருபங்கள் அனைத்தையும் ஒரு பையுள் போட்டுக் கட்டி இறுதியாய் முத்திரையிட்டு பூர்த்தி படுத்தும்' முறைக்கு ஒப்பிடலாம். ஏனெனின், முத்திரையிட்டபின் அப்பையில் வேறு கடிதம் போடப்படுவதில்லை. இவ்வாறே நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்.) அவர்கட்குப் பின் வேறு நபி எவரும் அவதரிக்கமாட்டார்கள்.

சர்வலோக சற்குரு

லோகநாதர் நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்.) அவர்கள் சர்வலோக சற்குருவும், ஜகத்ரக்ஷகருமாவார்கள். அப்பதவிக்குரிய ஆற்றலும், தெய்வீக சகாயமும், பரிபூரண குணாதிசயங்களும் ஒருங்கே அமையப்பெற்றிருந்தனர்.

நிற்க, ஹிந்து வர்க்கத்தில் காணப்படும் பிறிதொரு கூட்டத்தாரும் ஒவ்வொருவரையும் "ஜகத் குரு" என்று கூறுகிறார்கள். "ஜகத் குரு"வென்றால் "எல்லா உலகத்துக்கும் ஒரே ஆசான்" என்பதாகும். ஹிந்துக்கள் கூறுவதை நோக்குமிடத்து எத்தனையோ ஜகத் குருக்கள் இருப்பதாகப் புலனாகின்றது. உண்மையை நோக்குமிடத்து இந்த வாதம் மிக வேடிக்கையாக விருக்கின்றது. உலகமோ ஒன்றுதான். இந்த ஒரு உலகத்துக்கு எண்ணற்ற ஜகத் குருக்களா? இது ஒப்புக் கொள்ளத்தக்க பேச்சாகாது. நியாயமாக ஒரு லோகத்துக்கு ஒரே ஒரு குருதான் இருத்தல்வேண்டும். அக்குருவின் போதனைகள் சர்வ லோகத்தாருக்கும் பொதுவானதாயிருத்தல்வேண்டும். அப்போதனைகளால் சர்வலோக மக்களும் விமோசனமடையத்தக்க சன்மார்க்கம் காணப்படல்வேண்டும். இத்துணை குணங்களும் ஒருங்கே அமையப் பெற்றவர் முஹம்மத் நபிரஸூல்(ஸல்.)அவர்களேயாவர். ஆதலின் இவர்களே உண்மையான "ஜகத் குரு"வாவர். இவர்களது அடிச்சுவட்டில்தான் உலக மக்கள் உய்வதற்குரிய வழி இருக்கின்றது.

மனித வாழ்க்கையும் இஸ்லாமும்.

மனிதன் தனது மாதாவினின்று ஜனிக்கும்போது சிறிய உருவத்தினனா யிருக்கின்றான். அக்காலே அவனதுஆகாரம் தாய்ப்பால் தான். அதுசமயம் அவனது உடலை மறைப்பதற்கு ஒருமுழம் துணி போதுமானதாகும். அதன்பின் குழந்தைப்பிராயம் கடந்து சற்றுப் பெரியவனானால் அவன் ஆகாரத்தில் மாறுதல் ஏற்படுகிறது. சற்றுக் கடினமான உணவை உட்கொள்கிறான். முன்னிலும் அதிகமான உடையால் தன்னுடலை மறைக்கிறான். இவ்வாறே அவன் வாலிப வயதடையும் போது தன் வாழ்க்கையிலும், உண்பது உடுப்பது சுகிப்பது முதலிய விஷயங்களிலும் அபிவிருத்தி யடைந்து பலவித மாறுதல்களை யடைகின்றான். இவ்வித மாறுதல்களும் அபிவிருத்திகளும் மனித இயற்கைக்கு மிகவும் அத்தியாவசியமானவையாகும். இவ்வியற்கை முறையை மனிதன் திரஸ்கரித்து, குழந்தைப் பருவத்தைப்போலவே வாலிபப் பிராயத்திலும் ஒரு முழந்துணி உடுத்துப் பால் உண்டு வந்தால் அவன் நோய்வாய்ப் பட்டுச் சீர்கெட்டு சீக்கிரத்தில் இறந்தே போவான். எனவே,மனிதவாழ்க்கை ஆரம்ப திசையினின்று பரிபூரண நிலையடையும் வரையும் பலமாறுதலும் சீர்திருத்தமும் பெற்று இறுதியில் பரிபக்குவ நிலை யடைந்து உய்ய வேண்டியதாயிருக்கின்றது. மனிதன் பரிபக்குவ நிலை யடைந்தபின் அவன் வீழ்ச்சியுற மாட்டான்.சன்மார்க்க விஷயமும் இவ்வாறே தான். அதில் இப்பரிபக்குவ நிலையை அளிப்பது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் வழிப்பாடேயாகும். இதுதான் முக்தியளிக்கும் மார்க்கமாகும்.

இஸ்லாத்துக்கு முன் ஏற்பட்டிருந்த மதங்கள் உப கருவிகளென்றும், இஸ்லாம் எல்லாவற்றிற்கும் மூலக்கருவி என்றும் கூறலாம். ஏனைய மதங்களெல்லாம் உடலிலுள்ள கால், கை, மூக்கு, வாய், கண், காது முதலிய அவயவங்களைப்போலும், இஸ்லாமானது யாவற்றிற்கும் இராஜகருவி யாகிய ஹிருதயத்தைப் போன்றதுமாகும். மற்ற உருப்புகள் பலஹீனமடைந்துவிட்டாலும் ஹிருதயம் நன்னிலை யடைந்துவிட்டால் க்ஷேமமா யிருக்கலாம். மற்றெல்லா உருப்புகளும் நன்னிலையிலிருக்க ஹிருதயம் கெட்டுவிட்டால் சித்தம் கலங்கி பைத்தியக்காரனாகி நன்மை தீமையொன்றுந் தெரியாமல் கிடந்துழன்று சாகவேண்டியதுதான். ஆகவே மனித வாழ்க்கைக்கு ஹிருதயமாகிய இஸ்லாம் என்ற சன்மார்க்கம்தான் அத்தியாவசியமாய் வேண்டற்படுவதாகும்.

சரீரத்தின் உப அவயவங்களாகிய கால் கரங்களில் கோளாறு ஏற்பட்டு அவை அழுகிப்போய்விட்டால் அவ்வுருப்பை டாக்டர் அறுத்தெடுத்து விடுகின்றார். இங்ஙனம் அறுத் தெறிந்தால்தான் தேகாரோக்கியம் உண்டாகும். இன்றேல் அந்நோயால் மனித வாழ்க்கையே குலைந்துபோகும். அதுபோன்றேஇதர மதங்களாகிய உப அவயவங்கள் சீர் கெட்டுப்போனதால் அவற்றை யெல்லாம் விட்டு நன்னிலையிலுள்ள ஹிருதயம்போன்ற இஸ்லாத்தை பற்றிப்பிடித்து முக்தி பெறுதல்

வேண்டும். ஆண்டவனிடம் முக்தி யடைவ தற்கு இதுவே தக்க மார்க்கமாகும்.

இஸ்லாத்தின் பிரகாசம்.

பரிசுத்த தீனுல் இஸ்லாத்தை என்றும் மங்காத ஒரு பிரகாசத்துக்கு ஒப்பாக்கலாம். பொதுவாகப் பிரகாசமானது மனிதவாழ்க் கைக்கு இன்றியமையாததான தொன்றாய் இருக்கின்றது. விளக்கு வெளிச்சத்தைவிட சூரிய வெளிச்சம் மிகப் பிரயோஜனகரமான தும், சிறப்புடையதுமாகும். சூரியப்பிரகாச மானது சர்வலோகத்துக்கும் போதுமான ஏக விளக்காய் இலங்குகின்றது. சூரியப்பிர காசத்தின் முன்னிலையில் விளக்கு வெளிச்சம் பயன்படாமற்போகும். எனவே, மானிடன் ஒவ்வொருவனும் இயற்கை ஜோதியாகிய சூரியப் பிரகாசத்தால் பயன்பெறுதலே சிறந்ததாகும். இஸ்லாம் சன்மார்க்கம் சூரியப் பிரகாசத்துக்கு நிகராகும். இஸ்லாத்தினால் சர்வலோக மாந்தரும் ஏகபோகமான அனு கூலங்களைப் பெறுவர். சூரியன் எல்லோருக் கும் பொதுவான நலன் தருவதாயிருப்பதே போல் இஸ்லாமும் எல்லோர்க்கும் பொது வான அனுகூலந் தருவதாயிருக்கிறது. என வே, மனிதகோடிகள் இஸ்லாத்தையே கடைப்பிடித்து அபரிமிதமான நலன் பெற்று இகபர சாதனமடையமுயற்சித்தல்வேண்டும்.

மற்றும் இஸ்லாத்தை விருக்ஷங்களில் உண் டாகும் தீங்கனிகட்கும் ஒப்பிடலாம். எவ் வாறெனில் நாம் பல செடிகளையும் விருக்ஷங் களையும் நட்டு வளர்க்கின்றோம். இதில் நமது முக்கியக் கோரிக்கை பழங்கள் பெற்று நல னடையவேண்டு மென்பதாகும். பழங்கள் பறிக்கப்பட்டதற்குப்பின் மரங்கள் பயனற்று போகும். பழம் கைக்குவந்தபின் விருக்ஷங் கள் நாசமாகிவிட்டாலுங்கூடப் பாதகமில்லை. ஏனெனின், ஒவ்வொரு பழத்திலுமுள்ள விதையில் புது விருக்ஷம் முளைப்பதற்குரிய சக்தியிருக்கிறது. இவ்வாறே இஸ்லாத்தின் சிறப்புமாகும். ஆதியில் பற்பல மதங்கள் தோன்றின. அவற்றின் காலமெல்லாம் முடி வடைந்து இறுதியில் இனிய கனிபோன்ற பரிசுத்த இஸ்லாம் மதம் அருளப்பெற்றது. இவ்விஸ்லாம் என்னும் கனி கிடைத்துவிட்ட பின் பட்டுப்போன மரங்களாகிய பழைய மரங்கள் வேண்டுவதில்லை. இஸ்லாத்தில் சர்வ நலன்களும் அமையப்பெற்றிருப்பதால் பிறமதங்களெல்லாவற்றையும் திரஸ்கரித்து இஸ்லாத்தைக் கைக்கொள்ளவேண்டியதே இறைவனிடம் விமோசனம் பெறுவதற்குரிய சீரான மார்க்கமாகும்.

சோதரர்காள்! இஸ்லாத்தின் பெருமைகளை யும், சிறப்புகளையும் உற்றுணர்ந்து பாருங் கள்! மிகமிகச் சிரேஷ்டமான இஸ்லாத் தையே பின்பற்றி யொழுகுங்கள்! இஸ்லாம் சமத்துவம், சமரஸம், பரிபூரணம், சகோத ரத்துவம், ஐக்கியம் யாவும் நிறைந்த சன் மார்க்கமாகும். மனிதனைப் பரிபக்குவப் படுத்தி முக்தியளிக்கும் தன்மை வாய்ந்தது இஸ்லாம்தான். இஸ்லாத்தில் வகுப்புப் பிரி வினை, ஜாதி வித்தியாஸம் ஆகியவை கிஞ்சித் தும் கிடையாது. இஸ்லாத்தைப் பின்பற் றும் முஸ்லிம்களெல்லோரும் ஏக சகோதரர் களேயாவர். இஸ்லாம் மிகத் தாராள தன்மை யுடையதாகும். ஒவ்வொரு மனிதரையும் இச் சன்மார்க்கம் தூய்மைப்படுத்தி முன் னுக்குக் கொண்டுவரும். எனவே சுத்த சத் திய தீனுல் இஸ்லாத்தைப் பின்பற்றி யொழுகி இகபர சாதனங்கள்பெற்று இறைவன்பால் உய்யக் கடவோமாக! ஆமீன்!!

குதுபெ ஜீலானியின் அரும்பெரும் போதனைகள்.

இந்த ரபீஉல் ஆகிர் மாதம் மிகப் புனித மும், சிறப்பும் பெற்ற திருத்திங்களாகும். அவுலியாக்களின் திலகமாகிய கவ்துல் அஃலம் செய்யிதுஸ்ஸாதாத் முஹ்யித்தீன் அபூ முஹம்மத் அப்துல்காதிர் ஜீலானி (ரலி.) அவர்கள் (ஹி 561-ம் ஆண்டு) இதே மாதம் 11-ந் தேதிதான் இத்தரணியை நீத்து விண்ணுலகடைந்தார்கள். அம்மகா னது பரிசுத்த அடக்கஸ்தலம் பக்தாத் மா நகரில் இருக்கின்றது. இம்மாதம் அம்மகான் அவர்களது ஆன்மாவின் சாந்திக்காக குர் ஆன்முதலியன ஓதி ஆண்டவனிடம்பிரார்த்

தனை புரிவது மேலான காரியமாகும். தவிர அம் மகானவர்களின் ஜீவிய வாழ்க்கை, உலகத் தொண்டு, சன்மார்க்க சேவை, உதாரத் தன்மை, நற்குண நல்லொழுக்கங்கள், பரோபகார உணர்ச்சி ஆகியவற்றை பொதுஜனங்கட்கு எடுத்துக் காட்டுவது உத்தமமான காரியமாகும். அம் மகான் அவர்கள் பெயரால் ஏழை யெளியோர்கட்கு விருந்தளித்து தானதர்மம் புரிவது நலன் பயக்கத் தக்கதாகும்.

இங்ஙனம் நம்மவர் அம் மகானைக் கொண்டாடுவது எதற்காகவென்பதை உற்றுணர வேண்டும். முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி.) அவர்கள் மக்களின் மாமணியாய் விளங்கினர்கள். சன்மார்க்கபோதனை புரிந்து மக்களை முன்னேற்ற மடையச் செய்தார்கள். பல சிஷ்யர்கட்கு நேர்வழி காட்டி அவர்களைச் சன்மார்க்கத்தில் நிலை நிறுத்திவைத்தார்கள். ஏழை யெளியோர்கட்கு பேராதரவு புரிந்து சமூகத் தொண்டாற்றினர்கள். இதுவன்றி அப்பெரியார் புரிந்த திருச்சேவைகள் எண்ணிறந்தனவாகும்.

பொதுவாக ஆண்டவனது அவ்லியாகளுக்கு அமைந்திருக்க வேண்டிய அம்சங்களாகிய, இறைவனதுனது பயபக்தி, அவனுக்காகவே வாழ்க்கையை நடத்தல், அவனுக்காகவே தியாகம் புரிதல் முதலியனவும் நம் மஹ்பூப் சுப்ஹானீ (ரலி) அவர்கள்பால் பரிபூரணமாக அமைந்திருந்தன. சுருங்கக் கூறுமிடத்து, "எனதுவணக்கமும், எனது தியாகமும், எனது ஜீவியமும், எனது மரணமும் சர்வலோக ரக்ஷகனுகிய ஆண்டவனுக்கே உரியனவாகும், அந்த ஆண்டவனுக்கு ஏதொன்றும் இணைகிடையாது. அவனுக்காக பணிபுரிவதற்காகவே யான் ஏவப்பட்டேன்; யான் முஸ்லிம்களுள் முதல்வனுவேன்'' என்னும் திருவாக்கியத்துக் கொப்ப அப்பெரியாரவர்கள் வாழ்ந்து வந்தார்கள்.

மேலும் மஹ்பூப்ஸுப்ஹானீ முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்களை இவ்வுலகமுஸ்லிம்கள் பெரும்பாலும் கொண்டாடிவருவதற்குக் காரணமென்ன வென்று உற்றுணருங்கால், அப்பெரியார் இவ்வுலக மக்களுக்கென்றும், சன்மார்க்கத்துக்கென்றும் ஆற்றியதொண்டுகளும், புரிந்த தியாகங்களுமேயாமென்பது நன்குவிளங்குகின்றது. "முஹ்யித்தீன்'' என்பது நமது மகான் அவர்கட்கு வழங்கும் சிறப்புப்பெயராகும். இதன் பொருள் "சன்மார்க்கத்தை ஜீவிக்கச்செய்தவர்'' என்பதாகும். உண்மையாகவே, அவுலியாக்களின் திலகம் அவர்கள் இதற் கொப்பவே தம் ஜீவியகாலமெல்லாம் தொண்டுபுரிந்துள்ளார்கள். எண்ணற்ற அயல் மதத்தினரை இஸ்லாம் மதத்தை மனமாரத்தழுவிக் கொள்ளுமாறு செய்துள்ளார்கள். முஸ்லிம் பாமரர்களிடையே பரவிக்கிடந்த துர்க்கிருத்தியங்கள், மூடப்பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைக் கெல்லியெறிய தம்மாலானவரை முயற்சி செய்தார்கள். இஸ்லாமியப் பிரசாரம்புரிந்து வந்து, அது அபிவிருத்தியடையச் செய்வதிலேயே எப்பொழுதும் ஈடுபட்டிருந்தார்கள். ஷிர்க், பித்அத்துகளை அகற்றுவதில் பெரும் முயற்சி செய்து வந்தார்கள். எனவே இப்பெரியாரவர்கள் சன்மார்க்க ஜீவியஸ்தராய் விளங்கினர்கள்.

ஹஜ்ரத் அவர்கள் 93 - வருடங்கள்வரை ஜீவித்திருந்தார்களெனினும் தமது ஜீவிய காலமெல்லாம் வணக்கத்திலும், இஸ்லாம் மதச் சேவையிலுமே ஈடுபட்டிருந்தார்கள். இப்பெரியா ரவர்களது காலத்தில் நாட்டில் வகுப்புவாதங்களும், பிணக்குகளும், தீயகருமங்களும், ஷிர்க்கு பித்அத்தான செயல்களும் பெருத்துப் போயிருந்தன. எனவே இப்பெரியாரவர்கள் ஆண்டவனது கட்டளையையும், நபிகள்நாயகம் ரஸூல் (ஸல்.) அவர்களுடைய அடிச்சுவட்டையும் பின்பற்றி நடந்து சுமார் 40 - வருடகாலம்வரை ஒய்வில்லாமல் மக்களுக்கு நேர்வழி காட்டுவதிலும், உபதேசங்கள்புரிவதிலும், ஷிர்க்கு பித்அத்தான கெட்டகாரியங்களை விலக்குவதிலும் ஈடுபட்டிருந்து தொண்டாற்றினர்கள். எனவே, இப்பெரியாரின் அரும்பெருந் தொண்டின் காரணமாக அந்தகார அவிவேக மேகங்கள் நீங்கி இஸ்லாம் மதம் களங்கமில்லாமல் ஜோதி மயமாய் பிரகாசிக்கலாயிற்று. மனிதகோடிகள் இப்பெரியாரின் நற்போதனை எனும் ஊற்றினின்று ஞானமிர்தத்தை அள்ளிப்பருகி விவேக தாகந்தீர்ந்து ஞான மணிகளாய் விளங்கலானர்கள்.

ஹஜ்ரத் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானீ (ரலி.) அவர்கள் சன்மார்க்கப்பிரசங்கம்புரிவதில்இணையற்றவர்களாயிருந்தார்கள். இவர்கள் இதோபதேசம்புரியுங்கால் அதைக்

கேட்கும் ஜனங்கள் மெய்மறந்து ஆனந்த பரவசராகி மிக பக்திசிரத்தையுடன் கேட்பார்கள். அவர்களுடைய பிரசங்கத்தை முஸ்லிம்கள், முஸ்லிமல்லாதவர்கள் ஆகிய பலரும் பொதுவாய்க்கேட்டு இன்புறுவார்கள். அவர்களது அரும்பெரும் பிரசங்கங்களைக் கேட்டு எண்ணற்ற காபிர்கள், முஷ்ரிக்குகள், பாபிகள், நாஸ்திகர்கள், மதப்பிரஷ்டர்கள் ஆகியவர்கள் தங்கள் தீய காரியங்களையும் துன்மார்க்கங்களையும் விட்டுத் 'தவ்பா' செய்து மனமுவந்து பரிசுத்த இஸ்லாத்தின் சன்மார்க்கத்தைப் பின்பற்றி சத்தியசீலர்களாய் விட்டனர். அநேக அயல்மதவாதிகள் நம் மகான் அவர்களின் பிரசங்கங்களைக்கேட்டு இஸ்லாம் மதத்தைதழுவி முஸ்லிம் களாயுள்ளார்கள். சுருங்கக் கூறுமிடத்து நமது குத்பு அவர்கள் இஸ்லாமிய பிரசாரத்துக்கொரு தீண்டாமணி விளக்காய் விளங்கிவந்தார்கள்.

ஹஜ்ரத் அவர்களது உபதேசம்.

ஹஜ்ரத் மஹ்பூப் ஸுப்ஹானீ அப்துல் காதிர் ஜீலானீ (ரலி.) அவர்கள், அவ்வப்போது காலதேச வர்த்தமானத்துக்கேற்ப, பொதுஜனங்கள், அரசர்கள், பகீர்கள், ஸூபிகள், ஆலிம்கள், முரீதுகள், ஞானவான்கள், போதகர்கள், வணக்கஸ்தர்கள் முதலியோர்கட்கு இதோபதேசங்கள் புரிந்து அவர்களை சன்மார்க்கத்தின் பக்கல் அழைத்துவந்தார்கள். இங்ஙனம் அம்மகான் புரிந்த பிரசங்கங்களை யெல்லாம் ஒருகட்டுரையிலேயே விபரமாய்க் கூறிவிடல் முடியாது. எனவே, சில முக்கிய அம்சங்களின் சாரத்தைமட்டும் ஈண்டுக்கூறுவாம்.—

(1) வணக்கமும் கல்வியும்.

ஆண்டவனைத் தியானித்துவணங்கி ஆபிதாவதற்குமுன் ஒவ்வொருவரும் மார்க்கக்கல்வியைப் பூரணமாய்க் கற்றுத் தேறவேண்டும். மார்க்கக்கல்வி யறிவில்லாமல் வணக்கஞ்செய்ய முற்படுவது கையில் விளக்கில்லாமல் அந்தகாரத்தில் செல்வதற் கொப்பாகும். ஒருவன் மார்க்கக்கல்வியை சரிவரக்கற்று அதன்படி அனுஷ்டானம் புரிவானாைல், இறைவன் அன்னவனுக்கு ஆத்மீக ஞானத்தை அருள்கின்றான். ஷரீஅத் என்னும் திருவிளக்கை நாம் அணையாமல் பாதுகாத்து அதன் ஒளி வழியேசெல்லவேண்டும். மூஸா (அலை.) அவர்களைப்போல் பக்தியில் சிறந்து இலங்கவேண்டும்.

(2) கல்வியின் அவசியம்.

கல்விகற்பது ஒவ்வொரு அடியாரின் கடமையாகும். கல்வி ஆண்டவனின் மகாத்மியத்தையும், நன்மை தீமையையும் நன்குணர்ந்து அனுஷ்டிப்பதற்குப் பயன்படுவதாக யிருத்தல்வேண்டும். கல்விகற்பது பெருமைக்காகவும், உலகசுகத்துக்காகவும் மிருக்கக்கூடாது. கல்விஞானம் மனிதவாழ்வுக்கு உயிர்போலாகும். மூடத்தன்மை நம் வாழ்வுக்கு மரணம் போலாகும்.

(3) ஆலிம்களின் சகவாசம்.

ஆலிம்களின் சகவாசத்திலிருங்கள். அவர்கட்குப் பணிவிடை புரியுங்கள். அவர்களிடமிருந்து உங்களுக்குத் தெரியாத விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். ஆலிம்களிடம் கண்ணியமாகவும் மரியாதையாகவும் நடந்து கொள்ளுங்கள். அவர்களுடைய அபாரக்கல்வியினின்று நன்மையும் இதமும்பெறுவதற்காக அவர்களுடன் உறவாடுங்கள். அவர்களைக்கிஞ்சித்தும் தூஷிக்காதீர்கள்.

(4) பிரசங்கிகளின் கடமை.

மார்க்கப் பிரசங்கிகள் நின்று உபதேசம் புரியும்இடம் ஆண்டவனின் உத்தம அடியார்களும் மகான்களும் நிற்கும் இடமாகும். அந்தப் புனித ஸ்தானத்துக் குரியவண்ணம் உத்தமராய் ஒழுகவேண்டும். கேட்போரின் உள்ளம் பரவசமடைந்து நேர்வழியை அறிந்து கொள்ளவேண்டுமென்ற உன்னத நோக்கத்தோடு பிரசங்கித்தல்வேண்டும். இனிய மொழியில் அரிய உபதேசம் புரிதல்வேண்டும். ஆண்டவனது அருள் ஒன்றைமட்டுமே கருதவேண்டுமே யல்லாமல் மனிதர்கள் பால் கூலியைக் கோரலாகாது.

(5) கல்விவான்களின் கடமை.

கல்விகற்ற அறிஞர்கட்டுபெருமை தகாது. மனத்தூய்மை வேண்டும். பரோபகார சிந்தனைவேண்டும். தாம் ஆண்டவனுக்காகவே கற்றகல்வியை ஆண்டவனுக்காகவே பாமரர்கள் பால் உபயோகப்படுத்தவேண்டும். தம் கல்வியைக்கொண்டு உலக மக்களிடம் பெருமைவேண்டிநிற்பது சரியன்று. பெருமையும் கீர்த்தியும் அளிக்கவல்லவன் ஆண்டவன் ஒருவனேயாவன். அவனே சர்வ பாக்கியங்களையும் அளிப்பவன். அவனிடமே நம் பிரார்த்தனை எற்கும்.

(6) ஏழைகளுக்கு போதனை.

ஏழை சகோதரனே! பணக்காரனுகிப் பெருமையோடு வாழவேண்டுமென்ற பேராசை உனக்கு வேண்டாம். அவ்வெண்ணம் தீமையையே விளைவிக்கும். போதுமென்ற மனமே பரமபாக்கியத்தையும் அருளுவதாகும். அறிவுடைய மாந்தர் இதைத்தான் விரும்புவர். ஆண்டவன் உனக்கு அளித்திருப்பதைக் கொண்டே பூரணத் திருப்திகொள். மனம், வாக்கு, நடத்தை ஆகியவை பரிசுத்தமாய் இருப்பது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் வேண்டற்பாலதாகும். தொழுகை, நோன்பு, வணக்கம், முதலியவற்றில் மனத்தூய்மையே பிரதானமாகும். இதுவே நமது இகபரத்துக்குரியநற்சாதனமாகும்.

(7) வணங்குபவர்களுக்குப் போதனை.

ஆபித்களே! தியானம், தொழுகை, நோன்பு, தியாகம், பிராயாசை, உண்ணல், குடித்தல், இருத்தல், உறங்கள் முதலிய எந்தக் காரியஞ் செய்யும்போதும் ஆண்டவனுக்காக வேபுரிகிறேம் என்ற தூய்மையான எண்ணம் உங்களிடம் குடிகொண்டிருத்தல் வேண்டும். தற்பெருமை, மன இச்சை, பிறரின்புகழ் ஆகியவற்றை ஒரு சிறிதும் விரும்பலாகாது. ஆண்டவனுடைய வணக்கத்தில் தூய்மையான உள்ளமே பிரதானமாய் வேண்டும். அதிலும் முக்கியமாய் ஷரீஅத்தின் சட்டதிடங்களைப் பின்பற்றி நடந்துகொள்ளல்வேண்டும். ஆண்டவனின் வேதமாகிய குர்ஆனும், ரஸூலுல்லாவின் கட்டளை—நடத்தையாகிய ஸுன்னத்தும் உங்கள் அநுஷ்டானத்துக்கு முக்கிய வழிகாட்டியாயிருத்தல் வேண்டும்.

(8) ஞானிகட்கு உபதேசம்.

யாவற்றிலும் தூய்மையா யிருப்பதே 'ஸூபி' களாகிய ஞானவான்களுக்கு அழகு. உணவில் ஹலாலானதையே உண்ணல்வேண்டும். இவ்வாறேஉடுத்தல், இருத்தல், வாங்குதல் கொடுத்தல் யாவற்றிலும் ஹலாலான வழிகளையே பின்பற்றவேண்டும். 'ஸூபி' என்ருல் 'தூய்மை' யானவன், என்பதுபொருள். ஆதலின் இப்பொருளுக்கொப்ப ஒழுகவேண்டும். மனத்தூய்மையோடு ஆண்டவனைத்தியானிக்கவேண்டும். ஷரீஅத்தைப் பிரதானமாய் கொண்டு அதன்படி நடக்கவேண்டும். ஷரீஅத்தின்படி நடந்தால்தான் ஞானியாதல் முடியும். ஷரீஅத்துக்கு விரோதமாக நடந்துகொண்டு ஜபிப்பதாலும், தஸ்பீஹூம் தஹ்லீலும் ஓதுவதாலும் மட்டுமே இறைவனின் ஞானம் கிட்டிவிடாது. ஆண்டவனின் முக்தியை அடைய மனத்தூய்மையும், ஏகாக்கிரசித்தமும் வேண்டும்.

(9) முரீதுகளுக்குப் போதனை.

முரீதுபெற்றவர்கள் தமது ஞானபோதகர் போதித்த வண்ணம் நடந்துகொள்ளவேண்டும். பொய் சொல்லலாகாது. சிறு பாபமும் செய்தலாகாது. உலக பாசத்தால் இறைவனை மறக்கலாகாது. எப்போதும் இறைவன் தியானம் மனத்திலிருந்து கொண்டே இருத்தல்வேண்டும். இருதயம் இறைவனுக்குரியதாகும். அந்த ஹிருதயத்தை இறைவனின் உறைவிடமாக்கல் வேண்டும். ஆண்டவனுக்கு சதா பயப்படவேண்டும். ஆண்டவனுக்குச் சிறிதும் மாறுபாடு செய்யலாகாது. பேராசை, நயவஞ்சகம் முதலியவற்றை விட்டொழித்தல் வேண்டும். மூமினனவன் ஆண்டவனது கட்டளைகளை ஏற்று சரிவர ஒழுகுவதினுல்தான் முக்தியடைகின்ருன். அதிகமாய் ஆண்டவனைத் தியானித்து 'நபில்' தொழுதல்வேண்டும்.

ஆண்டவன்மீது திடமான நம்பிக்கை கொள்ளல்வேண்டும். ஈமான் உறுதியானதாயிருக்க வேண்டும். வெளிப்படையான அநுஷ்டானத்தை ஷரீஅத்துக்கு ஒத்ததாக்கவேண்டும். அந்தரங்கமான சிந்தனை முதலியவற்றை ஆண்டவனின் தியானத்துக்குரியதாக்க வேண்டும். இவையே ஒவ்வொருவருக்கும் வேண்டற்பாலதாகும்.

அதிகாரிகட்குப் போதனை

(ஹி. 545-ம் வருடம் ஷஅபான் மாதம் 20-ந்தேதி ஹஜ்ரத் முஹியித்தீன் அப்துல் காதிர் ஜீலானீ அவர்கள், அரசர், அதிகாரி, காஜீ முதலியோரின் கடமைகளைப்பற்றி புரிந்தபோதனையின் சாரம்பின்வருமாறு:—) இக்காலே சில அதிகாரிகளும் அரசர்களும் அக்கிரமங்கள் புரிகின்றனர். பொதுச் சொத்தை மோசம் செய்கின்றனர். பொது மக்களைக் கொடுமைக் குள்ளாக்குகின்றனர். இக்கொடுங் காரியங்களின்று அன்னேர் விலகித் தூய்மையாதல் வேண்டும். இன்றேல் ஆண்டவனின் கோபமும், மகாத்மியமும் அவர்களின் ஆர்பாட்டங்களை அடக்கி ஒழித்துவிடும்.

அரசர்களே! அதிகாரிகளே! உற்றுணர்ந்து பாருங்கள். இவ்வுலக வாழ்வு நிலையற்றது. இறைவனின் அருளும், பரலோக வாழ்வுமே சாஸ்வதமானது. உலக இச்சையில் மூழ்கி பரலோக சாதனத்தை மறந்துவிடாதீர்கள். நீதி தர்மத்தைக் கைக்கொள்ளுங்கள். அரசர்கள், அக்கிரமம் புரியும் நீதிபதிகளை (காஜிகளை) நியமிப்பார்களாயின் ஆண்டவனது கோபத்துக்கு ஆளாவார்கள்.

முனாபிக் களுக்கு நற்புத்தி

முனாபிக்களே! நயவஞ்சகர்களே! ஆண்டவனுக்குப் பயப்படுங்கள். உங்கள் நடத்தைகளை யுணர்ந்து நீங்களே வெட்கப்படவேண்டாமா? இப்போது நீங்கள் வெட்கப்பட்டுத் திருந்தாவிட்டால் இறுதிகாலத்தில் நீங்கள் ஆண்டவன்முன் கேள்வி கணக்கு கேட்கப்பட்டு தண்டனை பெற்று அவமானமடைவீர்களன்றோ. உங்களின் சின்னஞ்சிறு நடத்தைகளையும் ஆண்டவன் கவனித்துக்கொண்டேதானிருக்கின்றான். ஆகவே, சத்தியத்தைப் பின்பற்றி, உத்தமராகிவிடுங்கள். செய்துவிட்ட பாபங்கட்கு ஆண்டவனிடம் மன்னிப்புக்கேட்டு தவ்பா செய்யுங்கள்.

பொதுஜனங்கட்கு இதோபதேசம்

ஆண்டவன் உங்கட்கு அளித்துள்ள நற்பாக்கியங்கட்கு நன்றி (ஷுக்ரு) செய்யுங்கள்; ஆண்டவன் நமக்களித்துள்ள ஒவ்வொரு பாக்கியத்தையும் எண்ணிப்பாருங்கள். அதை அருஞ் சாதனமெனக்கொண்டு ஆண்டவனுக்கு முற்றும் அடிபணிந்து நடவுங்கள். ஆலிம்கள், மௌலவிகள், பிரசங்கிகள், பெரியார்கள் முதலியோரின் உபதேசங்களைக்கேட்டு அதன்படி ஒழுகுங்கள். பாவ காரியங்களின்றும் விடுபட்டுப் பரிசுத்தராகி ஒழுகுங்கள்.

ஆண்டவனது கல்பனையாகிய விதியைப் பற்றி வீண் தர்க்கவாதம் புரியாதீர்கள். அதனால் நன்னம்பிக்கைக்குப் பங்கம் ஏற்படும். திடமான எண்ணங்கொள்ளுங்கள். ஆண்டவனது ஒவ்வொரு காரியத்தையும் நமக்கு இதமானதென்று கருதுங்கள். இதில்தான் மனநிம்மதியும் திருப்தியுமிருக்கின்றன. ஆண்டவனின் காரியங்களிலுள்ள பரம ரகசியங்களை நம் சிற்றறிவால் கண்டு பிடிப்பதுமுடியாது. ஆகவே, அதன்மீது ஈமான்கொள்வதே நமது கடமையாகும். ஆண்டவனின் காரியங்கள் மகத்தானவையென்று கருதுங்கள். அவனது கட்டளையும் சட்டதிட்டங்களுமான இஸ்லாமிய ஷரீஅத்தின்படி நடந்து உயர்வு பெறுங்கள். ஆண்டவனின் நல்லடியாராக ஆகுங்கள்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள்மீது விசுவாசம் புரியுங்கள். அவர்கள் லோகதயாளராய் வந்து உலகத்தோர்க்குப் புரிந்த உபகாரங்களுக்காக அவர்களைப் போற்றிப் புகழுங்கள். நபிபெருமானாரை நீங்கள் விசுவாசித்தால் ஆண்டவன் உங்களை விசுவாசிப்பான். நபிகள்நாதர் (ஸல்.) அவர்களது வழக்க ஒழுக்கங்களாகி ஸுன்னத்தைப் பின்பற்றி நடவுங்கள். மனைவிமக்களை மனமார அன்புடன் ஆதரியுங்கள். உற்றார் உறவினரோடு நேசமாய் இருங்கள்.

ஆண்டவனது மகாத்மியத்தை எண்ணிப் பாருங்கள், எல்லாம் வல்ல ஆண்டவன் ஒருவனவான்; ஆதியும் அந்தமும் அவனே: இவ்வகிலம் அனைத்தையும் ஆக்கி, பராமரித்து, அழித்து பரிபாலிப்பவன் அவனே; நாம் அவனையே வணங்குவோம்; அவனுக்கே அஞ்சுவோம்; அவனிடமே உதவிவேண்டுவோம்; அவன் ஏவல்களை ஏற்று அவன் விலக்கல்களை விட்டுத் தவிழ்ந்து நடந்து நல்லடியாராவோம். இதுவே நமதுவாழ்வின் இலக்ஷிய மாகும்.

தொழுகை, நோன்பு, ஜகாத், குர்ஆன் ஓதல் முதலிய அனுஷ்டானங்களைத் தவறவிடாமல் புரிந்துவரவேண்டும். நாம் உலகில் தோற்றுவிக்கப்பட்டது உலகசாதனங்களைக் கொண்டு சுகித்துவாழ்ந்து இன்புறுவதற்காக வல்ல; இவற்றை யெல்லாம் அருள்புரிந்த ஆண்டவனுக்கு முற்றும் அடிபணிந்து ஒழுகுவதற்காகும். ஆதலால் உலக ஆசாபாசத்தில் ஆழ்ந்துவிடாமல், உள்ளத்தில் ஆண்டவனின் பக்தியைப் பிரதானமாய்க் கொள்ளுங்கள்.

இஸ்லாத்தின்நிலைமையை எண்ணிப்பாருங்கள். அதை முன்னேற்றத்துக்கு கொண்டுவர முயலுங்கள். உங்கள் குடும்பத்தையும், வர்க்கத்தையும் சீர்திருத்துங்கள்- உண்மையான மூமின் இவைகளைத்தனதுகடமையென எண்ணி பொதுஜன ஊழியம் புரிவான். நாமும் நல்லொழுக்கம் பெற்று பிறரையும் சீர்திருத்துவது பெரும்புண்ணியமான காரியமாகும்''.

நேயர்காள்! ஈண்டு எடுத்தோதப்பட்ட நீதி உபதேசங்களைப் பின்பற்றி நடப்பது நமது

கடமையாகும். ஹஜ்ரத் முஹியித்தீன் அப்துல்காதிர் ஜீலானி அவர்கள்மீது நாம் விசுவாசம் கொண்டிருப்பதற்குத் தக்க அத்தாக்ஷி, அம்மகானின் சற்குணநல்லொழுக்கங்களை உணர்ந்து அவற்றைப் பின்பற்றி நடப்பதும், அவர்களின் இதோபதேசங்களை மனமுவந்து ஏற்று ஒழுகுவதும், அவர்களைப் போல் பொதுஜன வேலைகளில் ஈடுபட்டுபிறரைச்சீர்திருத்தி நம்சமூகத்தை முன்னுக்குக் கொண்டுவருவதுமாகும். எனவே, இப்புனித ரபீஉல் ஆகிர் மாதத்தில் இந்நற்சேவைகளில் ஈடுபடநாம் இன்றேபிரதிக்ஞை செய்துகொள்வோமாக. வஸ்ஸலாம்.

மாதர்பகுதி.

குழந்தைகள் ஒழுக்கமும் மாதாவின் கடமையும்.

(போப்பால் மும்தாஸ்பேகம் எழுதுவது.)

குழந்தைகளை ஒழுங்குக்கு கொண்டுவருவதன் பிரதானவழி அவற்றின் நடத்தைகளைச் சீர்திருத்துவதே யாகும். உள்ளத்தில் உள்ளதை வெளிப்படுத்திக் காட்டுவது சரீரத்தின் வேலையாகும். ஆதலின் மக்களுக்குச்சரீரசுகமும் அத்தியாவசியமானதே. அதனினும் மிகமிக அத்தியாவசியமானது மனத்தூய்மை. மனோ சீர்திருத்த சம்பந்தப்பட்ட இந்த விஷயங்களை யெல்லாம் வாய் வார்த்தை மூலமாகவே சிறுவர்களுக்குப் போதித்து விடுவதென்பது முடியாத காரியம். ஏனெனின் நன்மை என்றால் என்ன, தீமை என்றால் என்ன என்று குழந்தைகள் தாமாகவே பாகுபாடுசெய்து அறிந்துகொள்ளுதல் ஒருகாலும் இயலாது. எனவே, இந்நற்குணங்களை தாய்மார்கள் அனுஷ்டித்துத் தம் அனுஷ்டானமூலமாகத் தம் குழந்தைகட்கும் போதித்துவரல் வேண்டும். இவ்விதம் கற்பிக்கப்படும் நல்லொழுக்கம் தான் குழந்தை பெரிதானபின்பும் அழியாது அதனிடம் நிலைத்திருக்கும். இவ்வாறு முன் ஆலோசனையோடு தம் குழந்தைகட்கு நற்குண நல்லொழுக்கம் போதிக்கும்மாதாக்கள் மிக சொற்பமாகவே யிருக்கின்றனர். வேறு சில தாய்மார்கள் "நம் குழந்தை இவற்றை எப்படி அறிந்துகொண்டு கற்றுக்கொள்ளப் போகிறது?'' என அறிவீனமாய் விட்டுவிடுகின்றனர்.

குழந்தைகள் விளையாடுங்கால் அந்த விளையாட்டுகளின் வாயிலாகவே சத்தியத்தன்மை, உண்மை பேசுதல், திருடாமை, பிறரைத் தூஷிக்காமை முதலிய நற்குணங்களைப் போதித்தல் வேண்டும். இவ்வித போதனைகளால் குழந்தைகள் தம் விளையாட்டை அபரிமிதமான களிப்புடன் அனுபவிக்கச் செய்வதோடன்றி, அவர்கட்கு சிறுகச்சிறுக நற்குண நல்லொழுக்கங்களையும் போதித்துக்கொண்டே வருபவர்களாகவு மாகின்றோம். உதாரணமாகக் குழந்தைகள் விளையாடும்போது தாங்கள் ஜெயமடைந்ததாகவும் தோல்வியடைந்ததாகவும் பேசிக் கொள்கின்றார்கள். விளையாட்டே யாயினும் வீரமும் தீரமும், ஊக்கமுமுள்ள குழந்தைகள் தாம் வெற்றியடைதல் முடியும். தாய்மார்கள் வெற்றிபெற்ற குழந்தைகளைப்பாராட்டி அவர்களது ஊக்கத்தை சிலாகித்துப்பேசினால் குழந்தைகள் மேன்மேலும் ஊக்கமுள்ளவ ராவர். இதேபோல் தோல்வியையும் எடுத்துக் கூறி அதற்குஊக்க மின்மையும் சோம்பற்தனமும் காரணமெனப் போதிக்கலாம்.

குழந்தைகளுக்குப் பரோபகார சிந்தை, தயாளகுணம் ஆகியவற்றையும் எளிதில் போதிக்கலாம். எவ்வாறெனின், நம் குழந்தைகள் வைத்துக்கொண்டு விளையாடும் விளையாட்டுக்கருவிகளைப் பிற குழந்தையிடம் இரவலாக கொடுக்கச்செய்து பழக்கி, நற்போதனை புரிந்தால் குழந்தைகளிடமிருந்து பிடிவாதம், உலோபத்தனம் முதலிய தீயகுணங்கள் மறையும். இதைப்போன்றே குழந்தைகளின் விளையாட்டான செயல்களினின்றே அவற்றிற்குத் தாய்மார்கள் பலவிதமான நற்புத்தி, நற்குணம், நல்லொழுக்கம் ஆகியவை

களை இளமையிலிருந்தே எளிதாய்கற்பித்து வரல் முடியும்.

அக்கம்பக்கத்தில் நிகழும் பேச்சுகள், சம்பவங்கள் ஆகியவற்றினின்று கூடக் குழந்தைகள் நற்குண நல்லொழுக்கம், அல்லது தீய குணம் தீயொழுக்கம் இவைகளைப் படித்துக் கொள்ள ஹேது உண்டாகும். எனவே அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைக்கொண்டும் நஞ்சிறார்களைச் சீர்திருத்த முடியும். பிள்ளைகளைப் பயப்படுத்தி மிரட்டி புத்திகற்பிப்பது தற்கால நாகரீகத்திற்கு ஒத்தமைந்ததாகயில்லை.

சிறார்கட்கு அவர்கள் வீடும் ஓர்பாடசாலை போலாகும். பிள்ளைகள் பள்ளிக்கூடம், மத்ரஸா முதலிய இடங்களில் கற்றுக்கொள்ளும் படிப்பினைகளை வீட்டிலேயே தாய்மார்கள் கற்றுக்கொடுக்கலாம். நற்குணங்களைக் கிரகித்துக்கொள்ளுந் தன்மை பிள்ளைகட்கு வேறு, பெரியவர்கட்கு வேறு என்று கருதல் கூடாது. சுருங்கக்கூறுமிடத்து நற்குண நல்லொழுக்கங்களைக் கிரகித்துக்கொள்வதில் பெரியோர்களைவிடச் சிறியவர்களே அதிக குணப்பாடுடையவர்களெனலாம். ஏனெனில் களங்கமற்ற அவர்கள் மனதில் எந்தவிஷயமும் பசுமரத்தாணிபோல் பதிந்து விடுகின்றது.

தங்கள் குழந்தைகள் தங்களைவிடச் சிறந்தவர்களாயிருத்தல்வேண்டுமென்று ஒவ்வொரு தாய் தந்தையரும் இயற்கையாகவே ஆவல் கொள்ளுகின்றனர். வீட்டிலுள்ள தாய், தந்தை முதலிய பெரியவர்களின் குண ஒழுக்கங்கள் எத்துணைக்கெத்துணை சிறந்ததாயிருக்குமோ அத்துணைக்கத்துணை பிள்ளைகளும் நற்குண நல்லொழுக்கங்களை கிரகித்து பின்பற்றி நடந்து சிறந்தவர்களாவார்கள். சிறுவர்களிடம் நல்ல அல்ல தீயகுணங்களேற்படுவது அவர்களது வீட்டு ஜனங்களின் நடவடிக்கைகளைப் பொறுத்திருக்கின்றது. பால்ய காலத்தில் மனதில் பதிந்துவிடும் குண ஒழுங்கங்கள் பிற்காலத்தில் மாறுபடுவது சிரமமானதேயாகும்.

தாய் தந்தைகளின் நடத்தைகளுக் கேற்பவே அவர்களது பிள்ளைகளின் நடத்தைகள் இருப்பதை எங்கும் அனுபவ பூர்வமாய்க் காண்கின்றோம். ஆகவே பிள்ளைகளின் நடத்தைகட்குத் தாய்தந்தைகளே பொறுப்பாளிகளாவார்கள்.

தம் குழந்தைகளைப் பாதுகாத்து வைத்துக்கொள்வதற்காக வேலைக்காரரை நியமிப்பதில் பெற்றோர்கள் மிக ஜாக்கிரதையாக இருத்தல் வேண்டும். நற்குண நல்லொழுக்கமில்லாத வேலைக்காரர்களைக் குழந்தைகளின் பாதுகாப்புக்கென நியமிப்பது குழந்தைகளை கெடுப்பதற்குரிய காரியமாகும்.

குழந்தைகளின் அழுகையை அடக்கிச் சாந்தப் படுத்துவதற்காக பூச்சாண்டி காட்டுவதும், பிள்ளைகளைச் சமாதானப் படுத்துவதற்காக பொய் சொல்லி ஏமாற்றுவதும், பிள்ளைகளை சந்தோஷப் படுத்துவதற்காகப் பொய்யான கட்டுக் கதைகளையும், ஆபாசக் கதைகளையும் சொல்லுவதும், பிள்ளைகளின் குண ஒழுக்க விஷயத்தில் நலன் செய்வதற்கு பதிலாய் தீங்கு விளைவிப்பதேயாகும்.

மெய்யே பேசுவதினுலுண்டாகும் நன்மையையும் கீர்த்தியையும் பிள்ளைகள் உள்ளத்தில் பதிய வைத்துவிட்டால், சுய அனுகூலத்தை முன்னிட்டுப் பொய்சொல்லுவோர்- ஏமாற்றுவோர் ஆகியோரின் பேச்சில் சிக்கிக் கொள்ளாமல் நேர்மையாகயிருப்பர். தாய்மார்கள் எப்போதும் உண்மையே பேசும் வழக்கமுடையவர்களா யிருந்தால் பிள்ளைகளும் தாயின்மீது நல்லெண்ணமும் நம்பிக்கையும் கொண்டுதிகழுவர். இப்படிப்பட்ட பிள்ளைகள் ஒருவிஷயத்தை ஸ்திரப்படுத்திக் கூறுங்கால் தர்க்க வாதத்தையோ தக்க அத்தாக்ஷியையோ எடுத்துக் கூறுவதில்லை. ஆனால் "அந்த விஷயம் என் தாயார் கூறியது!" என்றுதான் கூறுவர். இதனுல் அப்பிள்ளை, தன்தாய் சத்திய ஸ்திரியென்றும், உண்மையே பேசுபவள் என்றும் திடமான நம்பிக்கை கொண்டிருப்பது நன்கு விளக்கமாகும். இங்ஙனமின்றி பெற்றோரே பொய் சொல்லும் வழக்கமுடையவர்களா யிருந்தால், பிள்ளைகளும் அக்கெட்ட வழக்கத்தைப் பின்பற்றுகின்றனர். பிறகு அவர்கள் நாளடைவில் தம் பெற்றோரிடம் நம்பிக்கை யற்றவர்களாகவும், அவர்களை அலக்ஷியஞ் செய்பவர்களாகவும் ஆய்விடுவர்.

இங்ஙனமே இதர நற்குணங்களாகிய, கருணை, உதாரணம், ஊக்கம், முதலியவைகளைத் தாய்மார்கள் தம் மக்களுக்குப் புகட்டுதல் வேண்டும். முதலில் பிள்ளைகளுக்கு நற்குண நல்லொழுக்கங்களைக் கற்பித்துக் கொடுக்காமல் அவற்றைத் துற்குணமுள்ள

தாக ஆக்கிவிட்டுப் பின்னர் அன்பான வசனங்களையும், நீதி யொழுக்கக்கதைகளையும், மார்க்கப் போதனைகளையும், பெரியார்களின் நன்மொழிகளையும் கற்றுக் கொடுப்பதால் பிள்ளைகளுக்கு அதிக பலன் ஏற்பட்டு விடுவதில்லை.

பெற்றோரில் சிலர் தங்கள் பிள்ளைகளின் முன்னிலையிலேயே பிறரைப்பற்றிக் குறை கூறுவதையும், அழுக்காறு கொண்டு தூஷிப்பதையும், பிறரைப்பற்றி தங்கள் உள்ளத்தில் கிடக்கும் பொறாமையை வெளியிடுவதையும் நாம் காண்கின்றோம். இதனால், அந்தப் பிள்ளைகள் தாமும் அவ்வாறே பிறரைக்குறைகூறவும் தூஷிக்கவும் பொறாமைப்படவும் தம் பெற்றோரிடமிருந்தே கற்றுக்கொள்கிறார்கள். இந்தக் கெட்டபடிப்பினை யானது அப்பிள்ளைகளின் பெரியவயதிலுங்கூட நிலைத்துநிற்கும்.

ஒரு சிலவீடுகளிலுள்ள பிள்ளைகளின்குணத்துக்கும் நடத்தைக்கும் மூலகாரணமாயிருப்பது பெற்றோர்களின் அஜாக்கிரதையும், அவ்வீட்டிலுள்ளாரின் நடவடிக்கைளும் தான் என்பதை நாம் அனுபவமாய்த்தெரிந்துகொள்கிறோம். பிள்ளைகளை சிறுபால்யந்தொடுத்தே நேர்வழியில் செலுத்துமாறு பழக்கிவராமல் எதேச்சாதிகாரமாய் விட்டுவிட்டு கடைசி காலத்தில் தம் பிள்ளைகளின் தீய நடத்தைகளுக்காகப் பரிதாபப்பட்டழுவதினால் பயனொன்றுமில்லை. வெள்ளம் வரும் முன்பே அணைபோட்டுக் கொள்ளவேண்டுமே யல்லாமல், வெள்ளம்புரண்டு ஓடுங்கால் பரிதாபப்படுவதனால் ஏதேனும் பயனுண்டாமோ?

ஆகவே முடிவாக ஈண்டு தாய்மார்கட்குச் சில நல்மொழிகளைக் கூற விரும்புகின்றேன். அதாவது, தம் பிள்ளைகளுடைய் தன்மையில் நற்குண நல்லொழுக்கம் முதலியன துலங்க வேண்டுமென்று ஆசையுறும் தாய்மார்கள் முதலில் தாமே நற்குண நல்லொழுக்கமுள்ளவராய் விளங்கவேண்டியது அத்தியாவசியமாகும். குழந்தைகளை வைத்துப் பாராட்டும் உற்றோரின் குணஒழுக்கங்களும்நேர்மையான தாயிருக்கிறதா வென்பதையும் கவனிக்க வேண்டும். பிறரைப்பற்றிக் கோள்சொல்லலாகாது, தூஷிக்கலாகாது, இழிவுபடுத்தக் கூடாது. சிறிய பொய்சொல்லியும் தம்பிள்ளைகளை ஏமாற்றலாகாது. பிள்ளைகளை எப்போதும் நல்ல சகவாசமுள்ளவராகச் செய்ய வேண்டும். நற்போதனையும், நன்மொழிகளையும், நீதிக்கதைகயும், சொல்லிப் புத்திபுகட்டவேண்டும். மேற்கூறியவாறு குழந்தைகட்குத் தாராள மனப்பான்மை, தருமசிந்தனை, பரோபகாரம் முதலியவைகளையும் கற்பித்து நேர்மைக்கு கொண்டுவரவேண்டும். இவ்வாறு தம் சிறுவர்களை உத்தமர்களாக்கும் பெற்றோர், சமூகத்துக்கும் பேருபகாரம் புரிபவர்களாவார்கள். எல்லாம்வல்ல இறைவன் நம்தாய்மார்கட்கு இத்தகைய போதனைகளை அனுஷ்டித்து நன்மையடைய அருள்புரிவானாக. ஆமீன்!

நஞ்சிறார்கட்கு.

அறிவுச் செல்வம்

அருமைச்சிறுவர்காள்!

ஹஜ்ரத் ஸுலைமான் (அலை.) அவர்களை பற்றி நீங்கள்கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆம்! அவர்கள் யூதவர்க்கத்தின் அரசராகவும், ஒரு பெரிய தீர்க்கதரிசியாகவு மிருந்தார்கள். அவர்களைப்பற்றிய வரலாறுகள் அநேக கிரந்தங்களில் காணப்படுகின்றன.

ஹஜ்ரத் ஸுலைமான் (அலை.) அவர்கள் செல்வப்பேறு பெற்றிருந்த தீர்க்கதரிசி(நபி) யாவார்கள். ஏனெனின், ஆண்டவன் அவர்கட்கு சகல செல்வங்களையும் அளித்திருந்தான். இவர்கள் ஜெரூஸலம் நகரில் (பைத்துல் முகத்தஸில்) வசித்து வந்தனர். இவர்களது மாளிகையில் தங்க வெள்ளிப் பாத்திரங்களும், விதவிதமான அழகிய நவரத்தினதிகளும் ஏராளமாகக் குவிந்து கிடந்தன.

ஹஜ்ரத் ஸுலைமான் (அலை) அவர்கள், தாங்கள் வாழ்ந்துவந்த நகரில் இறைவனை வணங்குவதற்காக வென்று பெரியதோர் உயர்வான 'ஸ்தலம்' ஒன்று கட்டினார்கள். அதுதான் இதுகாலையும் மஸ்ஜிதெ அக்ஸா

என்ற பெயரால் வழங்கப்பெற்று வருகிறது. இது மிகப் புராதனமும் புனிதமுமான ஸ்தலமாகும். இப் பிரசித்திபெற்ற இடத்தை கிறிஸ்துவர், யூதர், முஸ்லிம்கள் ஆகியவர்களும் புண்ணியஸ்தலமென்று ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

அத்துணைக் கீர்த்தியும் சிறப்பும் வாய்ந்த ஹஜ்ரத் ஸுலைமான் (அலை.) அவர்களுடைய வாழ்க்கையினின்று ஒரு சம்பவத்தை ஈண்டு கூறுவாம். அஃதாவது:—

ஹஜ்ரத் ஸுலைமான் (அலை.) அவர்கள் ஆண்டவனை கனவில் கண்டு சம்பாஷித்தார்கள். அதுசமயம் ஆண்டவன் ஸுலைமான் நபியை நோக்கி, 'தங்கட்கு எந்த வஸ்து மிக விருப்பமா யிருக்கின்றதோ அதை கேளுங்கள் அளிக்கின்றேன்' என்று கூறினன். அதற்கு ஹஜ்ரத்ஸுலைமான் (அலை) நபி கூறியதாவது:—'ஆண்டவனே! எனது பிதாவான தாவூத் (அலை.) மிகவும் உத்தமராகவும் வணக்கஸ்தராகவும் பரிசுத்தராகவுமிருந்தார்கள். யானும் அவர்களது ஸ்தானத்தில் உன்னல் நியமிக்கப்பட்டுள்ளேன். அவர்கள் ஆற்றிவந்த கடமையை நிறைவேற்றி வருவதோடு, ராஜ்யத்தையும் நிர்வாகம் செய்வது இலேசான காரியமாய்க்காணப்படவில்லை. யானே மிகவும் பலஹீனமுள்ள ஒரு சாதாரண மனிதன். எனது குடிகளாகவுள்ள ஜனங்களை எவ்வாறு யான் சீர்திருத்தி ஆளுவேன்? அவர்களைப் பாதுகாப்பதற்கும், முன்னேற்ற மடையச் செய்வதற்குமுரிய மார்க்கங்களை யான் உய்த்துணர வேண்டுமல்லவா? ஆதலின் எனது இறைவனே! யான் நன்மை தீமைகளைப் பாகுபடுத்தி யுணர்ந்து நடந்துகொள்வதற்காக எனக்கு 'அறிவு, ஆலோசனை என்னும் பாக்கியத்தை' அளித்தருளும்படி வேண்டுகின்றேன்.'

ஆண்டவன், ஹஜ்ரத் ஸுலைமான் (அலை.) அவர்களின் இவ் வபூர்வ வேண்டுகோளைக் கேட்டுச் சந்தோஷித்துக் கூறியதாவது:— 'எனது தூதரே! தாங்கள் ஆயுள்விருத்தியைப் பற்றிக் கோரவில்லை, சொத்துச் செல்வத்தைக் கேட்கவில்லை; ஆனல் இவையாவற்றினும் சிரேஷ்டமான 'அறிவு ஆலோசனை' என்னும் 'அழியாச்செல்வத்தையே' வேண்டினீர்கள். இதற்காக யான் தங்கள்பால் சந்தோஷப்படுகிறேன், அவ்வாறே தங்கட்கு 'நுண்ணறிவை' அளிக்கின்றேன். எனவே தங்களைப் போன்ற நுண்ணறிவாளரும் யுக்தியாளரும் எவரு மிருக்கமாட்டார். இதனல் தாங்கள் நன்மை தீமைகளை நன்குணர்ந்து நியாய தர்மத்தோடு விளங்கி சீராக ராஜ்ய பரிபாலனம் புரிந்து பிரஜைகட்கு அனுகூலம் புரியக்கடவீர்கள். மேலும் தங்கட்கு அறிவுச் செல்வத்துடன், பொருட் பாக்கியமும், நீண்ட ஆயுளும், என் புறத்தினின்றும் அதிகமாய் அளிக்கின்றேன்''

ஆண்டவன் அருளியபடியே ஹஜ்ரத் ஸுலைமான் (அலை.) அவர்கள் அறிவாற்றலில் உலகெங்கும் பிரக்கியாதிபெற்றுச் சிறந்திருந்தார்கள். அத்துடன் அளவற்ற செல்வமும், தேகபலமும், நீண்டாயுளும் அடையப் பெற்றவர்களாய் விளங்கினர்கள். இறைவன் அவர்கட்கு எல்லாவித பாஷையையும், எல்லா விவேகங்களையும் அளித்தருளியிருந்தான்.

அருமைச்சிறார்காள்! இச்சிறு கதையினின்றுநீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது யாதெனின், ''அறிவு என்னும் செல்வம்'' எத்துணைப் பெரிய மாண்புடையது என்பதே யாகும். ஹஜ்ரத் ஸுலைமான் (அலை.) அவர்கள் ஆண்டவனிடம் ''அறிவு'' ஒன்றை மட்டும் வேண்டிக்கொண்டனர். அதன் சிறப்பால் உலகத்தின் சகலவித பாக்கியங்களையும் அருளப் பெற்றுக்கொண்டார் களன்றே? நபி ஸுலைமான் (அலை.) அவர்கள் ஆண்டவனிடம் அறிவைக் கேட்காமல் பொருளையோ, பொன்னையோ, ஆயுளையோ, பராக்கிரமத்தையோ, வேண்டிக்கொண்டிருந்தால் சர்வ பாக்கியங்களையும் ஒருங்கே அடையப்பெற்றிருப்பார்களா? என்பதை யோசித்துப் பாருங்கள். ஆம்! கேட்டதை மட்டுமேதான் அடையப்பெற்றிருப்பார்கள்.

ஆதலின், சிறுவர்காள்! நீங்கள் உலகின் இதர சுகபோக பாக்கியங்களை அடைய விரும்பும் முன் ''அறிவு'' என்னும் அழியாச் செல்வத்தை யடைந்து அதை அபிவிருத்தி செய்துகொள்ளுங்கள். அறிவு இருந்தால் ஆண்டியும் அரசனகிவிடுவான். அறிவு இன்றேல் மன்னதி மன்னனும் ஒட்டாண்டியாய் விடுவான். எனவே, உங்கள் பாடங்களைக் கவனமாய் படியுங்கள்! ஒவ்வொரு விஷயத்தையும்பற்றி நன்கு ஆலோசனை செய்து பாருங்கள்! நல்ல விஷயங்களை உபாத்தியா

யர்களிட மிருந்து கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்! புத்திசாலிகளுடன் கலந்துறவு பூண்டு நீங்களும் புத்திசாலிகளாகப் பரிணமியுங்கள். "பூவுடன் சேர்ந்த நாரும் மணம் பெறுமல்லவா?" நீங்கள் அறிவு ஆலோசனையுடையவர்களாய்விட்டால், ஆண்டவன் ஸுலைமான் (அலை.) அவர்களுக்கு அருளியதுபோல் உங்கட்கும் சர்வ செல்வ பாக்கியங்களையும் அருள் புரிவான். புத்திசாலி எந்தக் காரியத்தையும் சுலபமாகச் செய்து விடுவான். புத்திசாலிக்கு இயலாததும் கஷ்டமானதும் ஒன்றுங் கிடையாது. அறிவு எனும் பாக்கியமே அழியாச் செல்வமாகும். எனவே, அதையே பெற்று சிறந்து விளங்குவீர்களாக. வஸ்ஸலாம்!

யவ்முந்நபீவிழாக் கொண்டாட்டங்கள்.

ஆம்பூர்.

28-7-31 செவ்வாய்கிழமையன்று ஆம்பூர் மத்ராஸா மஜ்ஹருல் உலூம் காரியதரிசி, மெம்பகள் முதலியோர் முயற்சியால் யவ்முன்னபீ விழா மிகவிமரிசையாய் கொண்டாடப்பட்டது. இவ் வைபவத்திற்கென்று வேலூரிலிருந்து மௌலானா மௌலவி ஹாஜீ கமாலுத்தீன் ஹஜரத், மௌலவிஜியாவுத்தீன் (அமானீ), சென்னை 'ஸைபுல் இஸ்லாம்' ஆசிரியர் மௌல்வி அஹ்மத்ஸயீது சாஹிப் முதலிய உலமாக்களும் இதர கனவான்களும் வந்திருந்தனர். மௌலானா கமாலுத்தீன் ஹஜ்ரத்தவர்களின் அக்கிராசனத்தில், பல மௌலானாக்களும், அறிஞர்களும் உர்தூவிலும், ஆங்கிலத்திலும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது மகாத்மியம், தூயஜீவியம் உலகோபகாரம், லோக சீர்திருத்தம் முதலிய விஷயங்களைப் பற்றி பிரசங்கங்கள் புரிந்தார்கள்.

அன்று மாலை யாவர்க்கும் ஜனுப் அப்துல் லத்தீப் சாஹிபால் விருந்தளிக்கப்பட்டது இரவு 8½ - மணிக்குப் பிறகு மற்றொரு கூட்டம்கூடி, மௌலவி கமாலுத்தீன் ஹஜ்ரத், ஸைபுல்இஸ்லாம் ஆசிரியர் ஆகியோர் அரிய பிரசங்கம்புரிந்தார்கள். சென்னை "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தாரால் வெளியிடப்பட்ட "சமத்துவத்தூதர்" என்னும் புத்தகம் 500-பிரதிகள் ஜனங்கட்குவிநியோகஞ் செய்யப்பட்டன. 11 - மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

அய்யம்பேட்டை.

இவ்வூர் முஸ்லிம் சன்மார்க்க சங்கத்தாரின் பேராதரவில் யவ்முன்னபீயன்று மீலாத் ஜல்ஸா வெகுசிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்றுமாலை அரபி மத்ரஸாவின் முன்னிலையில் அமைக்கப்பட்டிருந்த அழகியபந்தலில் ஏராளமான ஜனங்கள்வந்து குழுமியிருந்தனர். அம் மகாசபைக்கு ஜனுப்மௌலவி ஏ. ஆர். அப்துர்றஹீம் சாஹிப் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள்.

ஜனுப் அக்ராசனர் அவர்களால், நபிகள் பெருமானார்மீது நாம் எங்ஙனம் அன்பு கொள்வது? நம் கடமைகளை எவ்வாறு நிறைவேற்றுவது? ஆகிய விஷயங்களைப் பற்றி உருக்கமான பிரசங்கம் புரியப்பட்டது. பின்னர் மீ. பக்கீர் முஹிய்யத்தீன் சாஹிபவர்களும், யவ்முன்னபீ விழாவை கொண்டாடுவதின் அழகிய முறையைப்பற்றி அரிய பிரசங்கம் புரிந்தனர். பிறகு "சமத்துவத்தூதர்" என்னும் நூல் ஏராளமாக ஜனங்கட்கு விநியோகஞ்செய்யப்பட்டது.

கூத்தாநல்லூர்.

இவ்வூர் ஈதெமீலாத நபீ சபையாரால் நபிகள்நாயகம் (ஸல்.) பிறந்ததின விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. ரபீ உல் அவ்வல்மீ 2-ந் தேதிமுதல் 12-ந் தேதிவரை தினமும் மக்ரிபுக்குப்பின் நபிகள் பிரான் (ஸல்.) அவர்களின் திருச்சரிதை மௌலவி எஸ். முஹம்மத் காஸீம் சாஹிப் அவர்களால் உபந்நியசிக்கப்பட்டுவந்தது. 27-7.31 திங்கட்கிழமையன்று முஸ்லிம்கட்கு பெரியதோர் விருந்துநடத்தப்பட்டது.

யவ்முன்னபீ தினக்கொண்டாட்டத்திற்கென்று "ஈதுகாஹ்" ஸ்தலம் வனப்புற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அறிக்கையின்

படி அன்று ஊர்கடைகள் மூடப்பட்டு வேலை நிறுத்தம் செய்யப்பட்டது. செவ்வாய்க் கிழமையன்று "மன்பஉல் உலா" மாணவர்களால் கீதங்களோடு ஊர்வலம் நடத்தப்பட்டு, நகர்வலம்வந்து 4 மணிக்குப் பள்ளி வாசலில் கூடினர். அஸர் தொழுகைக்குப் பின் மகாஜனங்கள் ஈதுகாஹ் வந்து சேர்ந்தனர். ஏராளமான பொதுஜனங்களும் கனவான்களும் அறிஞர்களும் குழுமி யிருந்தனர்.

5-மணிக்கு நடவடிக்கை ஆரம்பமானது. ஜனப் ஹாஜி அ. ம. அப்துல்லா சாஹிப் அவர்கள் அக்கிராசனம் வகித்தனர். இவ்வூர் ஈதெமீலாத் நபீ சபை சென்ற 15 வருடங்களாக இச்சேவையை இனிதுபுரிந்துவந்ததைப்பற்றி பலசங்கத்தாராலும் ஜனங்களாலும் பாராட்டி கவிகளும் பத்திரங்களும் படிக்கப்பட்டன.

பின்னர் ஹாஜி மௌலவி ச. அ. முஹம்மத் அலி சாஹிப் (ஹி. இ. காரியதரிசி) அவர்கள் சபையின் ஆழ்ந்த நோக்கம், நாயகம் (ஸல்.) அவர்களின் உலக உபகாரங்கள், குணதிசயங்கள் முதலிய விஷயங்கள் பற்றி அரிய சொற்பொழி வாற்றினர்கள்.

பின்பு, நமது "சமத்துவத்தூதர்" என்னும் நூல் ஏராளமாக விநியோகஞ் செய்யப்பட்டது. இந்நூலின் முக்கிய பகுதிகளை சபையோர்க்கு ஜனப் அ. அ. முஹம்மத் ஷரீபு சாஹிப் வாசித்துக் காட்டினர்கள். சே. ப. முஹம்மத் அலிசாஹிபவர்களாலும் இனிது பிரசங்கிக்கப்பட்ட பிறகு யாவருக்கும் வந்தனம் கூறப்பெற்று கூட்டம் இனிது கலைந்தது.

காயல் பட்டணம்.

28-7-31 செவ்வாயன்று இவ்வூர் மஹ்லறதல் காதிரிய்யா என்னும் ஸ்தாபனத்தில் ஆயிரக்கணக்கான முஸ்லிம்களின் மஜ்லிஸ் கூடிற்று. "பர்ஸன்ஜீ" மௌலிது ஷரீபு அல்லாமாமுப்திநஹ்வீ செய்யிது அஹ்மதுலெப்பை ஆலிம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு ஓதப்பட்டது.

மக்ரிக்குப்பின் யவ்முன்னபீ விழாவை முன்னிட்டு பொதுக்கூட்டம் கூடிற்று. ஹாஜி மு. கா. முஹம்மது ஹஸனு லெப்பை ஆலிம் அக்கிராசனம் வகித்தனர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் திருவாழ்க்கை, பரிசுத்த ஜீவியம், குணதிசயம் சன்மார்க்கப் பிரசாரம் உலோபகாரம் முதலியவற்றைப்பற்றி பல மௌலானுக்களும், ஆலிம் அறிஞர்களும் அரிய இனிய பிரசங்கம் புரிந்தனர். இரவு 11.மணிக்கு சபை இனிது கலைந்தது.

கண்டியூர்.

இவ்வூர் முஸ்லிம் வாலிப சங்கத்தாரால் 28-7-31 செவ்வாயன்று ஹமீதியா ரைஸ்மில் பில்டிங் மைதானத்தில், ஜனப் எஸ். எம். முஹம்மத் இப்ராஹீம் அட்வகேட் தலைமையில் "யவ்முன்னபி" விழா விமரிசையாக நடைபெற்றது. பல அறிஞரும் எஸ். சுயம்பிரகாசம் பி ஏ. ஆகியவரும் நபியின் திருஜீவியத்தைப்பற்றி பிரசங்கித்தனர்.

மதுரை.

இவ்வூர் வைகைநதி மண்டபத்துக்கருகே டவுன் காஜீ மௌலவி செய்யித் அம்ஜத்அஹ்மத் இப்ராஹீம் சாஹிப் தலைமையில் யவ்முன்னபீ விழாவை முன்னிட்டு ஒரு பொதுக் கூட்டம்கூடி, பேஷ் இமாம் ஜனப் அப்துல் ஹமீத்சாஹிப் கிராஅத் ஓதியபின், மௌலவி செய்யத் அஹ்மத் சாஹிப், மௌலவி முஹம்மத்கனீ சாஹிப் ஆகியோரால் அரிய பிரசங்கள் புரியப்பட்டு 8 மணிக்கு இனிது கலைந்தது.

திருவண்ணமலை.

இவ்வூர் பெரிய மஸ்ஜிதில், ரபீஉல்அவ்வல் 1-ந் தேதி முதல் 11-ந் தேதி வரை பேஷ் இமாம் மௌலவி முஹம்மத் உஸ்மான் பஹரீ சாஹிபால் உர்துவியார் கிதாபு தொடர்ந்து வாசித்து தமிழில் உபந்நியாசிக்கப்பட்டு வந்தது.

27-7-31 திங்கள்கிழமை அம்மஸ்ஜிதில் உள்ளூர் வெளியூர் முஸ்லிம்கட்கு (சுமார் 5000 ம் பேருக்கு) பொது விருந்து அளிக்கப்பட்டது.

திங்கள்கிழமை மாலை (நபி ஜனன இரவு) அம்மஸ்ஜித் ஹாலில் 'வாலிப முஸ்லிம் சகங்கத்தாரால் பெரிய பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. டிப்டி கலெக்டர் தமீஜுத்தீன் சாஹிப் அக்கிராசனம் வகித்தார். மௌலவி முஹம்மத் உஸ்மான் சாஹிப், ஹுஸைனி பீரான் சாஹிப் ஆகியவர்கள் நாயகத்தின் ஜீவிய சற்குணதிசயங்களைப்பற்றி பிரசங்கம் புரிந்தனர். சங்கத்தினரும் கஸீதாக்கள் படித்த பிறகு தேனீர் வழங்கப்பட்டு 'நாயகசரிதை'கள் விநியோகித்தபின் இனிது கலைந்தது.

எக்கு குடி.

இவ்வூர் மத்ரஸா அல்மனுருல் மகாஸிதில் யவ்முன்னபீயன்று, மௌலவி எல். எம். முஹம்மத் ஷரீப் ஆலிம் சாஹிப் தலைமையில் விழா நடைபெற்றது. அக்ராசனரின் உருக்கமான ஆரம்பப் பிரசங்கத்துக்குப் பிறகு, ஒ. எஸ். எம். உதுமான் சாஹிபால் 'சமத்துவத்தூர்'' என்னும் விஷயம் பற்றி பிரசங்கம் புரியப்பட்டபின் சிற்றுண்டி வழங்கி கூட்டம் இனிது கலைவுற்றது.

கிள்ளான்.

ஜூலைமாதம் 24-ந் தேதி ஜனுப் U. K. அப்துல் காதிர் ஜே. பி. தலைமையில் ஒரு கூட்டம் கூடி ஆலோசித்து முடிவுசெய்யப்பட்டபடி யவ்முன்னபீ விழாகொண்டாடப்பட்டது.

ரபீஉல் அவ்வல் மாத 1-ந் தேதிமுதல் 11 நாள்வரையில் கிள்ளான் இந்திய முஸ்லிம்கள் முயற்சியால், பல கனவான்களின் உதவியை கொண்டு மவுலுஷரீபு ஓதிவரப்பட்டது. யவ முன்னபீ யன்று கடைகள் மூடபட்டன. அன்றும் மாலை 5-மணிக்கு மௌலூது ஓதியபின் எஸ். எ. முஹம்மத் காசிம் அவர்களால் நாயகத்தின் திருச்சரிதை பற்றி பிரசங்கிக்கப்பட்டது. பிறகு 9-30 மணிக்கும் கூட்டம் கூடியது. இதில் ஷெய்குல் இஸ்லாம் துங்கு முஹம்மத் அவர்கள் மலாய் பாஷையில் பிரசங்கம் புரிந்தனர். நமது நாயகத்தைப்பற்றி மலாயில் பிரசங்கம் புரியப்பட்டது இதுவே முதல் முறையாம். பிறகு, சுமார் 5000 பேர்கட்கு உணவு அளிக்கப்பட்டது. ஹிந்துக்களுக்காகவும் பிரத்தியேகமான ஏற்பாட்டில் விருந்துபசாரம் புரியப்பட்டது. இங்கு இருவருடங்களாக சவர்ன்மெண்டாரும் நபிஜனன தினத்தில் விடுமுறை யளித்துவருகின்றனர்.

ஆசிரியர் குறிப்பு.

மீலாத் ஷரீப் கொண்டாட்டம்:— இவ்வாண்டு மீலாத் ஷரீப் கொண்டாட்டம் உலகின் பலவிடங்களிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. நாம் இப்பத்திரிகை வாயிலாய்க் கோரிக்கொண்டபடி தென்னாட்டு முஸ்லிம்கள் இந்தப் புனித தினத்தைப் பக்தி சிரத்தையுடன் நல்ல முறையில் கொண்டாடியதை யறியச் சந்தோஷப்படுகிறோம். நம் சங்கத்தாரால் வெளியிடப்பட்ட "சமத்துவதூதர்'' என்ற நாயக மகாத்மியப்பிரசுரம் அத்தினத்தன்று கூடிய பெரிய பொதுக்கூட்டங்களில் படிக்கப்பட்ட தன்றி ஏராளமாக வினியோகமுஞ் செய்யபட்டது. நம்மிடமிருந்து இப்புஸ்தகத்தை வரவழைத்து வினியோகஞ்செய்த செய்தி, கணக்கு, விபரம் முதலியன அடுத்த இதழில் வெளியிடுவோம்.

வட்டமேஜை மகாநாடு :—வட்டமேஜை மகாநாட்டைப் பகிஷ்கரித்திருந்த காங்கிரஸ் கக்ஷியினரையும் அதில் கலந்துகொள்ளச் செய்யவேண்டு மென்ற நோக்கத்துடன், ஜூன் மதாத்தில் கூடவிருந்த மகாநாட்டுக் கூட்டத்தை ஸெப்டம்பர் மாதத்திற்கு ஒத்திப்போட்டுச் சமரச பேச்சுகள் பேசப்பட்டு வந்தும், காந்தி இர்வின் ஒப்பந்த விஷயங்களில் காந்திஜீக்கும், அரசாங்கத்தாருக்கும் சில தகரார்கள் நடந்துகொண்டிருப்பதால் தற்காலீகமாக காந்திஜீயின் பிரயாணம் தவக்கத்திலிருக்கிறது.

காந்திஜீ சில்லரை விஷயங்களுக்காகப் பெரிய தவறு செய்துவிட்டார் என்பது பொதுவான அபிப்பிராயமாகும். காங்கிரஸ்கக்ஷியினர் வட்டமேஜை மகாநாட்டில் கலந்துகொள்ளுகின்றனரோ இல்லையோ மகாநாடு நடைபெறப் போவதென்பது நிச்சயம். ஆனல் இப்பால் காங்கிரஸ் மகாநாட்டின் முடிவுகளை ஆக்ஷேபிக்காதிருக்கவும், மறுபடியும் நாட்டில்குழப்பங்கள் தோன்ருதிருக்கவும் காங்கிரஸ் மகாநாட்டில் கலந்துகொள்வது உசிதமெனக் கருதுகின்றோம். காந்திஜி லண்டன் செல்வது இன்னும் சாத்தியமாகலாம். அவர் இப்பொழுதுராஜப்பிரதிநிதியை மறுபடியும் பேட்டிகாணச் செல்கிருர். முஸ்லிம் தலைவர்களான மௌலானுஷௌகத்அலீ முதலியோரும் ஹிந்து நண்பர்களி லனேகரும் சென்ற பதினைந்தாம்தேதியே மகாட்டுக்குப் புறப்பட்டு சென்றுவிட்டனர். பாக்கியுள்ள பிரதிநிதிகளும் கூடியசிக்கிரம் புறப்பட்டு விடுவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

சந்தா நண்பர்களுக்கு

கடந்த ஆண்டில் சந்தாதாரராயிருந்து நமது மாசிகையை அன்போடு பாராட்டி வந்த கனவான்கள் நடைபெறும் 1931-ம் வருஷத்திற்குரிய சந்தாத் தொகையை முன்பணமாக அனுப்பித்தந்து, இஸ்லாம் மார்க்கத்திற்கும், சமூகத்திற்கும் இணையிலா தொண்டாற்றி வரும் நமது 'ஹிபாஜத்துல் இஸ்லாம்' மாசிகைக்கு தம் குன்ரு ஊக்கத்துடன் போதிய ஆதரவளித்து தினே தினே அபிவிருத்திக்குக் கொண்டு வருவார்களென எதிர் பார்க்கின்ரேம்.

1931 ஜனவரி முதல் V. P. முதலியன தபாலாபீஸில் 3 நாளைக்கு மேல் வைத்துக் கொள்ளப் படமாட்டாதென போஸ்ட் ஆபீஸார் அறிக்கை வெளியிட்டிருப்பதால், நண்பர்கள் V. P. க்கு ஆர்டர் செய்யாமல் சந்தாவை முன்பணமாக அனுப்பி பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளும்படி விரும்புகின்ரேம்.

நமது மாசிகைக்கு ஏற்படுத்தப் பெற்றுள்ள சந்தாத்தொகை மிகவும் சொற்பமா யிருப்பதால் அதனை மணியார்டர் அனுப்புவது வெளிதேச நண்பர்களுக்கு சிரமமாக யிருக்கும்; ஆதலின், நமது சந்தா நண்பர்களாய,

சிங்கப்பூர் வாசிகள் ஆங்கு "77, மார்க்கட் ஸ்ட்ரீட் மெஸ்ஸர்ஸ் A. M. அப்துல்லா சாஹிபு & Co." அவர்களிடமும்,

பேரேட் மலாய் எஸ்டேட் வாசிகள் "கிள்ளானிலுள்ள ஜனப் K. A. பக்கீர் முஹம்மத் ஸாஹிப்" அவர்களிடமும்,

ரங்கூன் வாசிகள் "385, மங்கமாரி ஸ்ட்ரீட் சுகரசம் & Co. தர்கா மஸ்ஜித்பேஷ் இமாம் மௌல்வி முஹம்மது யாகூப்சாஹிப்" அவர்களிடமும்,

கொளும்பு வாசிகள், 220-ஸகிண்ட் க்ராஸ் ஸ்ட்ரீட் டிலுள்ள மெஸர்ஸ் A. M K ஆலிம் ஸாஹிப் & Co. அவர்களிடமும் அவரவர்கள் சந்தாத் தொகையை செலுத்துமாறு கோருகின்ரேம்.

அவ்வாறே புதிதாகச் சேரும் அன்பர்களும் செய்வார்களென எதிர் பார்க்கின்ரேம்.

"மானேஜர்"

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

48, அங்கப்பன் தெரு, மதருஸ், G. T.

நமது பத்திரிகை கிடைக்கு மிடங்கள்:—

சிங்கப்பூர்

மெஸர்ஸ் **A. M.** அப்துல்லா சாஹிப் **& Co,**
77, மார்கட் ஸ்டிரீட்.

மெஸர்ஸ் பிரிட்டிஷ் **&** அமெரிக்கன் நியூஸ் கம்பெனி,
18, பாட்டரி ரோடு.

கோலாலம்பூர்

மெஸர்ஸ் **M. M.** துல்பகீர் கம்பெனி, மார்கட் ஸ்டிரீட்.

கிள்ளான்

ஜனப் ஹாஜீ **K. O.** முஹம்மது இப்ருஹீம் சாஹிப்,
31, ரம்பா ஸ்டிரீட்.

மெஸர்ஸ் **K. A.** பக்கீர் முஹம்மத் **& Co.,**
P. O. Box. 52.

பினங்

ஜனப் **V. O.** ஹஸன் முஹம்மது அவர்கள்,
34, கிட்டாரோடு.

ரங்கூன்

ஜனப் மவ்லவீ முஹம்மத் யாகூப் சாஹிப்
சுகாசம் & Co, 385, மங்மாரி வீதி.

கொழும்பு

ஜனப் **A. M. K.** ஆலிம் சாஹிப்,
220, **2nd** கிராஸ் ஸ்டிரீட், பெட்டா.

மதராஸ்

மெஸர்ஸ் **A. M. K.** ஹாஜி முஹம்மது ஷரீப்,
மரைக்காயர் **&** பிரதர்,
225, அங்கப்ப நாய்க்கன் தெரு.

ஜனப் மவ்லவீ **M.** ஸுல்தான் அஹ்மத் ஸாஹிபு
1/222 அங்கப்ப நாய்க்கன் தெரு.

மெஸர்ஸ் ஹாஜி **M. M.** காதர்பகீர்ருவுத்தர் & கம்பெனி,
21, சைனபஜார் ரோடு.

மெஸர்ஸ் **M. A.** காதர்பாவா **&** பிரதர்ஸ்,
206, அங்கப்ப நாய்க்கன் தெரு.

Printed at the Kesari Printing Works, & Edited & Published by Moulvi A.R Abdur Rahim Sabeb
Manager, Hifazath-ul-Islam, 48, Angappa Naick St., G.T., Madras.